www.padippakam.com

# புதிய கோடாங்கி



மார்ச் 2002 மலர் 1 இதழ் [illegible] விலை ரூ.15

படிப்பகம்

www.padippakam.com

புதிய

# கோடாங்கி

(மாத இதழ்)

## சந்தா விவரம்

| | |
|---|---|
| தனி இதழ் | 15.00 |
| ஆண்டுக் கட்டணம் | 150.00 |
| வாழ்நாள் கட்டணம் | 1,000.00 |

## விளம்பரக் கட்டணம்

| | |
|---|---|
| அரைப் பக்கம் | 5,000.00 |
| முழுப் பக்கம் | 10,000.00 |
| பின் அட்டை | 20,000.00 |

தொடர்பு முகவரி :
புதிய கோடாங்கி
எம்.ஐ.ஜி. 518, என்.எச்.1,
7 (பஎண்.15), இளந்திரையன் தெரு,
மறைமலை நகர் - 603 209. காஞ்சிபுரம் மாவட்டம்.
மின் அஞ்சல் : kodangi_ajj@yahoo.com

படிப்பகம்

www.padippakam.com

# புதிய கோடாங்கி

## மார்ச் 2002

**கோ**டாங்கியைத் தொடர்ந்து புதிய கோடாங்கி மாத இதழாக வெளிவரத் துவங்கி ஓராண்டு காலம் நிறைவுற்றிருக்கிறது. இதழை பரவலாகச் சென்று சேர்ப்பதில் ஓரளவு வெற்றியே. தலித் அனுபவங்களை, படைப்பாக்கங்களை கருத்தியலை முன்வைப்பதில் தலித் மற்றும் தலித் அல்லாதோர் பங்களிப்பு தொடர்ந்து வந்த வண்ணம் உள்ளது. செழுமையான கோடாங்கி தடத்தில் புதிய வரவுகளும் சிறப்புக்குரியனவாக அமைந்தன. அனைத்து படைப்பாளர்கள் / பங்கேற்பாளர்கள் / வாசகர்களுக்கு உளமாற நன்றி தெரிவிக்கிறது புதிய கோடாங்கி.

பொருளாதாரச் சிக்கலில் இரையாகாது குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் கொண்டுவர முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வரும் வேளையில் தொடர்ந்த ஒத்துழைப்புக்காக அனைவருக்கும் மீண்டும் மீண்டும் வேண்டுகோள் வைக்கப்படுகிறது. செவிசாய்ப்பீராக.

இயன்றவரை கருத்தியலையும், பிரச்சினைகளையும் முன்வைத்தே இதழ் நடத்தப்படுகிறது. தனிநபர் தாக்குதல் / துதி / காழ்ப்புக்கு இடம் அளிக்காத வகையில் கவனமாக வெட்டப்படுகின்றன - அவை தலைதூக்கும் பட்சத்தில்.

புதிய கோடாங்கி அதன் நிறை/குறைகளோடு அதிகமான வரவேற்பு பெற்றுவருவது மகிழ்ச்சிக்குரியது. இந்த ஓராண்டு காலம் புதிய கோடாங்கியில் வெளிவந்த சிறப்புக்குரிய படைப்புக்களை ஆங்கிலத்தில் மொழியாக்கம் செய்து ஆண்டு இதழாகக் கொண்டு வரும் எண்ணமுள்ளது. அது நிறைவேறும். புதிய கோடாங்கி, தொடர்ந்து ஒடுக்கப்பட்டோர், நலிவுற்றோர், பெண்ணிய இயக்கமாகத் தன்னை முன்னிறுத்தும். பல்வேறு நாடுகளில் வசித்து வரும் தமிழர்களின் ஆதரவுக்கும் நன்றி.

படிப்பகம்

www.padippakam.com

நன்றி. நன்றி. நன்றி.

கடந்தசில வாரங்களாக தலித் பள்ளிகள் குறித்த செய்திகள் தொலைக்காட்சி மற்றும் செய்தித்தாள்களில் வந்தவண்ணம் உள்ளதை அறிவீர்கள்.

தலித்களுக்கான தனிப் பள்ளிகள் ஆங்கிலேயர் காலத்தில் துவங்கப்பட்டன - அன்றைய காலச்சூழல் தேவை கருதி. பின்னால் பழங்குடியினருக்கும் மலைப்பகுதிகளில் பள்ளிகள் துவங்கப்பட்டன. சுமார் ஆயிரத்து ஐநூறு பள்ளிகள் அவ்வகையில் இன்னமும் இயங்கிக் கொண்டிருக்கின்றன. மாணவ / மாணவிகளுக்கான விடுதிகளும் துவங்கப்பட்டு நடத்தப்படுகின்றன. கள்ளர் - சீர்மரபினருக்கும் தனிப்பள்ளிகளும், பிற்படுத்தப்பட்டவர் - மிகவும் பிற்படுத்தப்பட்டவருக்கு விடுதிகளும் நடத்தப்பட்டு வருகின்றன. இந்நிலையில் இந்தப்பள்ளிகள் - விடுதிகளின் செயல்பாட்டை ஆய்வு செய்த மாநில திட்டக்குழு ஆதி திராவிட பழங்குடியினருக்கான தனிப்பள்ளிகளை பொது அரசுப் பள்ளிகளோடு இணைத்துவிட முன்மொழிந்து அது அரசின் ஆய்விலுள்ளது. இந்நிலையில் பள்ளி ஆசிரியர்கள் இந்த இணைப்பு தேவையில்லாதது என ஆர்ப்பாட்டம் நடத்தி வருகிறார்கள்.

இணைப்பை முன்மொழிபவர்கள் எதிர்ப்பவர்கள் ஆகியோரை விசாரிப்புக்குட்படுத்துவோம்.

முன்மொழிதலுக்கான காரணங்கள்: தமிழக அரசே தீண்டாமையைக் கடைப்பிடித்து தனிப்பள்ளிகள் நடத்துகின்றது என்ற குற்றச்சாட்டு எழுகிறதாம். அடுத்து கல்வித்தரம் குறையக் காரணமாகிவிட்டதாம்.

இடையில் 'ஹிந்து' புகுந்து "எட்டாயிரத்தி சொச்ச ஆதி-திராவிட ஆசிரியர்கள் - அவர்களுக்காகச் செலவிடப்படுவது ஐம்பது கோடி ரூபாய்" என்று கட்டம் கட்டி எழுதி ஒருங்கிணைப்பின் காரணத்தைச் சொன்னது. இந்தியன் எக்ஸ்பிரஸ் நாளிதழ் 'யாருக்கு வந்த விருந்தோ' பாணியில் ஏன் இணையக்கூடாது என்பதற்கு வலுவானக் காரணங்கள் எதுவும் சொல்லவில்லை என்று மறைமுகமாக ஒருங்கிணைப்புத் தந்திரத்தை முன்மொழிந்தது.

பள்ளிகளை ஒருங்கிணைக்க முடியுமா முடியாதா, இரண்டிலொன்று சொல்லுங்கள் என்ற 'மற்ற' பத்திரிக்கைகள் அதீத ஆர்வம் காட்டி நம்மைப் பயமுறுத்துகின்றன.

தலித் ஆசிரியர்கள், விடுதி காப்பாளர்கள் தலித் மாணவர்களையும், அவர்களது பெற்றோர்களையும் ஒரு பக்கம் சுரண்டியவாறு உள்ளனர்.

இரண்டு பக்கங்களிலும் குழிபறிக்கப்பட்டுள்ளது.

பி.ஜே.பி.யுடன் கள்ள உறவில் தலித் அரசியல். சனாதன இலக்கியப் பத்திரிக்கைகளில் தலித்துக்களின் கலர் ஃபோட்டோ. சங்கரமடம் தலித் விடுதிகளை எடுத்து நட்த்துவதில் காட்டும் ஆர்வம்.

இந்நிலையில் ஒருங்கிணைப்பைப் பற்றி நாம் கொண்டுள்ள கருத்து இதுதான்.

முதலில், பிற சாதியினர் தங்கள் மேட்டிமைகளைக் களையட்டும். கல்வித்தரம் என்பது சாதி காப்பாற்றும் என்றால் தரமே வேண்டாம். கல்வித்தரம் என்பது மார்க்குகள் அதைத் தொடர்ந்த சில சில்லறை வாய்ப்புகள் என்று மட்டுமே நீடிக்கும் நிலையில் சமூக இணக்கம் என்பது கனவுதான். சமூக இணக்கத்துக்கான அறிகுறிகள் அதிகாரப் பகிர்விலிருந்தே தொடங்கும் என்பதை மீண்டும் வலியுறுத்துவோம்.

www.padippakam.com

## உள்ளே .......


| | | |
|---|---|---|
| | | பக்க எண் |
| என் கதை ........................................ | கே. டானியல் | 4 |
| நுனிப்புல் ........................................ | சிவகாமி | 12 |
| தேர் ........................................ | அபிமானி | 18 |
| தலைமுறை பற்றிய குறும்படம் ........................................ | பாலை நிலவன் | 25 |
| இடைவார்ப்பட்டை சமயன் ........................................ | ப்ரதிபா ஜெயச்சந்திரன் | 26 |
| தன் வரலாறு - வல்லிக்கண்ணனின் வாழ்க்கைச் சுவடுகள் ... | பா. செயப்பிரகாசம் | 29 |
| தனல் கொடிப்பூக்கள் - நூல் விமர்சனம் ........................ | ப்ரதிபா ஜெயச்சந்திரன் | 35 |
| இசையில்லாத இலையில்லை - நூல் விமர்சனம் .......... | ப்ரதிபா ஜெயச்சந்திரன் | 36 |
| காசுக்காக அல்ல ........................................ | அஸ்வகோஷ் | 37 |
| ஷோபாசக்தியுடன் நேர்காணல் ............ | அயன்புரம் ராஜேந்திரன் நிலகண்டன் | 42 |
| பட்டுப்பூச்சிகள் வருகைக்காக ........................................ | பி. வசந்ததீபன் | 49 |
| கண்ணுக்கெட்டியவரை கவிதைத் தூறல் ........................ | ப்ரதிபா ஜெயச்சந்திரன் | 50 |
| பெண்களும் - மநுவும் (அ) பெண்கள் - இதழ்கள் பற்றி ............ | நிகழ் அய்க்கண் | 51 |
| முகத்தில் முகம் ........................................ | | 57 |
| அயோத்திதாசர் சிந்தனைகள் ........................................ | | 62 |
| அழுக்கு விடியல் ........................................ | அபிமானி | 64 |


படிப்பகம்

www.padippakam.com

# என் கதை

- கே. டானியல்



எழுத்து எனக்குத் தொழில் அல்ல, பொழுதுபோக்குமல்ல. ஏறக்குறைய நான் எழுதத் தொடங்கிய காலத்தை 35 வருடங்களுக்கு உட்படுத்தலாம். இந்த 35 வருடகால எல்லைக்குள் சுமார் 10 ஆண்டு காலத்தைச் சிறுசிறு மன ஆசைகளுக்காகவும், விளம்பர மோகத்துக்காகவும் இவைகளோடு ஒட்டிய காரண காரியங்களுக்காகவும் செலவு செய்தேன் என்று சொல்வதில் வெட்கப்பட வேண்டியதில்லை.

கிராமத்தில் பிறந்து கிராமத்திலேயே வாழ்ந்த எனக்கு கிராமப்புறங்களையும், கிராமப்புற மக்களையும் சந்தித்துப் பேசிப் பழகிக் கொள்ளும் வாய்ப்பு அதிகம் கிடைத்தது. அத்துடன் சுமார் 20 வயது வரையிலே நான் ஏற்றுக் கொண்ட அரசியல் வேலைகள், கிராமப்புறங்களுக்கு இன்றியமையாததாயும் இருந்தமையால் எனது பெரும்பகுதி கவனத்தையெல்லாம் அதில் வைத்திருக்க வேண்டியதாயிற்று. அது கிராமப்புறங்களில் நண்பர்களையும் தேடிக்கொள்ள உதவியாகவும் இருந்தது.

கிராமப்புறத்து மக்களிடம் கற்றுக்கொள்வதற்கு எவ்வளவோ இருந்தன. அரசியலைப் பொதுமக்களிடமிருந்தே கற்றுக்கொள்ளவும், அவர்களிடமே அவைகளைப் பரிசோதனை செய்து சரியானவைகளை ஏற்று, தவறானவைகளை நிராகரித்தும்தான் அரசியல் அனுபவங்களைப் பெறவும் வேண்டும். அன்று தேசியரீதியாகவும், சர்வதேசியரீதியாகவும் சரியான அரசியல் போதனைகளைப் பெற்றுக்கொள்வதற்கான தமிழ் நூல்கள் மிகவும் அருந்தலாகவே இருந்தது. இந்த நிலைமை, நாட்டையும், மக்களையும், கிராமங்களையும் படித்து அதன்



படிப்பகம்

www.padippakam.com

மூலம் பெற்றுக்கொண்ட அனுபவங்களையே அரசியல் முதலீடாகக் கொள்ள எனக்கு ஏற்பட்ட வாய்ப்பு, என்னை மேலும் மேலும் கிராமப்புறங்களை ஊடுருவிப் பல்வேறுபட்ட அனுபவங்களை மேலும் மேலும் சம்பாதித்துக் கொள்வதற்கு உற்சாகத்தைத் தந்தது எனலாம்.

இன்று உலகின் பல பகுதிகளின் அரசியல் - இயக்க அனுபவங்கள் ஆயிரக்கணக்கில் நூல்வடிவு பெற்றிருக்கின்றன. இவைகளையெல்லாம் அரை அவியலாக விழுங்கிவிட்டு, இவைகள் யாவும் அந்தந்த நாட்டு நிலைமைக்கும், பிரதேச நிலைமைகளுக்கும், உற்பத்திமுறை அடிப்படை உறவுகளின் தன்மைக்கேற்பவும் நடைமுறைப் படுத்தப்பட்டன என்பதனை மறந்து அவைகளை அப்படி அப்படியே நம்து நாட்டின் அரசியலாக நிர்ணயித்துக்கொண்டு சாதாரண மக்களைப் பலவிதமான தத்துவ விசாரங்களுக்கு உட் படுத்தும் காலம் போலல்ல எனது அரசியல் பிரவேசக்காலம்.

நகர்ப்புற மனிதனின் வாழ்க்கைக்கும், கிராமப்புற மனிதனின் வாழ்க்கைக்கும் பல்வேறு விதங்களிலான வேறுபாடுகள் உண்டு. நகர்ப்புற மனிதர்களின் வாழ்க்கையை வகைக்கு ஒன்றோ இரண்டோ விதங்களுக்குள் அடக்கிவிடலாம். ஆனால் கிராமப்புற மனிதர்களின் வாழ்க்கை யைக் குறிப்பிட்ட வகைகளுக்கு உட்படுத்தி விடுவது கடினமான காரியமாகும்.

அன்றாட வயிற்றுப்பாட்டுக்காக அவன் எடுக்கும் வழிமுறைகளைப் பலவிதங்களுக் குள்ளும், படுத்தெழும்பும் ‘குடிசைக்காக அவன்படும் அவஸ்தைகளையும், குந்தியிருக்கும் நிலத்திற்காகவும், பலவிதங்களில் அவனுக்கு மேலாக இருக்கும் வழிவழிவந்த ஆதிக்க அடக்கு முறைகளுக்குள் அவன் அழுந்தித் தவிக்கும் விதங்களையும், இன்னும் வாழ்க்கையோடு ஒட்டிய ஏனையவைகளுக்காக அவன்படும் அவஸ்தைகளையும் வகைக்குப் பலநூறுகளாகப் பார்க்க முடியும். இவைகளில் ஒவ்வொன்றையும் தனித்தனியாகவே கிரகித்து, இந்த வாழ்க்கைக் கான காரணகாரியங்களைக் காணமுயல்வதும், கண்டவற்றை அவர்களிடமே ஒழுங்குப்படுத்திக் கூறுவதும் இலேசுப்பட்ட ஒன்றல்ல என்பது எனது அனுபவங்கள் தந்த உண்மையாகும்.

பள்ளிப் படிப்பை 5-ம் வகுப்புடன் முடித்துக்கொண்டிருந்த எனக்கு அதற்கு உட்பட்ட அளவுக்கு எழுதவும் பேசவுமே தெரிந்திருந்தது. எந்தவித வேற்றுமொழியையும் படிக்க, அல்லது குறைந்தபட்சம் பேசிக்கொள்ளவாவது எனக்கு ஆர்வம் பிறக்கவில்லை. இதற்கான காரணத்தைச் சுருக்கத்தில் கூறிவிடவேண்டுமானால், எனது குடும்பத்தின் வறுமைநிலை. இன்னும் கூறப் போனால் நாளொன்றுக்கு ஒரு நேரச்சோற்றுக்கே வழியில்லாத நிலை, சாதி அடக்குமுறைகளுக்கு உட்பட்டு பட்ட அவஸ்தைகள். இவைகளுக்காக ஏங்கி ஏங்கிச் செத்துக்கொண்டிருக்கும் நேரத்தைத் தவிர மிகுதி நேரம் கிடைக்கவில்லை என்றே கூறலாம்.

எனது குடும்பத் தொழில் சீலை வெளுப்பு. இதைச்சற்று நேராகச் சொன்னால் சாதியில் நான் வண்ணான். அதைவிடவும் ‘தமிழர்’ களுடைய அழகு தமிழில் குறிப்பிடுவதானால் ‘கட்டாடி’ என்று சுருக்கி விடலாம். இதை ஏன் குறிப்பாக நான் கூறவேண்டும்? சமூக அடக்கு முறைக்குள் மிகவும் கீழ்ப்படியில் இருக்கும் இந்தக் கட்டாடிகள் எவ்வளவு தூரத்திற்குச் சாதியின் கொடுமையை அனுபவித்திருக்க முடியும் என்பதனை எனது வாசகர்களை அறியவைப்பதற் காகவும், ‘இந்தாள் நெடுகச் சாதியைத் தான் எழுதுது. ஏன் இப்படிச் செய்யுது?’ என்று என்மீது கேலிக்கீதம் பாடுபவர்களுக்கு நான் ஏன் இப்படி எழுதுகிறேன் என்பதை இவர்கள் சற்றுத் தொட்டுப் பார்க்க வேண்டும் என்பதற்காகவுமே யாகும்.

‘நீர் சொல்லுற விஷயம் முந்தி இருக்கேல்லை எண்டு நாங்கள் சொல்லேல்லை. இப்ப தமிழருக்கை அதொண்டுமில்லை’ என்று ஒருவிதமான நசியல் நியாயம் சொல்லுபவர்கள் தான், நான் வாழும் யாழ்ப்பாணத்தில் பெரும் பான்மையினராக இருக்கின்றனர். இந்தப் பெரும் பான்மையினரில் ஒருவர் தன்னும் தள்ளுபடி இல்லாமல் எல்லோர் வீட்டிலும் அன்றாட வாழ்க்கையோடு சாதி சங்கமமாகி நிற்பதைப் பல



படிப்பகம்

www.padippakam.com

உதாரணங்கள் மூலம் விளக்கிக் காட்ட முடியும். ஆயினும் இக்கட்டுரை வேறு திசைக்குத் திரும்பி விடும் என்பதனால் அதை விட்டுவிடுகிறேன்.

ரஷ்ய எழுத்தாளர் மாக்ஸிம் கார்க்கியி னுடைய நூல்கள் பல தமிழில் வந்திருந்தமையால் அவைகளில் சிலவற்றை நான் படித்தேன். முதன் முதலில் கார்க்கியின் 'தந்தையின் காதலி' என்ற நாவலையும், 'அமெரிக்காவிலே' என்ற அவரின் கட்டுரை நூலையும் படித்தேன். விஷயங்களைச் சொல்லும்போது கார்க்கியால் ஆளப்பட்ட முறைகள், அவைகளில் இருந்த எளிமை எனக்கு மிகவும் விருப்பமாக இருந்தது. 'தந்தையின் காதலி' என்ற அவரின் நாவலைப் படித்தபோது ஏற்பட்ட உந்தலினால் 'வீராங்கனைகளில் ஒருத்தி' என்ற சிறுகதை ஒன்றினை எழுதினேன். இதுவரை அக்கதை நான்கு தடவைகள் மறுபிரசுர மாகியுள்ளது. என்னுடைய சிறுகதைகளில் எனக்குப் பிடித்தமான முதல் கதை அது. அக்கதையில் என்னால் பாவிக்கப்பட்ட சொல் பிரயோகமுறையும், எடுத்துக்கொள்ளப்பட்ட பொருளின் புறப்பாடும் எனது வேறெந்தக் கதையிலும் இருப்பதாக நான் கருதவில்லை.

மாக்ஸிம் கார்க்கியின் 'தாய்' நாவலை நான் படித்தேன். நீண்ட காலமாக அது என் மனதில் கிடந்தது. ரஷ்ய நாட்டின் விடுதலைக் கான நடைமுறைச் செயல்களில் தன்னை ஈடுபடுத்திக்கொண்ட அந்தத் தாயைப்போன்று நமது நாட்டினதும், சமூகத்தினதும் விடுதலைக் காக அன்றாட வாழ்க்கையோடு சேர்ந்து வழி நடத்தக்கூடிய ஒரு பாத்திரம் ஏன் பிறக்கக்கூடாது என எண்ணினேன், தேடினேன், சம்பவங்களைச் சேகரித்தேன். அதே தாய்போன்று எனது கண்ணுக்கு முன்னால் நடமாடித் திரிந்த ஒரு மனிதரையும் பிடித்துவிட்டேன். அவரின் நடை முறை வாழ்க்கை முறைகளை அவதானிக்க, அவர் பேசும் சொல் முறைகளைச் சேகரிக்க, அவரின் உடை நடை பாவனைகளை அறிந்துகொள்ள, மொத்தத்தில் அவரைச் சரியானபடி நான் படித்துக்கொள்ள சுமார் மூன்று ஆண்டு காலத்தைக் கழித்தேன். அவருடைய யாழ்ப்பாண நடைமுறை வாழ்க்கையோடு மாக்ஸிம் கார்க்கியின் தாயையும் சேர்த்துக் கணக்கிட்டு, சமப்படுத்தி, நான் கற்றுக்கொண்ட அனுபவங் களையும் சேர்த்து 'இராசாண்ணர்' என்ற அவரை 'ஐயாண்ணர்' ஆக்கினேன். 'பஞ்சமர்' என்ற நாவல் பிறந்துவிட்டது. யாழ்ப்பாணத்து வாழ்க்கைமுறை, யாழ்ப்பாணத்துப் பேச்சு வழக்கு, யாழ்ப்பாணத்துச் சம்பிரதாயங்கள், யாழ்ப்பாணத்து உடை நடை பாவனை, யாழ்ப் பாணத்து வீடு வாசல் அமைப்பு, யாழ்ப்பாணத்து விவசாய வாழ்க்கை வளர்ச்சி, யாழ்ப்பாணத்து அரசியல் நடைமுறைகள், யாழ்ப்பாணத்து மண்ணின் அவலங்கள், வீழ்ச்சிகள், எழுச்சிகள் ஆகியவற்றில் எதையுமே பிறநீங்கலாகி நிற்க விடாமல் பஞ்சமரில் சகலதையுமே உள்ளடக்கி யதில், நான் கார்க்கியையே வழிநடத்தல்காரனாக ஏற்றுக் கொண்டுள்ளேன். ஆயினும் பஞ்சமரில் என்னால் பிறப்பிக்கப்பட்ட பாத்திரங்களில் யாழ்ப்பாண மண்ணின் இயல்புகளுக்கு மாறான பல குறைபாடுகள் இருப்பதை இப்போது என்னால் உணரமுடிகிறது. இதற்குப் பின்னாலும் எனக்கு இப்படி ஒரு நாவல் எழுதும் வாய்ப்புக் கிட்டுமோ என்ற ஐயப்பாட்டால், யாழ்ப்பாண மண்ணில் நடந்த, நான் பார்த்த, நான் அறிந்த, என்னால் அறியப்பட்டவர்கள் அறிந்த பல சம்பவங்களைத் திணித்ததின்மூலம், நாவல் என்ற உருவத்துக்கப்பால் 'பஞ்சமர் ஒரு சம்பவக் கோர்வை' என்ற குற்றச்சாட்டை மற்றவர்கள் சுமத்த வாய்ப்பளித்திருக்கிறேன் என்றே கூற வேண்டும். இந்தப் பஞ்சமர் நூலுக்குப் பின்பு 'உருவம் என்பது எடுத்துக்கொள்ளப்படும் கருப் பொருளாலும், அதை வெளிக்கொணர்வதற்கான ஆள்வினாலும் தன்போக்கிலேயே தான் அமைவதாகும். இவைகள் தன் இச்சையாகவே இந்த உருவம் என்பதனை அமைத்துக்கொள் கின்றன' என்ற கருத்துக்கு நான் வந்துவிட்டேன்.

பஞ்சமருக்குப் பின்னால் என்னால் எழுதப் பட்ட கோவிந்தன், அடிமைகள், கானல், பஞ்ச கோணங்கள், தண்ணீர் ஆகியவைகளும், முருங்கையிலைக்கஞ்சி, மையக்குறி, சொக்கட் டான் ஆகிய தொடர் நாவல்களும் உருவத்தைப் பொறுத்தமட்டில் எனது பஞ்சமரின் பிறப்பி லிருந்து அந்த வழியைப் பின்பற்றியவைகளே யாகும்.



படிப்பகம்

www.padippakam.com

பஞ்சமரில் 35-க்கு மேற்பட்ட பாத்திரங்களும், கோவிந்தனில் 20-க்கு மேற்பட்ட பாத்திரங்களும், அடிமைகளில் 40-க்கு மேற்பட்ட பாத்திரங்களும், கானலில் 30-க்கு மேற்பட்ட பாத்திரங்களும், பஞ்சகோணங்களில் 28-க்கு மேற்பட்ட பாத்திரங்களும் வருகின்றன. இவைகளில் உலாவிவரும் ஒவ்வொரு பாத்திரங்களின் இயல்பான முறைகளைக் கவனிப்பதில் நான் மிகவும் கவனமாகவே இருந்து வந்துள்ளேன். ஆயினும் எனது கவனத்திற்கு அப்பாலும் சில பாத்திரங்கள் சென்றுள்ள தவறுகளுக்குப் போலித்தனமான சமாதானங்களைச் சொல்வதைவிட அவைகளை என் தலைமேலேயே சுமத்தி விமர்சித்துக்கொள்ள நான் தவறுவதில்லை.

ஒன்றை எழுத முற்படும்போது அந்த ஒன்று என்ன என்ற கேள்விக்கு முடிவுகட்டிக் கொள்வதோடு அந்தப் பிரச்சனை பின்பு பெரிதாக இருப்பதில்லை. நான் எழுத முற்படும் அந்த அடிக்கரு அல்லது நாதம் முன் முனைப்பு பெறுவதற்கான பிரதேசங்களையும், பாத்திரங்களையும், அந்த அடிநாதம் மனதுக்குள் வருவதற்கான சந்தர்ப்ப சூழ்நிலையை உண்டாக்கிய பின்னணியைச் சுற்றிச் சுற்றியே சேகரித்துக் கொள்கின்றேன். அத்தோடு அந்தப் பின்னணியில் வதியும் மனிதர்களைப் படிக்க முயல்கின்றேன். பெரும்பகுதி நேரத்தை அதிலேயே செலவு செய்கிறேன். இந்தவேளை அந்தப் பின்னணியில் வசிக்கும் மக்களின் பேச்சு முறைகளைக் கவனிக்கிறேன். அந்த பேச்சுவழக்குகளுக்கிடையே இருக்கும் மிகவும் செறிவான சொல்தொடர்களை உள்வாங்கிக் கொள்வதில் நான் என்றும் தவறியதில்லை.

ஒரு நாவலுக்குத் தலைச்சனாகக் கொள்ளப்படும் ஒரு பாத்திரம் சகல நிறைவுகளும் கொண்ட அப்பழுக்கற்ற பாத்திரமாக இருக்கவேண்டும் என்பது (சட்டப்படி சொல்லப்படாது விட்டாலும்) இதுகாலவரை வழிவழி வந்த ஒன்றாகும். என்து நாவல்கள், சிறுகதைகள் சகலத்திலும் இது மீறப்பட்டுள்ளது. இப்போது நடைமுறையிலுள்ள சமூக அமைப்புக் காரணமாக எல்லோர் மீதும் தன்னாதிக்கம் செய்யக்கூடிய தீய பழக்க வழக்கங்களிலிருந்து எனது பாத்திரங்களை நான் விடுவிப்பதில்லை. தனி ஒரு மனிதன் மேல் சகல இலட்சணங்களையும் ஏற்றி இவர் தான் இந்த நாவலின் கதைத் தலைவன் என்று யாரையும் நான் குறிகாட்டுவதில்லையாயினும், சில பாத்திரங்கள் இயல்பாகவே அந்தத் தலைச்சன் அந்தஸ்துக்கு உயர்ந்துவிடுகின்றன என்பதை வைத்துக்கொண்டு பார்த்தாலும் கூட, பஞ்சமரின் ஐயாண்ணரும், போராளிகள் காத்திருக்கின்றனரின் சந்தியாவும், கோவிந்தனின் எதிர் மறைக்கதா அந்தஸ்தைப்பெறும் சண்முகம் பிள்ளையும், அடிமைகளின் கந்தனும், கானலின் ஞானமுத்துப் பாதிரியாரும், பஞ்சகோணங்களின் சுப்பையா வாத்தியாரும் பல வேறுபட்ட குறைபாடுகளுக்கு உட்பட்டவர்களாகவே இருக்கின்றனர். இதை நான் வேண்டுமென்றே செய்கின்றேன் என்பதுதான் பலரின் குற்றச் சாட்டு. இதற்கு நான் கூறும் பதில் 'இந்தச் சமூக அமைப்பில் எந்த ஒரு மனிதனும் நிறைவானவனாக இருக்கவே முடியாது' என்பதுதான்.

பஞ்சமரின் ஐயாண்ணர் ஒரு கள்ளுக்கடையின் வாடிக்கைகாரராகவே பிறப்பிக்கப்படுகிறார். ஒரு சந்தர்ப்பத்தில் அவர் சூது விளையாடுவதும், வேறோர் சந்தர்ப்பத்தில் அவர் குடிகாரர்களுடன் கூடிக் கூழ்காச்சிக் குடித்து மகிழ்வதும், பல சந்தர்ப்பங்களில் அவர் கொச்சைகள் பேசி வம்பளப்பதும் பலருக்குப் பிடிக்கவில்லை. 'ஒரு கதைத் தலைவனை இப்படிச் சீர்கெட்ட நிலைக்கு உட்படுத்தலாமா?' என்று என்னிடம் கேட்டவர்களும், விமர்சனம் எழுதியவர்களும் உண்டு. இவர்களுக்கெல்லாம் நான் அப்போது சொன்ன மொட்டையான பதில் 'எனது ஐயாண்ணர் அப்படிப்பட்டவர்தான்' என்பதுதான். அதே போன்ற இன்னொரு கேள்வியையும் பலர் எழுப்பினார்கள்.

'பஞ்சமரில் வரும் உயர்ஜாதிப் பெண்கள் எல்லாம் ஒழுக்கம் கெட்டவர்களாகச் சித்தரிக்கப் படுகிறார்களே! ஆனால் அதில் வரும் பஞ்சமப் பெண் ஒருத்தியைத் தன்னும் அப்படிச் சித்தரிக்கவில்லையே ஏன்?' - இது தான் அந்தக் கேள்வியாகும்.



படிப்பகம்

www.padippakam.com

'என்னுடைய பஞ்சமரில் வந்த கமலாம்பிகை அம்மாளும், மாம்பழத்தியும் அப்படிப் பட்டவர்களாகப் பிறந்துவிட்டதற்காக நீங்கள் ஏன் இப்படி வாயிலும் வயிற்றிலும் அடித்துக்கொள்கிறீர்கள்? நான் பஞ்சமரைப் படைத்தது சகல வசதிகளும் கொண்ட கமலாம்பிகை அம்மாளினதும் மாம்பழத்தியினதும் ஒழுக்கக் கேட்டுக்கான பெருஞ்சுகபோக ஏகபோகத்தை அம்பலப்படுத்துவதற்கே அன்றி, கொதிக்கும் வயிற்றுக்காக உடலேயே விற்றுக்கொள்ளும் சூழ்நிலைகளிலும் தங்களைத் தாங்களே கட்டி அவிழ்த்துக் கொள்ளும் பஞ்சைப் பெண்களை அம்பலத்தில் கொண்டுவருவதற்காக அல்ல. இது எனது வேலையுமல்ல!' என்றுதான் பதில் சொன்னேன்.

'போராளிகள் காத்திருக்கின்றனர்' என்ற எனது நாவலில் சந்தியா என்ற வயோதிபனை நாவல் முடிவுவரை கொண்டுவந்திருக்கிறேன். அந்தச் சந்தியாதான் கதாநாயகன் என்று பலர் கூறுகிறார்கள். 'கோவிந்தன்' என்ற அடுத்த நாவலில் 'கோவிந்தன்' என்ற ஒரு நாயையும், கோவிந்தன் என்ற ஒரு சீவல் தொழிலாளியையும் கொண்டுவந்திருக்கிறேன். கோவிந்தன் என்ற நாயினைக் கடைசிவரை கொண்டு வந்தமையால் அதையே கதாபாத்திரமாகக் கொள்கிறார்கள். சீவல்காரக் கோவிந்தன் இடையே வந்து இடையே போய்விடுகிறான். ஆனால் இந்த இரு கோவிந்தன்களில் யார் கதைத் தலைவர் என்பதை நான் தீர்மானிக்கவில்லை. வாசகர்களே அதைத் தீர்மானித்தார்கள். போராளிகளில் வந்த சந்தியாவும், கோவிந்தனில் வந்த இரு கோவிந்தன்களும் பல குறைபாடுகளுக்கு உட்பட்டவர்களாகவே இருக்கின்றனர்.

'அடிமைகள்' என்ற எனது அடுத்த நாவலில் 'கந்தன்' என்ற பாத்திரத்தை மூளைத்தெளிவற்ற வெருளியாகவே படைத்தேன். ஆனால் அதே வெருளிக் கந்தன்தான், அடிமைகளின் தலைவனாகிவிட்டான். அந்தக் கந்தனை போர்த்தேங்காய் அடிகாரனாக, சேவலடிக்காரனாக இன்னும் பல தாழ்ந்த செயல்பாடுகளுக்கு உட்பட்டவனாக ஆக்கிவிட்டிருக்கிறேன்.

'கானல்' என்ற எனது அடுத்த நாவலில் 'ஞானமுத்தர்' என்ற ஒரு பாதிரியாரைப் படைத்தேன். கிறிஸ்துவத்தைப் பரப்புவதன் மூலமாக சமூக அமைப்பு முறைகளையே தகர்த்துவிட முடியுமென்று அவர் நம்பினார். ஆனால் அவரால் அதைச் சாதிக்க முடிந்ததா? அவரிடம் இருந்த குறைபாடுகளே அவரைச் சமூக அவலங்களுக்கு இட்டுச் சென்றதைக் காட்டியபோது அவரைப் புனிதமானவராக ஆக்க எனது பேனாவுக்கு முடியவில்லை.

'பஞ்சகோணங்கள்' என்ற நாவலில் சுப்பையா வாத்தியார் என்ற ஒருவரைப் பிறப்பித்தேன். இன்றைய அரசியல் சூழ்நிலையில் சரியானதற்கும் பிழையானதற்குமிடையே அவர்படும் அவஸ்தையைச் சித்தரிப்பதில் அந்தப் பாத்திரத்தைப் புனிதனாக்கிவிட என்னால் முடியவில்லை.

எம்மையும் எம்மைச் சுற்றியும் சதா பலவேறுபட்ட சம்பவங்கள் நிகழ்ந்துகொண்டே இருக்கின்றன. சுருக்கமாகச் சொன்னால் நாளாந்த நிகழ்வுகளுக்கூடாக சுழி ஓடிச் செல்வதுவே வாழ்க்கையாகிவிட்டது. பெருமளவில் இந்தச் சுழியோட்டத்தையே சரிவரச் செய்து முடிப்பதில் தான் மனிதனின் கவனமெல்லாம். பல காரியங்கள் அவன் கவனத்தை ஈர்ப்பதில்லை. எல்லாவற்றையும் அவன் தேவையெனக் கருதுவதுமில்லை.

என்னுடைய நாவல்களைப் படிப்பவர்கள் ஒவ்வொன்றிலும் பல புதிய புதிய நிகழ்ச்சிகளைக் காண்பார்கள். அவைகளைப் படிக்கும்போது தான் ஒவ்வொரு நிகழ்ச்சிகளிலும் உள்ள கனதியைப் புரிந்து கொள்வதாய்ப் பலர் கூறுகின்றனர். இதிலிருந்து ஒரு உண்மையை என்னால் கற்றுக்கொள்ள முடிகிறது. அதாவது 'என்னால் கிரகிக்கப்படும் சம்பவங்கள் உண்மை நிகழ்வுகளாக இருப்பதால்தான், அதை எழுத்தில் படிக்கும்போது அது மற்றவர்களுக்குக் கனதியைக் கொடுக்கிறது' என்பதாகும்.

'சமூகத்தில் பல உண்மைகள் அன்றாடம் நடக்கின்றன. அந்த உண்மைகள் எல்லாவற்றையும் எழுத்தில் கொடுத்துவிட வேண்டுமா?' என்ற ஒரு கேள்வி இயல்பாகவே உங்கள் மனதில் எழ இடமிருக்கிறது. இதற்கு நான் ஒரு வரையறை வைத்திருக்கிறேன். 'தனிமனிதனதும், அவனுக்கூடாக அவன் வாழும் சமூகத்தினதும், அல்லது



படிப்பகம்

www.padippakam.com

அதற்கும் மேலாக முழு உலகத்தினதும் பொதுவான மனுசீக உணர்வினை இலேசாகவேனும் தட்டிவிடக்கூடிய நாதக் கூர்களைக் கொண்டவைகளாக எவை எனக்குப் படுகின்றனவோ அவற்றை மட்டுமே எழுத்துருவில் வடிப்பது' என்பதாகும்.

இருபது ஆண்டுகளுக்கு முன் நான் 'அசை' என்ற சிறுகதை ஒன்றினை எழுதினேன். யாழ்ப்பாணத்தில் வாழ்ந்ததாகச் சொல்லப்படும் 'பொன்னம்மாள்' என்ற ஒரு விபச்சாரியின் கதை அது. அவளுக்கு நடுவயதாக இருக்கும்போது நான் அவளைக் கண்டிருக்கிறேன், பேசியிருக்கிறேன். அவ்ளையும் அவளின் வாழ்க்கை முறைகளையும் அவதானித்திருக்கிறேன். பெரிதும் பொய்க்கலப்பின்றி அவளின் வாழ்க்கையை எழுதமுற்பட்டு, அதை எழுதிப் பிரசுரித்தபின் 'அந்தக் கதையில் சற்றேனும் பொய்க்கலப்பில்லை' என்று அவளுடன் நெருக்கமாகப் பழகிய பலர் கூறிய போது நான் பெரிதும் ஆச்சரியப்பட்டேன். உண்மைகளை உண்மையின்படி, ஒரு விபச்சாரியின் வாழ்க்கையை எழுதும்போது எப்படி எல்லாம் எழுதியிருக்க வேண்டுமென்பது உங்களுக்குத் தெரியாததல்ல. ஆனால் இன்றுவரை அந்தக் கதையில் விரசம் இருந்தது என்று யாரும் குறிப்பிட்டுச் சொன்னதாக எனக்கு நினைவில்லை. அந்த விபச்சாரியின் வாழ்க்கையில் எதைச் சொல்வது என்பதில் என்னை வழி நடத்தியது, 'எதைச் சொல்வது' என்பதில் நான் வைத்துள்ள கொள்கையேயாகும்.

எனது சிருஷ்டிகளில் நான் பார்த்துப் பேசிப் பழகாத பாத்திரங்களை நான் உள்ளடக்குவதில்லை. எனது படைப்புகளில் கற்பனைப் பாத்திரங்கள் இருப்பதே இல்லை. இதனால் பாத்திரப் படைப்புகளில் எனக்கு அதிகம் சிக்கலும் சிரமமும் ஏற்பட்டதில்லை.

எனது பஞ்சமரில் சின்னாச்சி என்ற ஒரு பாத்திரம் வருகிறது. அந்தச் சின்னாச்சி எனது பிறந்த ஊரில் எனது வீட்டுக்குப் பக்கத்தில் குடியிருந்தவள். பஞ்சமர் எழுதத் தொடங்கி அது முடிவுக்கு வந்த காலப்பகுதிக்குள் அந்தச் சின்னாச்சியை நான் பல்வேற சந்தர்ப்பங்களில் சந்தித்திருக்கிறேன். பேசியிருக்கிறேன்.

பஞ்சமரில் எந்த இடத்திலும் அந்தச் சின்னாச்சியின் தோற்றத்தை, நான் தனியாகச் சித்தரிக்கவில்லை. அவளின் வழமையான அன்றாட நிகழ்வுகளைப் பிசகின்றிச் சித்தரித்ததின் மூலம் அவளின் தோற்றத்தை வாசகர்கள் மனதில் படியவைத்ததுடன், அவளின்மேல் ஆசிரியனாகிய எனது எந்தத் தலையீடும் செலுத்தாமல் பேச வைத்ததின் மூலமே அவளைப் பரிபூரணமான ஒரு கிராமத்துச் சின்னாச்சியாக ஆக்கிவிட்டேன். 'என்னடா மோனை, என்னை வைச்சுக் கதை ஒன்று எழுதியிருக்கிறியாம். அதில் என்ர குறுநாட்டுச் சீலைக் கொய்யகத்தைக்கூட அச்சுப் பிசகாமல் எழுதியிருக்கிறாயெண்டு பொடியள் கதைக்கிறாங்கள்.' இப்படி அந்தச் சின்னாச்சியே என்னிடம் வாய்விட்டுக் கேட்குமளவுக்கு அவளை நான் வென்றுவிட்டதில் எனக்குப் பரமதிருப்தி.

எப்போதும் கிராமங்களையே எழுதிக் கொண்டிருக்கிறேன் என்பதில் என்மீது பலருக்கு வெறுப்பு. 'இதுகளை விட இந்தாளுக்கு வேறை ஒண்டும் எழுதத் தெரியாது' என்று எனது காது கேட்கும்படி பலர் பேசியிருக்கிறார்கள். அதை நான் மறுத்து ஒரு வார்த்தை பேசியதில்லை. அவர்கள் உள்ளதையே சொல்லுகிறார்கள். உண்மையாகவே எனக்கு அப்படி எழுத வராது தான். இதை ஒப்புக்கொள்வதில் நான் வெட்கப்படவில்லை. உதாரணத்துக்கு ஒன்று...

சமீபத்தில் யாழ்ப்பாணத்து நகரத்து நடுப்பகுதியால் நான் போய்க்கொண்டிருந்த போது ஒரு வீட்டுவாசலில் ஒரு சிறு கூட்டம் கூடி நின்றது. அந்த வீட்டின் உட்புறம் இருந்து அழுகுரல் வந்தபொழுது தான் அது ஒரு இழவு வீடு என்று அறிந்து கொண்டேன். சா வீட்டுக்கு மேளம் தட்டும் சாம்பான் கூட்டம் ஒன்று வாயிலை அடைத்துக்கொண்டு நின்றது. அவன் உள்ளே போய் இருந்து மேளந்தட்ட இடமில்லாததினால் அதிலேயே நின்ற நிலையில் மேளம் தட்டும்படி பலரும் வற்புறுத்திக் கொண்டிருந்ததையும், 'நம்மாளையாக்கும், நான் பச்சைக் கிடுகிலை இருக்காமல் றோட்டிலை நிண்டு தட்டமாட்டனாக்கும்' என்று அந்தச் சாம்பான் கூட்டத் தலைவன் மறுத்துக் கொண்டிருந்ததையும் நான்



படிப்பகம்

www.padippakam.com

அவதானித்தேன். இது ஒரு விசித்திரமான தர்க்கமாக எனக்குப்பட்டது. ஏறக்குறைய இரண்டு மணி நேரம் வரையில் அங்கேயே நான் நின்று விட்டேன். கட்டாடி என்ற வண்ணான் வந்தான். உள்ளேபோய் அவன் வெள்ளைகட்ட இடமில்லை. பின்பு பரியாரி என்ற அம்பட்டன், அவனும் உள்ளேபோய் தனது தொண்டு துரவுகளைச் செய்யமுடியவில்லை. பாடை கட்டு பவன் வந்தான். அவன் பாடையை வைத்துக்கட்ட இடமில்லை. நான் கண்ட இவ்வளவையும் வைத்துக்கொண்டு ஒரு சிறுகதையை எழுதினேன். ஒரு நீண்ட சிறுகதை அது. 'மயான காண்டம்' என்ற அந்தச் சிறுகதை பட்டினத்துச் சூழ்நிலையில் எழுதப்பட்டபோதும் கிராமப்புற வாழ்க்கையின் மிச்ச சொச்சங்களால் பாதிப் படைந்தமையால், அது முற்றுமுழுதாகவே ஒரு கிராமத்துக் கதையாகவே அமைந்துவிட்டது. நான் என்ன செய்ய? எனது சுபாவம் அப்படி. எனக்கு அப்படித்தான் எழுத வருகிறது. இக் கதையைப் படித்த ஒரு பிரபல விமர்சகர் 'இதுவரை இப்படிப்பட்ட கிராமியச் சித்தரிப்பு ஒன்றைத் தான் படித்ததில்லை' என்று கூறியது இன்றும் என் காதுக்குள் கேட்கிறது.

ஒரு நாவல் காட்டப்படுவதான காலம், அந்தக் காலத்தில் வாழ்ந்த மனிதர்களின் வாழ்வு முறை, பேச்சுமுறை, பழக்கவழக்கங்கள், நாவலின் காலநகர்ச்சியின் புலப்பாடுகள், இயல்பான நடைமுறைகளோடு அந்த நாவலை நிலையியலிலிருந்து இயங்கியல் வரை இட்டுவருதல், அந்தக் கால நடைமுறைகளுக்கேற்ப உலக வியாபகமான பரிணாம வளர்ச்சிக்கு அதன் பாத்திரங்களின் வர்க்க குணாம்சங்களை வெளிக்கொண்டுவருதல் ஆகியவைகளில் நான் தவறியிருக்கிறேனா என்பதனை நாவல் அச்சுக்குப் போகுமுன் பலரிடம் அதைப்படிக்க கொடுத்து, படிப்பவர்களின் அபிப்பிராயங்களையும் உள்வாங்கிக் கொள்வதில் நான் தவறுவதில்லை. அச்சேறுவதற்கு முன் அவைகளைப் படிப்பதற்கு, 75 வயதுக்கு மேற்பட்ட ஒருவர், ஒரு குடும்பப்பெண், ஒரு உயர்பள்ளி மாணவன், ஒரு உடல் உழைப்பாளி, வர்க்க சமூக அமைப்பினைத் தெளிவுறப் படித்த ஒருவர் உட்படக் குறைந்தது எட்டு பேர்கள் வரையிலாவது இருப்பர்.

இவை எல்லாவற்றையும் தொகுத்து மொத்தமாகச் சொன்னால் 'ஒவ்வொரு படைப்பிலும் டானியல் என்ற பெயர் ஒரு சம்பிரதாயத்திற்காகவே அன்றி வேறெதற்காகவுமல்ல, உண்மையாகவே இவைகளின் எஜமானர்கள் நான் மேலே குறிப்பிட்டவர்களேயாகும்.

எனது நாவலின் மாந்தர்களே அதற்கான மொழியையும், கருவூலங்களையும், உடைநடை பாவனைகளையும் தருவதோடல்லாமல், தாங்களாகவே உருவத்தையும் அமைத்துக் கொள்கின்றனர். கடைசியில் குறிப்பிடப்பட்ட வாசகர்கள் சரிபிழைகளைப் பார்த்துக் குறிப்பிட்டுக் கொடுக்கின்றனர்!' என்றுதான் கூறலாம்.

சரியான மூலிகைகளைச் சேகரித்துத்தர பல மூலிகை நிபுணர்களும், அவர்களால் தரப்பட்ட மூலிகைகளைச் சரியாகப் புடம்போட்டு எடுக்க நல்ல அனுபவஸ்தர்களும் கிடைத்துவிடும் பட்சத்தில் வைத்தியனின் வேலை அதில் மிகச்சிறிய அளவுதான். வேண்டுமானால் 'இது எனது மாத்திரை' என்று அவன் சொல்லிக் கொள்ளலாம்.

நலிந்த மனிதர்களின் வாழ்க்கை, அந்த வாழ்க்கைக்காக அவர்கள் நடத்தும் நடவடிக்கைகள், இடங்களுக்கும் காலத்திற்கும், சூழ்நிலைக் கேற்பவும் வெவ்வேறு வகைப்படினும் மொத்தத்தில் அவைகளைப் 'போராட்டங்கள்' என்பதற்குள்ளேயே அடக்கவேண்டும். அந்தப் போராட்டங்கள் முறைப்படி வரிசைப்படுத்தப் பட்டால் அது நிட்சயமாக வரலாறாகப் பரிணாமம் பெறாமல் இருக்கவே முடியாது. பஞ்சமர், கோவிந்தன், அடிமைகள், கானல், பஞ்சகோணங்கள், தண்ணீர் ஆகிய இந்த நாவல்களைப் படிப்பவர்கள் இந்தப் பரிணாமத்தைக் காண்பார்கள். யாழ்ப்பாணப் பிரதேசத்தின் முழுமையான (சாதாரண மக்களின் போராட்டங்கள் உள்ளடங்கிய) வரலாற்றைக்காண விரும்புவர்களுக்கு இவை கைகொடுத்து உதவும் என்பதில் எனக்கு நிறைந்த நம்பிக்கை உண்டு. அதேபோல காலத்தால் அருகிப்போன சொற்றொடர்களையும் புதிது புதிதாக உண்டாக்கப்



படிப்பகம்

www.padippakam.com

படும் பிரயோகங்களையும், ஆகவும் குறைந்த பட்சம் ஒரு நூற்றாண்டு கால யாழ்ப்பான வாழ்க்கை முறையையும் அறிந்துகொள்ளவும் பயன்படக்கூடும்.

தற்போது எனக்கு வயது 58-த் தாண்டி விட்டது. மலைபோல 6 பிள்ளைகளையும், 4 பேரன் பேத்திகளையும் கண்டுவிட்டேன். அதுமட்டுமல்ல, அன்றாட வாழ்க்கைக்காகப் போராடுபவர்களோடு சேர்ந்து நானும் எனது வாழ்க்கைக்காகப் போராடவும் வேண்டியிருக் கிறது.

எனது இத்தனை ஆண்டுகால இலக்கிய - வாழ்க்கை அனுபவங்களில் நான் பலதைச் சந்தித்திருக்கிறேன். அவற்றுள் எனது சின்ன வயதில் நடந்த ஒரு நிகழ்வு இத்தனை வருடகால இலக்கிய அனுபவங்களுக்கு மேலான இலக்கிய அந்தஸ்தைப் பெற்றிருக்கிறது. எனக்கு அப்போது வயது சுமார் 15 வரையில் இருக்கும். ஏற்கனவே நான் குறிப்பிட்டதைப் போன்று ஒருநேரச் சோற்றுக்கே ஆலாய்ப் பறக்கும் வாழ்க்கை. காலை பழைய கஞ்சியுடனும், மதியவேளை கிழங்கு வகைகளுடனும் வாழ்க்கைபோக, சோறு என்ற ஒன்று இரவில்தான் கிடைக்கும். அதுவும் அர்த்தஜாமவேளையில் தான்!

எனது அப்பன் ஒரு நிரந்தரக் குடிகாரர். அவர் இரவுச் சோற்றுக்கான அரிசியை என் அம்மாளிடம் கொண்டுவந்து வீசிவிட்டு மண்திண்ணையில் புரண்டுவிடுவார். அம்மா சோறு காச்சுவாள். குழந்தைகளின் கொதிக்கும் வயிற்றுக்காகக் கஞ்சியை வடித்து முதலில் குடிக்கவைப்பாள். ஒரு நாள், அளவுக்கு அதிகமாகி சோறு அவிந்து குழைந்துவிட்டது. அப்பாவுக்கு அம்மா சோறு பரிமாறினபோது சோறு குழைந்திருப்பதைக் கண்டு அவருக்கு கோபம் பிறந்துவிட்டது. மது வெறியில் அவர் ஒரு கவிதையை பாடிவிட்டார்.

அம்மாவுக்குப் பெயர் மரியாள். அப்பருக் கோ கையெழுத்துப் போடவே தெரியாது. ஆனாலும் அவர் ஒரு கவிதை பாடினார். அர்த்த ஜாமத்தில் பாடினார்.

'சுந்தர மரியாள் செய்த
சூதை நான் அறியேனோ
கஞ்சிக்காக வல்லவோ
குழையவிட்டாள் சோறு!'

என் அம்மாவாகிய மரியாள் செய்த செயலை எவ்வளவு அற்புதமாக, அ - அறியாத அப்புவால் பாடமுடிந்திருக்கிறது.

'அனுபவத்திலிருந்து பிறப்பது தான் உயிருள்ள இலக்கியமாக முடியும்.'

- 1985

நன்றி - வி.ரி. இளங்கோவன்.

●

## கவிதாசரணின் விண்ணப்பம்

கவிதாசரன் சந்தா கேட்டு இதுவரை யாரையும் நிர்ப்பந்தப்படுத்தியது இல்லை என்றாலும் இதழை இன்னும் விரிந்த அளவில் கொண்டு சேர்க்கவும், திசை தோறும் இருள் தீற்றும் ஈனஞானங்களைக் கேள்விக்குள்ளாக்கவும், ஊமை மாந்தரின் வெடித்தெழும் குரலாய் அறைகூவல் விடுக்கவும் பணத்திற்கான தேவை இன்று ஏற்பட்டுள்ளது. எனவே இதழ் கவலை யற்றுத் தொடர்ந்து வெளிவர சந்தாவினை நன்கொடையாய் வழங்கி உதவிடுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

12 இதழ்களுக்கான நன்கொடை ரூ.200

30 இதழ்களுக்கான நன்கொடை ரூ.500

60 இதழ்களுக்கான நன்கொடை ரூ.1000

அன்புடன்

**கவிதாசரண்**
31, டி.கே.எஸ். நகர்,
சென்னை - 600 019.
தொலைபேசி : 573 4499



படிப்பகம்

www.padippakam.com

# நுனிப்புல்

- சிவகாமி

வேலையோடு விடுமுறையையும் இணைத்து குழந்தைகளையும் இழுத்துக்கொண்டு கொடைக்கானல் சென்றேன். அடிவாரத்தில் ஒட்டன்சத்திரம் - பாச்சலூருக்குப் பிரியும் பாதையில் நினைவுகள் கிளைத்தன. தொலைந்த நேரங்களோடு ஏன் நினைவுகளும் தொலைய வில்லை? தொலைந்த இன்பக்கணங்கள் நினைவு கூரும்போது ஏன் வருத்தமளிக்கிறது? காரின் பாதைக்கே திசை திரும்பினேன். முட்டாவரங்கள் மெல்ல மறைந்து படர்ந்த இலைகளும் செடி கொடிகளுமென நிலம் பார்த்து அதற்குள் பண்ணைக்காடு வந்துவிட்டதா என அதிசயித்தேன். சௌசௌக்காய்கள், பப்பாளி, கொய்யா, சீத்தா அம்பாரமாகக் குவிக்கப்பட்ட மார்க்கெட் தோன்றி மறைந்தது. சிறியவன் மடியில் தூங்கி விட்டான். பெரியவனிடம் கொடைக்கானல் வந்துவிட்டோம் என அறிவித்தபோது ம்....ம்.. என்றான். அந்த 'ம்' முக்கு என்ன அர்த்தம்? குழந்தைகள் எந்த வயதில் புரியமுடியாதவர்களா கிறார்கள்? எந்த யோசனைகளுக்குள்ளும் ஆழமாகப் புகாதவாறு புலன்கள், காட்சிகளையும், ஓசைகளையும், உரசிச்செல்லும் காற்றையும், மாறிவரும் மணத்தையும் தொடர்ந்து சென்றன.



பெரியவனுடைய 'ம்' முக்கு என்ன அர்த்தம் என கொடைக்கானல் சென்று சேர்ந்ததுமே விளங்கிப் போயிற்று. டாய்லெட்டுக்கு விரைந்தான். அங்கிருந்து திரும்பிய வேகத்தில் பசிக்குது என இரைந்தான். பெரியவர்களும் குழந்தைகளும் புலன்கள் வழிதான். கால்களே நடக்கும் கனவுகள் பறந்தாலும் என வழமை எட்டிப்பார்த்தது. அதுவும் பிறந்த வழி இறந்தது இளையவன் கண்ணைக் கசக்கிக் கொண்டு நின்றதால்.

இவர்கள் இருவருக்கும் விளையாடுவதற்கு ஏற்பாடு செய்துவிட்டு நான் அலுவல் நிமித்தம் கிளம்ப வேண்டும். கொடைக்கானல் அலுவலகத்தைச் சேர்ந்த இடைநிலை அலுவலர் வெளியே காத்துக் கொண்டிருந்தார். அழைத்ததும் உண்டான கேள்விகளால் முகச் சுருக்கங்களுடன் உள்ளே வந்தார்.

"பெரியவன் கூடைப்பந்தும், சிறியவன் ஏதாவது விளையாட்டு விளையாடுவதுமான பள்ளி அல்லது மைதானம் இருக்குமா, ஏற்பாடு செய்ய முடியுமா?"

எனது இந்த வேண்டுகோளால் மிக்வும் மகிழ்ந்து



படிப்பகம்

www.padippakam.com

செயின்ட் ஜான்ஸ், செயின்ட் மேரிஸ், கொடைக்கானல் இன்டர்நேஷனல் ஸ்கூல் என்று வரிசையாக அடுக்கி அந்தப் பள்ளி முதல்வர்கள் - தாளாளர்களை தமது சிறு பருவத்துத் தோழர் போல் அவர் வர்ணித்துச் சென்றது எனக்கு உதறலை உண்டாக்கியது. எதுக்கு வேட்டு வைக்கிறாரோ, கடவுளே!

குண்டும் குழியுமான, காட்டாறு அரித்த நடைபாதையே கொண்டிருந்த குண்டுபட்டிக்கு சாலை வந்துவிட்டதாம். சில நாட்களில் பஸ் கூட ஓடத் தொடங்கிவிடுமாம். குதியுயரம் கொண்ட செருப்பு அறுந்து காலில் முள்குத்தி ரத்தம் பெருகியது., மரப்பிசின் சேகரித்து செருப்பை ஒட்டமுயற்சித்தது, பனி ஈரப்படுத்திய புல்வெளிச் சரிவில் இருவராய் வீழ்ந்து வானமும் பூமியும் பனிப்படலம் மறைக்க .... படித்துக் கொண்டிருந்த செய்தித்தாளை மீறி நினைவுகள் துயரம் கசிந்து அடர்ந்தன.

எதற்கும் எல்லையுண்டு. இல்லையெனில் நாங்கள் அந்தச் சரிவிலே ஏன் வீழ்ந்தேயிருக்க வில்லை? எழுந்து வந்து உணவருந்தி, கம்பளிக் குள் இருவராய் நட்சத்திரம் பார்க்கக் கிளம்பி ... குலைக்கும் நாய்கள் ஊரைக் கூட்டிவிடுமென அச்சமுற்று ஆறுக்கு நான்கு சுத்துக்கட்டில் உறங்கப்போனோம்.

மேல்நிலை அலுவலர் வந்துவிட்டாரென சிப்பந்தி அறிவித்ததும் வேலைக்குத் தயாரா னேன். சிவப்புக் கம்பளிச்சட்டை, மெல்லிய ரோஜா வண்ண சருகுத்துணி கழுத்தைச் சுற்றி, மழைக்குக் குடை, வெயிலுக்குக் கண்ணாடி, கொஞ்சம் சில்லறை, உதடுகளை ஈரப்படுத்த நிறமற்ற இதழ்ச்சாயம் எனக் கைப்பையை நிறைத்துக் கொண்டேன். எனினும் தாவரங்களு டனும், தூறியச் சாரலுடனும் இணைந்தேன்.

வில்பட்டி மாணவர் விடுதியில் எனது விருப்பப்படி வாகனம் நின்றது. மாணவர்கள் பள்ளிக்குச் சென்றிருந்தனர். இடம் பார்வையிட்டு, சமையல் மற்றும் இதரப் பொருட்களை சரி பார்த்து, விடுதிக் காப்பாளர் (அவரது போதாத காலம் போலும். அங்கு இருந்தார்) சமையல் காரரிடம் விசாரணை செய்து, கையிலிருந்த மாணவர்கள் வருகைப் பதிவேட்டோடு வாகனத் துள் ஏறினேன். அதை நான் மறந்து எடுத்துக் கொண்டு போவதாக எண்ணிய விடுதிக் காப்பா ளர் அது விடுதிக்குரியது என்றார். "பரவாயில்லை, நீங்களும் என்னுடன் வருகிறீர்கள். வருகைப் பதிவேட்டைச் சரிபார்த்ததும், நீங்கள் அதைத் திரும்பப் பெற்றுக் கொள்ளலாம்" என்றேன். அவர் தயக்கத்துடன் ஜீப்பில் ஏறிக்கொண்டார். வில்பட்டியிலிருந்தும் அதைச் சுற்றிலுமுள்ள கிராமங்களிலிருந்தும் தலித் மற்றும் பிற்படுத்தப் பட்ட வகுப்பைச் சேர்ந்த ஏழை மாணவர்கள் தங்கிப் படித்தனர் அவ்விடுதியில். விடுமுறையில் செல்லும் மாணவர்களுக்கும் சேர்த்து விடுதியில் சமைப்பதாகக் கணக்குக் காட்டுவது வழக்கம். வருகைப் பதிவேட்டின்படி அவர்கள் எந்த ஒரு விடுமுறைக்கும் தங்கள் சொந்த ஊருக்குச் செல்லவில்லை. மூளையுள்ள எவருக்கும் இதில் சந்தேகம் உண்டாகலாம். வருகைப் பதிவேட்டில் உள்ள பெயர்கள் பள்ளி மாணவர்களா அல்லது வெறும் பெயர்ச் சொற்களா என்பதை சோதிக்க, வருகைப் பதிவேட்டிலிருந்து இவ்வருடம் புதிதாகச் சேர்ந்த எட்டு மாணவர்கள் பெயர் களைத் தேர்ந்தெடுத்தேன். அவர்களின் கிராமங் களுக்குச் சென்று விசாரித்தேன். தலைவாழை கிராமத்தில் உள்ளாட்சித் தேர்தலுக்கு நின்ற பெண் 292 என்று அதிக வாக்குப் பெற்றும் குறையான எண்ணிக்கைப் பெற்ற பெண் வெற்றி பெற்றதாக போலீஸார் உதவியுடன் தேர்தல் அதிகாரி அறிவித்தார் என்ற செய்தி காற்று வாக்கில் விழுந்தது. எட்டு மாணவர்களில் எவரும் விடுதியில் தங்கவில்லை என்று அந்த மாணவர் களின் பெற்றோர்கள் இந்த விபரம் எதற்குத் தானோ என யோசித்தவாறே வாக்குமூலம் அளித்தனர். சுரவேகம் போல் கடுப்பு ஏறியது. காப்பாளரை, மேல்நிலை அலுவலரை, அந்த மாணவர்கள் விடுதியில் சேர பொய்யான விண்ணப்பம் தயாரித்து சான்றளித்திருந்த தலைமையாசிரியரை ஆகிய எவரையும் பார்க்கப் பிடிக்கவில்லை.

மாலையாகிவிட்டது. அறைக்குத் திரும்பி னேன். விளையாடச் சென்ற பிள்ளைகள் இன்னும் திரும்பவில்லை. காலையில் கவிந்த பழைய



படிப்பகம்

www.padippakam.com

நினைவுகளின் துயரச்சுவடு இப்போதில்லை. அவற்றை வில்பட்டி விடுதி விவகாரங்கள் ஆக்கிரமித்திருந்தன.

விடுதியில் பின்பற்றப்படவேண்டிய விதிகள் எவ்வளவோ உண்டு. பலவகையான கணக்குப் புத்தகங்கள் பராமரிப்பு, யாரிடமிருந்து பொருட்கள் வாங்கவேண்டும், காப்பாளர் விடுதியில் தங்கியிருந்து பாடம் கற்றுக் கொடுக்கும் நெறிமுறைகள் போன்ற பல விதிமுறைகள் எவற்றையுமே வில்பட்டி விடுதி பின்பற்றவில்லை. வருகைப் பதிவேட்டில் உள்ள மாணவர்கள் அந்த விடுதியில் தங்கியிருக்க வேண்டும் என்ற அடிப்படை விதிகூட பின்பற்றப் படவில்லை. பெரும்பாலும் எல்லா விடுதிகளும் இப்படித்தான் என்பது என் ஊகம். இதெல்லாம் எங்கு கொண்டு விடுமோ?

எனக்கு உடனடியாகத் தோன்றியதையும் அவ்வப்போது தோன்றும் எண்ணத்தையும் மறைக்க விரும்பவில்லை. அவர்களையெல்லாம் கொலை செய்துவிட வேண்டும் என்ற எண்ணம் தான் அது. அநேகமாக, பலமுறை அந்த நபர்கள் என் எண்ணங்களில் எதிர்ப்புக் காட்டாமல் மீறித்துளைக்கும் ரவைகளுக்கு இரையாகித் தான் போனார்கள்.

என் பிள்ளைகள் விளையாடுவதற்கு ஏற்பாடு செய்த இடைநிலை அலுவலர் மிக்க உரிமையோடு என் அறைக்குள் நுழைவதைக் கண்ணுற்று செய்தித் தாளிலிருந்து விடுபட்டேன். என்னைப் பார்க்க விளையாட்டு மைதானம் உள்ள பள்ளிக்குச் சொந்தக்காரர் வந்திருப்பதாகத் தெரிவித்தார். மலைவாழ் சிறுவர்களுக்கு இலவசப் பள்ளி நடத்துவதாகவும், அந்தப் பள்ளி மாணவர்களின் கலைவிழா நடந்து கொண்டிருப்பதாகவும், விழாயிறுதியில் நான் வந்து பரிசுகள் வழங்கவேண்டும் என்பதும் அவரது வேண்டுதல்.

"நான் ஏதாவது பேசவேண்டியிருக்குமா?"

"சும்மா ஓரிரு வார்த்தைகள்"

"இல்லை நான்வருவதாக இல்லை. நீங்கள் இன்று விழா கொண்டாடுங்கள். நாளைக்கு வேண்டுமானால் உங்கள் பள்ளியைச் சுற்றிப் பார்க்கிறேன்."

"நீங்கள் பேசவேண்டாம். பரிசுகளைக் கொடுத்தால் போதுமானது. அரைமணி நேரம் கூட ஆகாது"

"சரி"

உள்ளுக்குள் குமைந்தேன். உபயோகமற்ற வேலைக்குள் ஏன் என்னை இழுக்கிறார்கள். வெறும் பதவிமட்டும் குறிக்கோளாய்க் கொண்டு அழைக்கிறார்களே! இப்படித்தான் முதல் மந்திரி காலில் விழுவதும், கட்சித் தலைவனை அன்பின் மிகுதியெனக் கையைக் கடிப்பதும் நடக்கிறதோ? என்னுடைய கோபமும் எரிச்சலும் எதனால்? உண்மையைச் சொல்லப்போனால் இப்பதவியை மீறிய நல்ல மனிதன் என்னுள்ளிருப்பதாகவும், அந்த நபரை யாரும் அடையாளங்கண்டு கொள்ளவில்லை என்பதும்தானே என் கோபம். இது புரிந்ததும் சாந்தமடைந்தேன். உடைமாற்றிக் கொண்டு கிளம்பினேன்.

குழந்தைகள் சினிமாப் பாட்டுக்கு ஆர்வத்துடன் ஆடினார்கள். பிறர் அவர்களின் கைகால் உதைக்கும் திறமையை வியப்புடன் ரசித்தனர். நான் அமைதியாக உட்கார்ந்திருந்தேன் - பிள்ளைகளின் அலுமினியக் கோப்பைகள் சார்த்தி வைத்திருந்த மூலையை வெறித்துக் கொண்டு. பிள்ளைகள் என் கையிலிருந்து ஓடிவந்து பரிசுகளைப் பெற்றுச் சென்றார்கள். நான் நம்பிக்கையற்ற குரலில் பேசினேன்.

மலைவாழ் மக்களுக்கான இந்தத் தனியார் பள்ளிக்கு இலவசப் புத்தகங்கள் வழங்கவேண்டும் எனக் கேட்டுக் கொள்ளப்பட்டது. அதற்கான ஏற்பாடுகள் செய்வேன் என்று என்னை அழைத்தவரின் நோக்கம் நிறைவேறும்படியான வார்த்தைகளை உதிர்த்தேன். "அவர் தம் கல்விப் பணியைப் பாராட்டுவதுடன் குழந்தைகளை நன்றாகப் படிக்குமாறு கேட்டுக்கொண்டு....."



படிப்பகம்

www.padippakam.com

குழந்தைகளோடு குழந்தையாக ஒன்ற முடியாத எனது மனோபாவத்தை ரகசியமாக உணர்ந்து கொண்டு பேச்சை முடித்தேன்.

என்னை அழைத்தவர் என் பேச்சு சிறப்பாக இருந்ததாகச் சொன்னபோது மகிழ்ந்தேன்.

தங்குமிடம் திரும்பியபோது டி.வி. இல்லாமல் போரடிக்கிறதென என் பிள்ளைகள் இருவரும் ஒருவருடன் ஒருவர் குஸ்தியிட ஆரம்பித்திருந்தனர். கடிந்து, பின் சமாதானப் படுத்தினேன்.

விடுதி விவகாரத்தை ஆய்வுக் குறிப்பாக எழுதி வில்பட்டி விடுதிக் காப்பாளர் மீதும் பிறர்மீதும் உரிய நடவடிக்கை எடுக்கவும் எழுதி முடித்தபோது.... மலைகள், மலைவாழ் சிறுவர்கள், விடுதிகள், என் குழந்தைகள், என் இனிய துயரங்கள் எல்லாம் புதைத்து தூக்கம் அமிழ்த்தியது மற்றொரு காலைப் பொழுதைப் போல்.

புலரியின் சுகம், கரைந்த மேகங்கள், வண்ணமலர்கள், பறவைக் குரல்கள் மீது மெல்ல கரைந்து நழுவிப் போவதை சாலையில் நடந்து கொண்டே உணர்ந்தேன். இரவு உடையுடன் இளம் பெண்கள் சாலையில் குடத்து நீருக்காக மேலும் கீழும் ஏறி இறங்கி எதிர்ப்பட்டனர். தண்ணீரற்றுப் போன மலைகள் மேலும் மேலும் வந்து குவிந்த சுற்றுலா சுகவாசிகளால் நிறைந்தது. மூச்சி ரைத்துத் திரும்பினேன். பிள்ளைகளுக்கான நேரக் கழிப்புத் திட்டத்தை வகுத்துவிட்டு நான் மறு படியும் விடுதிகளைப் பார்வையிடச் சென்றேன்.

தங்கும் மாணவர்களின் தகரப்பெட்டி, பாய், கம்பளி கணக்கெடுத்து, தங்குவதாகச் சொல்லப்படும் மாணவர் தொகையிலிருந்து கழித்து, குறைவதாகச் சொல்லி கூடவந்த அலுவலர்களை சற்றுநேரப் பதைபதைப்புக்கு இலக்காக்கிக் கடிந்து, உங்களை என்ன செய்யப் போகிறேன் பாருங்கள் எனப் பொறுக்க முடியாமல் சவால்விட்டு, விட்ட வேகத்தில் சுகமிழந்து தவித்தேன். விளைவாக ஒரு மலைக் கிராமத்துக்குக் கிளம்பலாமென முடிவெடுத் தேன்.

கொடைக்கானலிலிருந்து கடுகுதடி எனும் அக்கிராமம் நாற்பது கிலோ மீட்டர் தொலைவு. பண்ணைக்காட்டிலிருந்து மேலேறியபோது இருட்டத் தொடங்கியிருந்தது. இது தாண்டிக்குடி, அடுத்து கடுகுதடி என்றதும் உடல் விழித்தது.

யாய்யர யாய்யர யாய்ஞ்
யாய்ஞ்... யாங்கர பாங்கர

பஞ்சை, பசி இவற்றோடு விடியலின் வெளிச்சம் கண்களில் மினுக்கிட கூட்டமாக அவர்கள். மூதாட்டி ஒருத்தி என் கையைப் பிடித்து கற்களில் நான் தடுமாறி விழுந்து விடக் கூடாது என்பதற்காக அவள் கண்வெளிச்சம் கொண்டு வழிகாட்டி நடந்தாள்.

செம்பரத்தை, ஆரஞ்சு-மஞ்சள் சாமந்திகள், வள்ளி இலைகளாலான மாலை எனக்கணிவிக்கப் பட்டது. கௌரவிக்கப்பட்டதாக இறுமாந்தேன்.

ஒரு தட்டில் சிறுத்த ஆரஞ்சுப் பழங்கள், வகிர்ந்த பப்பாளி, அலங்காரமாகச் சில காட்டுப் பூக்கள். இயற்கையின் விளைச்சலென முளைத்த அதிசயப் பூக்கள் போல அவர்கள் ஒருபுறமும், பாலியெஸ்டர் புடவை, உதட்டில் சிந்தடிக் பூச்சு, நொந்த சதையுருவமென நான் மறுபுறமும். எங்கே என் கண்களில் விளக்கொளி? ஓசையின்றி கேட்டேன்.

"ம். பாடுங்கள். உங்கள் பாட்டுக்களை. துவங்குங்கள் உங்கள் ஆட்டத்தை. அம்மா விரைவில் திரும்பவேண்டும். அவர்களுக்கு நேரமில்லை."

அழைத்துப் போன என்.ஜி.ஓ. சத்தமிட் டார்.

ஆமாம் எனக்கென்ன அவசரம். திரும்பச் சென்று பாழ்நகரங்களுக்குள்ளும், அலுவலர்கள் சமைத்து வைத்திருக்கும் அதிசயக் கணக்குக் குள்ளும் மூழ்கும்படி சபிப்பது யார்? ஏய்!

காக்கரே மூக்கரே
டாக்கரே போக்கரே
ட்ரய் சக்கா அய்



படிப்பகம்

www.padippakam.com

"ஏய், ஏய் மொதல்ல பாட்டு... நீ பாடு... டேய் சும்மாரு. எம்மா நீ பாடேன்.",

காடு இல்ல நாடு இல்ல
ஒளிஞ்சுதிரிய பாறையில்ல
பிடுங்கித் திங்க கிழங்கில்லே
ஒண்ணுமே இங்கேயில்ல
வக்கத்த பலியனுக்கு
மூலிகையில்ல டாக்டரில்ல

"என்.ஜி.ஓ. சொல்லிக்குடுத்த பாட்டைப் பாடாதீங்க. தயவுசெய்து உங்க பாட்டைப் பாடுங்க. உங்க்கிட்டருந்து பிடுங்கிட்ட பாட்டை யாவது பாடுங்க" நான் இரைந்தேன்.

கசமுச கொச கொச
ட்ரய் சக்கா அய்.. நொய்

சற்றுநேர ஆலோசனைக்குப் பிறகு கீழ்க்கண்ட நாடகம் நடிக்கப்பட்டது.

தீ மூட்டப்பட்டது. ஒரு வாலிபன் நோயில் விழுந்து சாவின் வாசலில் இருக்கிறான். இருவர் அவனைத் தாங்கிப் பிடித்தவண்ணம் உள்ளனர். சாமியாடிக் கிழவியை அழைக்கின்றனர். எனக்கு வழிகாட்டிய மூதாட்டி நரைத்த வெண்முடியை அவிழ்த்துத் தளரவிட்டு பச்சைத் தேக்கென விறைப்புடன் முன்வந்தார்.

"இவனைப் பிழைக்க வைக்கணுமா, என் கையில்ல என்ன இருக்கு? டவுனு டாக்டருக்கு மலையேறும்போது இரைக்குதாம் மூச்சி. காட்டுக்குள்ள நுழையக்கூடாதுன்னு வேலி போட்டானுவ. மூலிகையை எப்படிப் பறிக்க? பலியர் இளங்கொடி கசங்கிக் கிடக்கிறான். யாருமத்த பலியனுக்கு யார் துணை?"

பழையதும் இட்டுக்கட்டியதுமான மொழி புரண்டது அவள் நாவில். ஆவசேங்கூடியது.

நெருப்பு பொறியுடன் கிளம்பிப் படர்ந்தது. நெருப்பைச் சுற்றி ஒரு கோலால் வட்டமிழுத் தாள். கடவுள் அந்த வட்டத்துள் வந்து விழுவாரா?

"ஏய் எல்லாம் ஒதுங்கி நில்லு. எங்க சலங்கைக்காரன்? ஊது. சலங்கைக் கெஞ்ச ஆடு"

அவள் கட்டளையிட்டதும் வயதான ஆள் சலங்கையைக் காலில் கட்டி சலக் சலக்கென வந்து "பீப்பாக்கு... ப்பீப்பீ... பீப்பாக்கு" ஊதலினால் இசையமைத்து, காலை நொடித்து நொடித்து எட்டுக்கள் வைத்தான். ஊதல் மிஞ்சவும் சலங்கைக் கொஞ்சித் தவித்தது. தெய்வ தரிசனம்போல் லயம் விழுந்ததும் கிழவி சொடக்குப் போடத் துவங்கினாள்.

தலையைச் சொடுக்கி, வெட்டி வெட்டி காலைச் சுழற்றினாள்.

"சொடக்கு நக்கு சொடக்கு டொக்கு" சொடுக்கி ஆட, தீப்பொறி பறக்க, உஷ்ணம் பொறுக்காது நோய்வாய் நடிகன் காலை இழுத் தான். அவன் காலை, கையில் உள்ள கோலால் ஒரு தட்டுத் தட்ட, பழையபடி காலை நீட்டி சூடு பொறுத்தான்.

இசை முதிர முதிர, ஆட்டம் இளகி வழிந்தது. அவளின் உடல்துடிப்பைக் கடன் பெற்று விரைந்தன சுற்றியிருந்த இளங்கால்கள். பூக்கள் குழைய, மண் குலுங்க, விண் அதிர அவ்விடமே துடிப்பும் வலியும் நிறைந்த உயிராகியது. உயிர் பிண்டமாகி அசைந்தது. சவமும் அசைவு பெற்று இசையில் இணையாகி இயைந்தது.

"ம்... பிழைச்சிக்கிட்டான். சோறு கொண் டாங்க."

ஒரு கவளச் சோற்றைப் பிசைந்து உருண் டையாக்கி,

"ம் பாருங்க. இந்தச் சோத்தைச் சாப்பிட்டு எந்திரிச்சு நடப்பாம்பாருங்க" சொல்லிக் கொண்டே ஊட்டினாள். மரணத்திலிருந்து மீண்டவன் கிழவியின் காலில் விழுந்து வணங்கி நீர், நெருப்பினால் சுத்தகரிக்கப்பட்டு, புத்திளம் தளிர்போல் மசிந்து ஆடினான். குழைவும் கனிவுமான ஆட்டமும் இசையும், கூடிவரும் குலவையொலியுமென பிரளயம் போல் புரண்டது இடம்.



படிப்பகம்

www.padippakam.com

முடிந்தது நாடகம். நான் மூதாட்டி காலில் விழுந்து நெற்றியில் சாம்பல் பூசிக்கொண்டேன்.

மழை வந்தது. அங்கேயிருந்த மண்சுவர்க் கட்டிடத்துள் அடைந்தோம். அவர்களது கோரிக்கைகள் என்னுள் பதிந்தன.

அவர்களது காட்டை அவர்களுக்கே அளிக்க வேண்டும்.

தொலைந்துபோன மூலிகைகளை இனங் காண வேண்டும்.

ஞாபகம் விலகிப்போகாத காட்டு தேவதை அவர்களின் வட்டத்துள் விழவேண்டும்.

அப்புறம் அவர்களின் ஆட்டமும் பாட்டமும்.

இவை போதும். இவை மட்டுமே போதும்.

கொய்யாக் கனிகள், பழுக்காத புளிப்பு ஆரஞ்சுகள், ஒரு குடுவைத்தேன் பெற்றுக் கொண்டு கத்தை கத்தையான கோரிக்கைத் தாள்களையும் சுமந்துகொண்டு வாகனம் ஏறினேன்.

அறையில் என் பிள்ளைகள் அரக்கு சமுக்காளம் போர்த்தி உறங்கிக் கொண்டிருந்தார்கள். நான் ஒரு காகிதமும் பேனாவும் எடுத்து ஓசைப்படாமல் எழுதினேன்.

நச்சுக் காற்றில் மூழ்கும் மலைகள்
உயிர்த் தாவரங்களின் கடைசி மூச்சு
பிளாஸ்டிக் வேலிக்குள் காடு
முன்னொரு நாள் பாறையிடுக்கில் பலியன்
மூலிகை தேவதை வட்டத்துள் ஓயாமல்
உயிர்பறிக்கும் உயிராட்டம் இசை
இறந்த காலமே எம் எதிர்காலம்.
விரைவில் அது நிகழும் - நிகழில்
ஊருக்குள் ஒரு டாக்டர் அதுவரை

இப்படியெழுதி அதைக் கிழித்துப் போட்டேன்.

பிறகு எழுதினேன் இப்படி.

அன்பார்ந்த திரு.......

இன்று கடுகுதடிக்கு விஜயம் செய்தேன். பலியர் எனும் பழங்குடிகளைச் சந்தித்தேன். அந்தக் குடியிருப்புக்கு சாலை வசதியில்லை. கற்களில் விழுந்துவிடாமல் நடப்பதே விந்தை.

சுருக்கமாக இக்கடிதம் மூலம் கேட்டுக் கொள்வது யாதெனில், மழையில் கரையாத சாலை, பட்டினிச் சாவு தவிர்க்க கூட்டுறவு அங்காடி மூலமாக கோதுமை, குழந்தைகள் வயிற்றிலிருந்து கொக்கிப்புழு அகற்ற மருத்துவ முகாம், குழந்தைகள் பயிலகம் இவற்றிக்கு உடனடியாக ஏற்பாடு செய்யவேண்டியது. இதுவரை அரசு மருத்துவர் ஏன் அங்கு விஜயம் செய்யவில்லை என்பதைக் கண்டறிந்து, உரியவர் மீது நடிவடிக்கை எடுத்து அறிக்கை அனுப்ப வேண்டிது.

உங்கள் உண்மையுள்ள

(ஒப்பம்)

பெறுநர் :
மாவட்ட ஆட்சித் தலைவர்,
திண்டுக்கல்,

நகல் : பழங்குடி இயக்குநர், சென்னை.

என் கண்முன்னால் வெள்ளை அங்கி அணிந்த தோரணையுள்ள அல்லோபதி டாக்டர் ஊசியுடன் அலைய, கடுகுதடியின் வயிறு ஊதிய பலியர் குழந்தைகள் அழுதுகொண்டு அங்குமிங்கும் ஓடி ஒளியும் காட்சி.... நான் சத்தமாகச் சிரிக்கிறேன்.

●



படிப்பகம்

www.padippakam.com



# தேர்

- அபிமானி

ஆட்டம் பாட்டமாய், கூத்தும் கும்மாளமுமாய் அந்தத் தேர், வண்டி மறிச்சான் தெரு முக்கில் திரும்பியபோது திமுதிமுவென ஓடிவந்தக் கோரிக்காலனிப் பறையர்கள் கூட்டத்தோடு கூட்டமாய் நுழைந்து வடத்தினில் கைவைத்து இழுத்தனர்.

"தேர் அம்பலம்"

"தில்லை அம்பலம்"

"யார் வாரார் வீதியிலே?"

"ஆண்டவர் வாரார் வீதியிலே"

எல்லோரையும் போலவே, எல்லோரின் கூடவே அவர்களும் உற்சாக மிகுதியில் சத்தம் போட்டுக் கொண்டனர். விண்ணைப் பிளக்கும் சத்தம். சந்தோச ஆர்ப்பரிப்பு. ஆர்வ மிகுதியால் முண்டியடித்துக் கொண்டு வேடிக்கைப் பார்த்தப் பெருத்தச் சனத்திரளை சிக்கல் பட்டு விலக்கிக் கொண்டு தேர் முன்னேறியது.

கூப்பிடும் தூரம் வரை வடத்தின் நீளம். மலைப் பாம்பின் திரட்சியைப் போல உருண்டுப் பெருத்த வடம். இரண்டு கைகளையும் சேர்த்துப் பிடித்தால்தான் கைக்குள் அது அகப்பட்டது போலிருந்தது. எதிரும் புதிருமாக ஆட்கள் நின்று பலம் கூட்டி இழுத்தனர். இளவட்டத்திலிருந்து அரைக் கிழடுகள் வரை நின்றிருந்தனர். புத்தாடையின் வாசம். பூரிப்பும் புன்னகையுமாய், ஆர்வக் கோளாறால் ஆவிச் சேர்த்து இழுத்தனர் எல்லோரும்.



படிப்பகம்

www.padippakam.com

சூரிய அடுப்பில் 'சுள்'ளென்று நெருப்பு எரிந்துக் கொண்டிருந்தது. அதன் வெக்கைத் தாளாமல் சனங்கள் எல்லாம் வெந்து கொண்டு நின்றிருந்தனர். வேர்வைப் பிசுப்பிசுப்பில் புத்தாடையின் சாயம் வெளுத்து நிறம் மாறிக் கொண்டிருந்தது. ஆயினும் அவர்களின் மனசும் எண்ணமும் வேடிக்கை பார்ப்பதிலே குறியா யிருந்ததால் மற்ற எந்தவித உபத்திரவங்களும் அவர்களுக்குப் பெரிசாகத் தெரியவில்லை. சித்திரை மாத வெயிலைப் பற்றிச் சொல்லவா வேண்டும்? காலை விடிந்ததுமே சூரியக் கள்ளன் சூட்டுக் கோலோடுதான் எழுகிறான். வண்டி மறிச்சான் கோயில் தெருவின் இரு பக்கமும் சனங்களின் தலைகளாகவே தெரிந்தன. சிறிசும் பெரிசுமானத் தலைகள். நரை விழுந்ததும், வழுக்கை விழுந்ததுமானத் தலைகள், இளம் பிஞ்சுத் தலைகள் சில சிலரின் தோள்களில் ஏறி யிருந்தன. முதிர்ந்தத் தலைகள், கை விரல்களைக் கூடாக்கிக் கொண்டு தேரை அன்னாந்துப் பார்த்தன.

(நெட்டு நெடுவென்று உயர்ந்திருந்தது தேர். கண்ணைப் பறிக்கும் வண்ண அலங்காரங்கள். அதன் பக்கவாட்டில் சரிகைத் தாட்களும், பூமாலைகளும் அருவிகளைப் போலச் சரிந்துக் கொண்டுக் கிடந்திருந்தன. தேர் முன்னேறும் போது அவை முன்னும் பின்னும் அசைவதைப் பார்த்தால், தேர் கைவீசி நடப்பதுபோலத் தோன்றியது. இரண்டு பெரிய ராட்சசச் சக்கரங் களின் தாங்கலில்தான் தேர் ஓடிக் கொண்டி ருந்தது. அடிப்பாகம் பருத்து, நுனிச்சிறுத்தத் தேர். மரப் பலகையினால் படிக்கட்டுக்களைப் போலச் செதுக்கப்பட்டு, ஒவ்வொரு படிக்கட்டிலும் கந்தர்வக் கன்னிகளையும், அசுரர்களையும், தேவர்களையும், கடவுளர்களையும், புராண நிகழ்ச்சிகளையும் விதம் விதமாய், வியப்பூட்டும் லெச்சணத்தில் பொம்மைகளாய் செதுக்கிப் பொருத்தியிருந்தார்கள். ஒவ்வொரு சக்கரத்தின் மேலும், சற்று இடம் விட்டு, கம்பீரமாய் இரண்டு வெள்ளைக் குதிரைகள் பாய்ந்து ஓடுகிறப் பாவனையில் முன்னங்கால்களைத் தூக்கிக் கொண்டு நின்றிருந்தன மரப் பலகைகளாய்! வடம் பிடித்து இழுத்த அத்தனை மனிதர்களையும் பொய்யாக்கிவிட்டு அந்தக் குதிரைகள்தான் தேரை இழுத்துச் செல்கின்றன என்பது போன்ற தோற்றத்தைத் தந்துக் கொண்டிருந்தன. கூடாரம் போன்றிருந்த தேரின் உச்சிச் சப்பரத்தில் அமர்ந்திருந்த இரண்டு அய்யமார்கள் தங்களின் முன் அலங்காரத் தேவதையாக வைத்திருந்த இரண்டு சிலைகளுக்கு ஆராதனைப் பண்ணிக் கொண்டிருந்தனர். அவர்களின் பக்கத்தில் ஒரு நாயனக்காரரும், ஒரு மேளக்காரரும் தத்தம் பணிகளில் மும்முரமாய் இயங்கிக்கொண்டு... டம்டம் டம டமம்... பிப்பிப்பீ... பீப்பீ...)

தேர் பாதித் தெருவைக் கடந்து வந்திருந் தது. கோவிலுக்குள் சென்று 'அடைய' வேண்டும் என்றால் இன்னும் இரண்டுத் தெருக்களைக் கடந்தாக வேண்டும். எப்படியும் சாயந்தரம் ஆகிவிடும். காலம்பறவே கோயிலிலிருந்துப் புறப்பட்டிருந்தத் தேர் இந்தத் தெருவை அடை வதற்கு மதியம் ஆகியிருந்தது. தேர் இழுப்பு என்றால் சும்மாவா? சாதாரணமாக அசைந்துக் கொடுத்து விடுமா தேர்? சுத்தம் பத்தமாய் தெருக்கள் இருந்தால்தான் அதன் வழியே தேர் போகும்! அதனால்தான் ஆண்டாண்டுக் கால மாய் மேம்பொறந்தச் சாதிகள் தங்கள் தெருக் களின் வழியே மட்டுமே தேரை ஓட்டிச் செல்ல உத்தரவுப் போட்டிருந்தார்கள்! இது பிள்ளைமார்த் தெரு... இதைக் கடந்தால் கோனாக்கமார்த் தெரு... அடுத்து தேவமார்த் தெரு... மூன்றையும் கடந்த பிறகு தேர் நிலைக்கு வந்து விடும்; வந்து விடவேண்டும். பிள்ளைமார்களின் தொகைக்குச் சமானமாய் இருந்திருந்த பறையர்களின் தெருக் கள் கோயிலுக்குக் கிழக்குப் பக்கம், அதுவும் சமீபமாகவே இருந்தன. அங்கெல்லாம் தேர் போவதில்லை. அங்கே சுத்தப்பத்தம் இல்லை யாம். அவர்களெல்லாம் சின்னச்சாதியாம்.

"அய்யனுக்கு?"
"அரோகரா"
"கந்தனுக்கு?"
"அரோகரா"
"வேல்வேல்?"
"வெற்றிவேல்"
"வேல்வேல்?"
"வீரவேல்"
"தேர் அம்பலம்?"
"தில்லை அம்பலம்"



படிப்பகம்

www.padippakam.com

"யார் வாரார் வீதியிலே?"
"அய்யன் வாரார் வீதியிலே?"

சாரமழை மாதிரி ஆர்ப்பாட்டமும் ஆர வாரிப்பும் விட்டு விட்டு முழங்கின. வடம் பிடித்த வர்கள் குதித்துக் கொம்மாளம் போட்டுக் கொண்டு முன்னேறினர். ஆடிப்பாடித் தேர் இழுத் தால் அலுப்பு இருக்காதாம். உற்சாகம் கரைப் புரண்டு ஓடியது.

முறுகிய மீசையோடு நின்றிருந்த ஒரு மேச் சாதி இளவட்டம் இப்போது கோரிக் காலனி ஆனந்தனைப் பார்த்து விட்டான். குறுகுறு மீசையும் முழியுமான இளவட்டம். ஆனந்தனும் இளவட்டம்தான். அவனும் மீசை வைத்திருந் தான். கிடாக்கொம்பு மீசை கறுப்பாய், தாட்டிய மாய்... பார்ப்பதற்கே பயங்கரமாகத் துலங்கி னான். அந்த மேச்சாதிப் பயலுக்கு அடுத்துதான் அவன் வடம் பிடித்து நின்றிருந்தான்.

"எலே... பறப்பய ஒருத்தன் நம்மக் கூடச்சேந்து வடம் பிடிச்சிக்கிட்டு நிக்கிதாம்லே"

மேச்சாதி இளவட்டம் தொண்டைக் கிழியக் கனைத்ததுதான் தாமசம். அடிபட்டுச் சுருண்டு விழுந்த பாம்பு மாதிரி சூழல் அமைதியாயிற்று. சற்றைக்கெல்லாம் சுருண்டு விழுந்த பாம்பு சன்னஞ் சன்னமாய் மூச்செடுத்து நெளிய ஆரம்பித்தது. அங்கங்கே சனங்களின் முனகல்கள். வெள்ளை வெளேர்ச் சுவர்களும் கான்கரீட் கூரைகளுமாக இருந்த அந்தப் பிள்ளைமார்த் தெருவின் மாடிமேல் ஏறிநின்றுப் பார்த்துக் கொண்டிருந்தவர்களுக்குக் கூட சேதி ரொம்ப வெரசலாய் பரவிற்று. "அட பாதரவே... இந்த சின்னசாதிப் பயலுவ இப்படியெல்லாம் குசும்புப் பண்ணுவனாளாக்கும்" என்று ஒவ்வொரு பொம்பளைங்களும் மூக்கின்மேல் விரல்கள் வைத்து விண்ணாளம் பேசத் துவங்கினார்கள். பிள்ளைமார்ப் பொம்பளைகள்.

நெளிந்த பாம்பு மெதுவாகத் தலைத் தூக்கத் தொடங்கியது. தெரு முழுக்கக் கூடி நின்றிருந்த ஆம்பளைகள் எல்லாம் ஒருவர் முகத்தை ஒருவர் வெசனத்துடன் பார்த்துக் கொள்ளத் துவங்கினர். எல்லாம் மேச்சாதி ஆம்பளைகள். பிள்ளைமார், தேவமார், கோனாக்கமார், நாடாக்கமார், செட்டியார், ஆசாரிகள் என்கிற மேச்சாதிகள். வேடிக்கைப் பார்க்க வந்திருந்தப் பறச்சாதிக் கிழடுகள், பொம்பளைகள், சிறுசுகள் எல்லாம் தத்தம் குடும்பங்களுடன் தனியே ஒதுங்கிப்போய் பதுங்கத் துவங்கினார்கள். பறச்சாதி இளவட்டங் கள் அப்படியில்லை. பத்துப் பதினஞ்சுக்கு மேல் வந்திருந்தார்கள். எதற்கும் திட்டம்போட்டே முன்னேற்பாடாய் இடுப்பிலும், பனியனின் பின்புறங்களிலும் ஆயுதங்களுடன் தயாராய்...

பாம்பு சீறத் துவங்கியது இப்போது. 'சீத்சீத்' தென்று கோபம் கொப்பளிக்கும் சீறல்.

"என்னல பாத்துக்கிட்டு நிக்கிய? பறப்பயலுவள அடிச்சி நொறுக்குங்கல"

மீசைக்கார இளவட்டத்தின் ஆதிக்கமான அறைகூவலுக்கு அவனைப் போன்ற மற்றவர்கள் எல்லாம் ஒத்துப்போகத் துவங்கினர்.

கோரிக்காலனி இளசுகளும் முண்டிக் கொண்டு வந்தனர்.

"எவன்ல எங்கள நொறுக்கறது? நெஞ்சிலத் தைரியமிருந்தா துணிஞ்சி வாங்கல பாப்பம்"

உடம்புக்குள் பதுக்கி வைத்திருந்த வெட்டரிவாள், கத்திகளை 'விசுக்விசுக்' கென்று உருவி வெளியெடுத்துக் கொண்டார்கள் அவர்கள். தங்களிடம் ஆயுதங்கள் ஏதும் இல்லாததால் மேச்சாதிக்காரர்கள் திணறிப் போனது உண்மை. இருந்தாலும் தங்கள் கவுரவத்தைக் காப்பாற்றிக் கொள்ளும் அக்கிசியில் தள்ளுமுள்ளில் ஈடுபடலா னார்கள்.

சூழல் கலவரம் ஆயிற்று. வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருந்த சனம் பெருத்தக் கூட்டமெல்லாம் தங்கள் பிள்ளைக் குட்டிகளைத் தூக்கிக் கொண்டு 'தப்பித்தோம் பிழைத்தோம்' என்று சிதறி ஓடினார்கள். நெஞ்சுக் குலையில் திராணி இருந்தவர்கள் மட்டும் ஒருவருக்கொருவர் விரட்டுவதும் அடிப்பதுவுமாக மல்லுக்கு நின்றனர். கோரிக்காலனி இளசுகளின் அரிவாள் முனைகள் மேச்சாதிக்காரர்களின் தேகங்கள்



படிப்பகம்

www.padippakam.com

சிலதைப் பதம் பார்க்கவும் தவறவில்லை. உச்சி வெயிலின் உக்கிரம் வேறு அவர்களைச் சூடாக்கிக் கொண்டிருந்தது.

அங்கங்கே உதிரிகளாய் நின்றிருந்தக் காவல்காரர்கள் எல்லாம் சரம்சரமாய் ஒன்று சேர்ந்துக் கலவரக்காரர்களை அடித்துவிரட்டத் துவங்கினர். மூட்டையிலிருந்துக் கொட்டிய நெல்லிக் காய்களைப் போல கூட்டம் இணுக்கு இணுக்காய் சிதறிக் கொண்டு ஓடியது.

தேர் நடுத்தெருவில் நின்றது. ஒரு சுடு குஞ்சையும் காணவில்லை. அதிசய பாம்பைப் போல அந்தப் பெரிய, நீள வடம் சுருண்டு, வளைந்து, குழைந்துக் கிடந்தது. பிள்ளைமார்கள் பெருத்திருந்த அந்தத் தெருவில் பூக்களின் இதழ்களும், பலூன்களும், சிறுசிறு பிளாஸ்டிக் விளையாட்டுப் பொருட்களும் உடைந்து நொறுங்கி ஒரு குப்பை மேடுபோலக் குமைந்துக் கிடந்தது. கான்கிரீட் வீடுகள் எல்லாம் கதவுகளைச் சாத்திக் கொண்டன. சனங்களின் அணக்க மில்லை. தேரின் உச்சிப் பல்லக்கில் உட்கார்ந் திருந்த அய்யர்களும், நாயன, மேளக்காரர்களும் மட்டுமே நட்டாந்தரத்தில் விடப்பட்டவர்களைப் போல திக்குமுக்காடிக் கொண்டிருந்தனர். நாயனம் நின்று, மேளமும் ஓய்ந்துப் போயி ருந்தது. உள்ளுக்குள் கிலிப் பிடித்துப் போய் உட்கார்ந்திருந்தனர் அவர்கள்.

சற்றைக்கெல்லாம் கோயிலுக்குள் ஓடி, நீண்ட ஏணி ஒன்றைக் கொண்டு வந்துத் தேருக்கு வைத்து, மேலே இருந்தவர்களைப் பொருதி யோடு கீழே இறக்கி விட்டனர் இரண்டு காவல்காரர்கள்.

சிறுபொழுதில் கோயில் தர்மகர்த்தா கொம்பையாத் தேவர் மீசையும் வெள்ளை வேட்டியுமாய் காரில் வந்து இறங்கினார். கூடவே அவரைப்போல மூன்று வெள்ளை வேட்டிகள்... தாட்டியமாயும், தோரணையாயும். விறைப்பாய் நின்றிருந்த போலீஸ் இன்ஸ்பெக்டரை நெருங் கினார்கள்.

"தேர இப்பிடி நடுத்தெருவுலக் கொண்டு வந்து வுட்டுட்டானுவளே... என்னச் செய்றீங்க?"

அதிர்ச்சியும் கலவரமும் மண்டிய முகங்கள். அதிகாரம் பளிச்சிடும் ஆதிக்கப் பார்வைகள்.

"என்னச் செய்றது... கலவரம் நடந்துப் போச்சி... இனி மேலிடத்திலிருந்து உத்தரவு வந்தப் பிறகுதான் எதையும் செய்ய முடியும்."

"இப்படிச் சொன்னா எப்டிங்க? நீங்களே வயர்லசுலக் கேட்டிர வேண்டியதான?"

"வயர்லசுலக் கேட்டாச்சி.. 'நா வந்துப் பாத்துக்கிடுறேன்.. அதுவரைக்கும் அப்படியே தேர் நிக்கட்டும்'னுப் பதில் வந்திருச்சிங்க."

"எல்லாம் அந்தப் பற நாய்கப் பண்றது.. திடீர்னு அவனுவளுக்குத் திமிருப் பிடிச்சிருச்சி.. கோயில் காரியத்துல இப்பிடிக் குழப்பம் பண்ணிட்டானுவளே.. அவனுவள வைக்க வேண்டிய இடத்ல வைக்கணும்."

கைகளைப் பிசைந்துக் கொண்டே அவர்கள் காரில் ஏறித் திரும்பிப் போனார்கள். வானுயரப் பறந்தப் புழுதியில் தேர் மங்கலாகத் தெரிந்தது.

அந்தக் கிராமத்தின் நடுநாயமாக அமர்ந் திருந்த சிவன் கோயிலுக்குத்தான் வருடத்திற்கு ஒருமுறை - சித்திரை மாத இறுதியில் - தேர்த்திரு விழா நடந்துக் கொண்டிருந்தது. பழங்காலக் கோயில். சுற்றி கல்கட்டுச் சுவர்கள். ஒரு இருட்ட றைக்குள் இருந்ததுபோல சிவலிங்கம் இருந்தது. பறைச்சாதி போன்ற பாவப்பட்டவர்களைத் தவிர மற்ற மேச்சாதிக்காரர்கள் எல்லாம் கருவறை வரைச் சென்று வணங்கிவிட்டு வரலாம். கோயி லின் வெளிப் பிரகாரத்திலே நின்றுதான் பாவப் பட்டவர்கள் சேவித்துக் கொள்ள வேண்டும். மறந்து உள்ளே போனால் அடி உதைகள் தான் தர்மமாய் கிடைக்கும். அப்படி எத்தனையோ தடவைகள் நடந்துள்ளன. அப்போதெல்லாம் வாயில்லாப் பூச்சிகளாக அடங்கிக் கிடந்தனர் அவர்கள். மேப்பொறந்தவர்களை முறைத்து ஒரு வார்த்தைப் பேசிவிட முடியாது. மறுநாள் காலம்பற அவர்களின் தோட்டக் காடுகளுக்குத் தான் வேலைச் சோலிகளுக்குப் போயாக வேண்டும். 'என்னிய எதுத்துக்கிட்டே எங்கிட்ட



படிப்பகம்

www.padippakam.com

சோலிக்கு வாரியால நாய?' என்று பிட்டியில் எட்டி மிதித்து விடுவார்கள். வயித்துப் பாட்டுக்கு லோல்பட வேண்டியதாகிப் போய்விடும்.

இத்தனைக்கும் அந்தக் கிராமத்துச் சனங்களில் கால்வாசிப்பேர் பறையர்களாகவே இருந்தனர். பிள்ளைமார்த் தொகைக்கு நேர்ப் பாதிச் சனங்கள். கோயில் திருவிழாவை ஒட்டி பத்து நாட்களும் நடக்கும் மண்டகப் படியில்கூட பறையர்களைச் சேர்த்துக் கொள்வதில்லை. 'வேணுமின்னா பதினொண்ணாம் நாளு திருவிழா முடிஞ்சப் பெறவு அவுங்களத் தனியா மண்டகப்படி எடுத்துக் கொண்டாடச் சொல்லுங்க' என்பது கோவில் தர்மகர்த்தா கொம்பையாத் தேவரின் அனுமதிப்பாய் இருந்தது. 'திருவிழா முடிஞ்சப் பெறவு அந்த மசிரப் புடுங்கின மண்டகப்படி வேண்டாங்கலே' என்று பறைச் சன இளசுகள் சிலர் முசுண்டுப் பண்ணியிருக்க, தர்மகர்த்தாவின் அனுமதிப்பும் அப்புறப்படுத்தப் பட்டிருந்தது.

தேர்த் திருவிழா என்றால்தான் நாலாவூர்ச் சனங்களும் சாதிப் பேதமின்றி, ஊர் உறவுப் பிரிவுமின்றிப் பார்த்து ரசிக்க முடிந்தது. அதிலும் பாவப்பட்டச் சனங்கள் யாரும் வடம் பிடித்து விடக் கூடாது என்பதில் உள்ளூர்ப் பெருந் தலைகள் குறியாய் இருந்தனர். அவர்களுக்குத் தேரிழுக்க உரிமை இல்லையாம். வடத்தைத் தொட்டு விட்டாலே தேர் தீட்டுப் பட்டு விடுமாம். 'சும்மாவா சாதிச் சம்பிரதாயமின்னுச் சொல்லியும் எழுதியும் வச்சிருக்காங்க?' என்று பறையர்களின் காதுபடவே மேச்சாதி வல்லுநர்கள் பரிகாசம் பண்ணினார்கள்.

பறை இளசுகளுக்குப் பொருதி இல்லை. தங்களின் பாட்டனார்களும், பெற்றோர்களும் கமுக்கமாய் அமுங்கிக் கொண்டு நடந்ததைக் கண்டு கேட்டு ஈரக் குலைப் பதறினார்கள். எத்தனை நாட்களுக்குத்தான் அவர்களின் கெக்கலிப்பையும் நக்கலையும் கேட்டுப் பொத்திக்கொண்டு போவது? மேச்சாதிக்காரன் களின் தோட்டக் காடுகளில் வேலைச் சோலிகள் தரவில்லை என்றால் என்னப் பொவுலைத் தேடுவது என்றும் ரோசித்துப் பார்த்தார்கள். அதுக்கொரு வழிக் கிடைக்காமலா போய்விடும் என்று தங்களுக்குள்ளே அசைப்போட்டு ஆறுதலும் அடைந்துக் கொண்டார்கள். அவர்களிடையே, படித்திருந்த சில இளசுகளின் துடுக்குத் தனமானப் பேச்சும் தூண்டி விடுவதாக இருந்தது; சாதகமாய் போயிற்று.

"நம்மளும் மனுசங்கதானவே.. அவனுவ வயக்காட்லச் சோலிப் பாக்கறதுனால வாழ்க்கய வித்துட்டோம்னு அர்த்தமா?"

அந்த நேரம் பார்த்துத்தான் அவர்களின் ஊருக்கு அவர்களின் சமுதாயத் தலைவர் வந்திருந்தார். பட்டித் தொட்டிகளில் எல்லாம் தற்சமயத்தில் பேர் வாங்கிக் கொண்டிருந்தவர். இந்த ஊரிலும் அவரின் கட்சியைத் துவக்க வேண்டும் என்று அந்தத் தெரு இளசுகள் சிலர் சொல்லி அழைத்திருந்ததால் சந்தோசமானச் சந்தோசம் அவருக்கு. என்ன செய்வது.. போராட்டம் இல்லாமல் அரசியல் இல்லை. போராட்டம் இல்லாமல் வாழ்க்கை இல்லை. போராட்டம் இல்லாமல் விடுதலையும் இல்லை.

**ஊ**ரைச் சுற்றி ஒரே காக்கிச் சட்டைகளே காட்சி தந்தன. பலத்தப் பாதுகாப்பு. அவர்களைக் கேட்காமல் ஒரு ஈ, காக்கைக் கூட உள்ளே நுழையவும், வெளியே போகவும் முடியாது என்றிருந்தது.

ஒருநாள் கழித்துத்தான் மாவட்ட ஆட்சித் தலைவர் வந்திருந்தார் தன் தடபுடல் பரிவாரங் களுடன். டில்லிவரைப் போயிருந்தவர் இன்று தான் ஊருக்கு வந்தாராம். நேரே இங்கே வந்து விட்டிருந்தார்.

பஞ்சாயத்து அலுவலகத்திற்குள் வைத்து விசாரணை. சமரச விசாரணைதான்.

மந்தகாசமாயிருந்த மாலைப் பொழுதிலும் எல்லோரும் சூடாகவே நின்றிருந்தனர்.

கொம்பையாத் தேவருக்கு ஆதரவாக நாலைந்து வெள்ளை வேட்டிகளும், சில



படிப்பகம்

www.padippakam.com

வண்ணக்கலர் இளசுகளும். கோரிக்காலனிச் சனங்களுக்கு முன்னிலையாய் அவர்களின் புதிய சமுதாயத் தலைவரும் மற்றும் சிலப் பெரியவர்களும், சில இளசுகளும்.

"இவனுவங்களுக்கெல்லாம் தேரோட வடத்தப் பிடிக்கிறதுக்கு உரிமையே கெடையாது.. ஒரு பிரச்சினையும் இல்லாம ஒழுங்கா ஓடிக்கிட்டிருந்தத் தேர்ல இவனுவ எப்படி வந்து வடம் பிடிச்சி இழுக்கலாம்?"

இது கொம்பையாத் தேவரின் கோபம் தெறிக்கும் வாதம். கம்பீரமாய் மீசையை முறுக்கி விட்டுக்கொண்டு எதிர்த் தரப்பில் இருந்தவர்களை எரித்துப் பொசுக்கி விடுவதைப்போல வெறித் தார். அவரின் வெறிப்புக்குக் காரணம் இல்லாமல் இல்லை. தன்னைப் போலவே தன் எதிரில் - அவர் களின் தலைவருக்குப் பின்னால் - நாற்காலிப் போட்டுச் சமதையாய் அமர்ந்திருந்தப் பறையர் களின் திடீர்த் தைரியத்தை நினைத்துத்தான் வெசனப்பட்டார் அவர்.

அவரின் முறைப்பை அவர்கள் சட்டைச் செய்ததாகத் தெரியவில்லை. அவர்கள் தலை வரின் பேச்சிலிருந்தும் அதுவே வெளிப்பட்ட தாகத் தோன்றியது.

"கோயில் எல்லாருக்கும் பொது.. கோயில் தேர்ல 'அவன் வடம் புடிக்கக் கூடாது.. இவன் வடம் புடிக்கக் கூடாதுங்கிறது ரொம்பத் தப்பு.. தேரோட வடத்தப் பிடிச்சிழுக்க உங்களுக்கு மட்டும் உரிமத் தந்தது யாரு?"

"ஆதிகாலந்தொட்டே அப்படித்தான நடந்துக் கிட்டிருக்கு"

"ஆதிகாலந்தொட்டே எங்கள அடிமையா, தீண்டக் கூடாதவங்களாய் அடிச்சி வெரட்டிக் கிட்டிருக்கிங்க.. உங்கமேலத் தீண்டாம வழக்குப் போடட்டுமா இப்ப? மாவட்ட ஆட்சியர்தான் சாட்சி"

"நீ போடு.. நாங்கப் பாத்துக்கிறோம்"

"என்னத்தப் பாக்கப் போற? நாங்கக் கோயிலுக்குள்ள நொழையுறதத்தான் நீ பாக்கப் போற.. நாங்க வடம்பிடிச்சித் தேரிழுக்கப் போறதப் பாக்கப் போற"

இரண்டு பக்கமுமே கோபம் முசுண்டுப் பிடித்து ஏறியது. இருவரும் தாழ்ந்துப் போறதுக்கோ, சமாதானமாக வருவதற்கோ இஷ்டம் இல்லாதவர்களைப் போலத் தோன்றியது.

மாவட்ட ஆட்சியருக்குப் பொசமுட்டிக் கொண்டு வந்தது.

"நீங்க ரெண்டு பேருமே இப்படி விதாண்டாவாதம் பேசினா ப்ராப்ளத்த எப்படித் தான் சால்வ் பண்றது? சொல்லுங்க"

உரித்தக் கோழி மாதிரி செக்கச் செவே லென்று மாவட்ட ஆட்சியர் இருந்தார். வடக்கத்திக்காரராக இருக்க வேண்டும். ஆனால் தமிழ் நன்றாகப் பேசினார். அவருக்குப் பின்னே நாற்காலிகள் போட்டு வருவாய்த் துறை அதிகாரிகள், கிராம அதிகாரிகள், சிப்பந்திகள் என்று தடபுடலான ஆட்கள். அவர்களை வட்டமிட்டு நின்றமேனிக்கே காக்கிச் சட்டைக் காவலர்கள், மாவட்ட காவல்துறைக் கண்காணிப் பாளர்கள், ஆய்வாளர்கள், உதவி ஆய்வாளர்கள் என்று...

எதிர்தரப்பிலும் குறைச்சலாய் இல்லை. இரு பிரிவினரும் தனித்தனியே பிரிந்து அமர்ந் திருந்த போதிலும் அவர்களுக்குப் பின்னாடியும் பெருத்த சனத்திரள் நின்றிருந்தது. ஆளாளுக்குக் கண்ட மேனிக்குப் பேசிக்கொண்டு, ஒரு நிலை யான முடிவுக்கு வரமுடியாதுப் பண்ணினார்கள். திடீரென்று ஒரு பிரிவினரில் சிலர் சீறிக் கொண்டு எழவும், அவர்களை அடுத்து மற்றப் பிரிவினரில் சிலர் அதே வெசனத்துடன் எழுந்து நின்றுக் கொக்கரிக்கவும்.. சற்றைக்கெல்லாம் அது சன்னஞ் சன்னமாய்க் குறைந்து அமைதிப் படவுமாக.. மாறிமாறி நிகழ்ந்தன.



படிப்பகம்

www.padippakam.com

மாவட்ட ஆட்சியர் பொறுதித் தாளாமல் ஒரு முடிவுக்கு வந்தார்..

"இத பாருங்க.. நீங்க இப்படியே சண்டப் போட்டுக்கிட்டிருந்தா என்னால ஒரு 'சொலுயுசனுக்கும் வர முடியாது.. சீக்கிரமா ஒரு முடிவுக்கு வாங்க.. இல்லன்னா நாச் சொல்றதக் கேளுங்க. எல்லாருக்குமே தேரிழுக்க 'ரைட்ஸ்' இருக்கு.. ஒரு பிரிவினரை இழுக்க விடக் கூடாதுங்கிறது சட்டப்படி குற்றம்.. சும்மா இல்ல தீண்டாமைக் குற்றம்.. ஸோ, நீங்க ரெண்டு பேருமே சேர்ந்துத் தேரை இழுக்கறதுதான் நியாயம்.. அதுல ஏதாவது 'டிஸ்டர்ப்' வந்தா சட்டப்படி நடவடிக்கை எடுக்க வேண்டிய திருக்கும்.. எஸ்.. போலீஸ் செக்யூரிட்டி தேவைப் படும். தேரை இப்படி நடுத்தெருவுலக் கொண்டு வந்து விட்டுட்டுச் சும்மாப் பாத்துக்கிட்டு இருக்க முடியாது.. சீக்கிரமா ஒரு முடிவுக்கு வந்தா கணும்.. எல்லாருமாச் சேர்ந்துத் தேரை இழுத்துக் கொண்டுபோய் கோயில்ல விடப் பாருங்க."

"அவனுவ எல்லாம் வடத்தத் தொட்டா நாங்க எல்லாம் வடத்தத் தொட மாட்டோம்"

கொம்பையாத் தேவர் மீசையை முறுக்கிக் கொண்டு பதிலுறுத்தார். அவரின் பதிலை ஆமோதிப்பதுபோல அவருக்குப் பின்னே நின்றிருந்தவர்கள் எல்லோரும் பெருமிசமாய் தலையாட்டிக் கொண்டனர்.

"இதான் ஒங்க முடிவா?"

மாவட்ட ஆட்சியர் தலை நிமிர்ந்துப் பார்த்தார். கண்களில் சூடு தகித்ததுத் தெரிந்தது. இருந்தாலும் கோபத்தை அடக்கிக் கொண்டார். மிகவும் தந்திரமாகக் கையாள வேண்டும். இல்லையேல் சாதிக் கலவரமாக வெடித்துவிடச் சாத்தியம் உண்டு என்று மனசைத் தேற்றிக் கொண்டார்.

சூரியன் மேற்கே சாய்ந்திருந்தது. சாலையில் ஓடிய வாகனங்களின் இரைச்சலில் அடிக்கடி அமைதிக்குப் பங்கம் நிகழ்ந்துக் கொண்டிருப்பதாகத் தோன்றியது.

கொம்பையாத் தேவருக்கும் கோபம் தலைக்கேறியிருக்க வேண்டும். தன் மிரட்டலும் அதிகாரமும் பலிக்கவில்லையே என்கிற கோபம்.

விருட்டென்று எழுந்து நின்றார். குரலை உச்சத்திற்குக் கொண்டு பேசினார்..

"எந்திரிங்கலே.. தேர இழுக்கறது யாருன்னுப் பாத்திருவோம்.. கலெக்டரய்யா ஒரு முடிவுக்கு வரட்டும்.. அதுவரைக்கும் நாம ஏன் வீணா இங்குக் காத்துக் கெடக்கணும்?"

பொத்தான் தட்டிவிட்ட எந்திரம் போலப் பொடுபொடுவென்று வெளியேறிப் போனார் அவர். அதிகார நடை. அவரின் பின்னே மற்றவர்களும் வெரசலாய் எழுந்து நின்று வெளியேறத் துவங்கினர்.

சன்னமாய் சலசலப்பு ஏற்படுவதற்குரிய அறிகுறிகள் புலப்பட்டன அங்கே. காக்கிச் சட்டைகள் கணிசமாய் நின்றிருந்ததால் பிரச்சினையை முளையிலே கிள்ளி எறிந்தனர்.

கோரிக்காலனிச் சனங்கள் மட்டும் தங்கள் தலைவரோடு தனித்துவிடப் பட்டிருந்தனர் இப்போது. அடுத்து என்னச் செய்வது என்ற ஆழ்ந்தச் சிந்தனையோடு.

மாவட்ட ஆட்சியருக்குச் சற்று நிம்மதியாகத் தோன்றியது. ஒரு பிரிவினர் வெளியேறிப் போயிருந்ததால் அங்கே சத்தமும் சலசலப்பும் குறைந்து, சூழல் நெகிழ்வடைந்துக் கொண்டிருப்பதான நிம்மதி.

திடீரென ஒரு முடிவுக்கு வந்தார் ஆட்சியர். "ஏங்க, அவுங்கள்லாம்தான் போயாச்சில்ல.. இப்போ நீங்க மட்டும் நின்னுத் தேர இழுத்து வந்துக் கோயிலுக்குள்ள விடலாமில்லையா? நடுத்தெருவிலே இப்படித் தேர விட்டுக்கிட்டிருக்கிறது நல்லாவா இருக்கிது? ஊர் உலகம் பழிக்காதா?"

யாசிக்காதக் குறையாக அவர் கெஞ்சினார். ஊர் உலகம் பழிக்கும் என்பதைவிட அவரின் மேலிடம் அவரைக் கேள்விக் கேட்டுக் குடைந்



படிப்பகம்

www.padippakam.com

தெடுக்குமே என்பதே அவரின் தலையாய ஆதங்கமாக இருந்தது.

கோரிக்காலனிச் சனங்களின் மத்தியிலிருந்து இப்போது ஆவேசமாய் ஒரு குரல் வந்து விழுந்தது..

"இல்லிங்க அய்யா.. நாங்க மட்டும் தனியா நின்னுத் தேரிழுக்கறது எங்க எண்ணமில்ல.. எல்லோருடனும் ஒண்ணா மண்ணா நின்னு இழுக்கறதுதான் எங்க ஆச.. அதானச் சரி? கோயிலுக்குள்ளத் தேரு வந்து நின்னாலும் சரி, நிக்காட்டியும் சரி, எங்களுக்கு அதப் பத்திக் கவல இல்லிங்க."

உறுதியாக ஒலித்தது அந்தக் குரல். அதற்கு ஆதரவுத் தருவது போலவே மற்றச் சனங்களும் "ஆமாங்கய்யா" என்று ஒட்டு மொத்தமாய் சத்தம் போட்டுச் சொன்னார்கள்.

மாவட்ட ஆட்சியருக்குத்தான் மண்டைக் குழம்பிப் போயிற்று. இரண்டு பிரிவினரும் இரண்டு திசைகளுக்கு இழுக்கிறார்களே என்பதை நினைத்துப் பெருமூச்செறிந்தார். எப்படித்தான் இதற்குத் தீர்வு காண்பதோ என்றிருந்தது அவருக்கு. கொஞ்ச நேரம் மவுனம் காத்தார்.

சட்டென்று அமைதியை உடைத்துக் கொண்டு எழுந்து நின்றார்.

"சரி.. இந்த விசயத்த நா முதலமைச்சர் வரைக்குக் கொண்டு போய்தான் முடிவெடுக்கணும்.. அதுவரைக்கும் எதுவும் பிரச்னைப் பண்ணிக் கலவரமாக்கிராதிங்க.. லா அன்ட் ஆர்டர நா கையில எடுக்கும்படி வச்சிடாதிங்க"

ஒரு பிரசங்கியைப் போல அழுத்தமாய், அதே நேரம் ஆவேசமாய் கனைத்து விட்டு வெளியேறிப் போனார் ஆட்சியர்.

அவரின் பின்னே அரசாங்க உறுப்பினர்கள் எல்லாம் தடதடவென்று ஓடினார்கள். கோரிக் காலனிச் சனங்கள் யாரும் போகவில்லை.

# தலைமுறை பற்றிய குறும்படம்

- பாலைநிலவன்

செருப்பணியாதவர்களின்

வழித்தடங்கள் குரூரமளிக்கிறது
பசித்தவர்கள் நடந்த வழித்தடங்களில்
குருதி மணத்துக்கொண்டிருக்கிறது

வயிற்றை அறுத்தெறிந்தவர்களின்

எலும்புக்கூடுகளை பார்க்க பயமாயிருக்கிறது.

நுகத்தை குடம்போல்
சுமந்தவர்கள்
சருகுகளாய் உதிர்வதை

வெயிலில் பார்த்தேன்

உடலை ஆயுதம்போல் வைத்திருக்கும் அவர்கள்
காலகாலமாய் மொழிந்தார்கள்
வார்த்தைகளால் ஓவியம் பண்ணவியலாததொரு

காதல்

வழித்தடத்தில் அமர்ந்துவிட்டேன்
பசித்தலைமோதிப் பயணித்தவர்கள்

வரும்போது

புசிக்க ஏதாவது கொண்டு வருவார்கள்
அல்லது

எஜமானர்களின் தலைகள்



படிப்பகம்

www.padippakam.com

# இடைவார்ப்பட்டை சமயன்

- ப்ரதிபா ஜெயச்சந்திரன்

நேற்றுப் பொழுசாய பெரியகருப்பத் தேவரின் மாட்டை ஊருணியில் குளிப்பாட்டி விட்டு மந்தையம்மன் கோயில் வழியாக பொட்டக் காட்டினூடே நடந்துவரும்போது புறம்போக்குக் கட்டுக்காலில் ஓங்கு தாங்காய் வளர்ந்து நின்ற பனைகள் மட்டை கழிக்காமல் காய்ந்து கருக்குகள் பளபளத்துக் கிடப்பதைப் பார்த்தார் சமயன். சாரோலைகள் நிறைய மண்டிக் கிடந்தன. குருத்தோலைகளும் பஞ்சமின்றி இருந்தன - நார்ப்பெட்டி முடையலாம். நேற்றே நினைத்துக் கொண்டது போல - நாளைக்கு வேலையில்லை பனைகளை ஒரு கை பார்க்கலாம் - கோழி கூப்பிடக் கிளம்பியாச்சு.

சமயனைக் கண்டால் நாய்கள் ஓடி ஒளியும் பயத்துடன் குரைத்துக் கொண்டே. வாசலில் இருந்த மண்சட்டியிலிருந்து தண்ணீரைக் கைகளில் அள்ளி முகம் கழுவி வாய் கொப்பளித்துக் கொண்டார். கோமணத்திற்கு மேல் கட்டியிருந்த லங்கோட்டை அவிழ்த்து முகத்தைத் துடைத்து விட்டு மீண்டும் லங்கோட்டை சரியாகக் கட்டி எடவார்ப்பட்டையை இறுக்கிக் கட்டிக் கொண்டார்.

எடவார்ப்பட்டையில் நிறையக் கள்ளப் பைகள் உண்டு. பஞ்சவர்ணத்திற்குத் தெரியாமல் கொஞ்சம் சில்லறைகளை வைத்துக் கொள்வார். இன்னொரு பையில் பொடிமட்டை, இரண்டு மூன்று தானா பீனா சொக்கலால் ராம்சேட் பீடி, சின்னதாய்த் தீப்பெட்டிப் பட்டை, ஐந்தாறு கொளுத்தாத குச்சிகள், அத்தனையும் புடைத்துக் கொண்டு இருக்கும்.

சமயன் தாட்டியமான ஆள். முறுக்கு மீசை, சின்னக் கறுப்பு முகத்தில் குறும்புத்தனத்தை வெளிப்படுத்தும். தடையைத் தோளிலும், அரிவாளை இடுப்பிலும் தொங்கவிட்டிருந்தார்.

சொல்லிவிட்டுப் போவதற்காக படுத்திருந்த பஞ்சவர்ணத்தின் காலில் ஒரு எத்து எத்தினார்.

‘அட மூதி... சும்மா போகமாட்ட, காலங்காத்தால காலால எட்டி ஓதைக்கிறியே.’ தூக்கத்தில் பஞ்சவர்ணம் கோபமாய் எரிந்து விழுந்தாள்.

‘கோவிச்சுக்காதளா... பொட்டக் காட்டுச் செம ஓல வெட்டப் போறேன்... கஞ்சி கொண் டாந்திருளா... வரட்டுமா... கோவத்தப்பாரு சிறுக்கிக்கு...’ பஞ்சவர்ணத்தின் மாரை ஒரு அமுக்கு அமுக்கிவிட்டு செருமலோடு வெளியே போனார்.

‘எடுவட்ட பய’ பஞ்சவர்ணத்தின் முனகல் காற்றில் மகிழ்ச்சியைக் கரைத்தது.

ஊருணிக் கரையோரப் புதருக்குள் சலவாதிக்குப் போய், கால் கழுவிவிட்டு வந்து வேகமாக எட்டுப் போட்டார் சமயன். இன்னும் பகல் கண்விழிக்கவில்லை. துவரங்காட்டின் பசிய வாசம் சுகந்தமாய் மூக்கில் நெடி கிளப்பியது. கம்மங்காட்டின் பிஞ்சுக் கதிர்களின் மகரந்த மணம் மனதில் கிளர்ச்சியை உண்டு பண்ணியது.

கட்டுக்காலைப் பிடித்தாச்சு. ஏறுவதற்கு வாட்டம் இல்லாமல் இருந்த பனை மட்டைகளை முதலில் கழித்துவிட்டு பன்னாடைகளைப் பிய்த்தெறிந்துவிட்டு பனைகளில் தடைபோட்டு ஏறி சரசரவென சாரோலைகளை வெட்டித் தள்ளினார். மரத்திற்கு ஒன்று என்று குருத்தோலை யை வெட்டி சூதானமாகக் கீழே போட்டார். இன்னும் பாதிக் கட்டுக்கால் பனைகள் மீதமிருக்க கொஞ்சம் களைப்புதீர உருமாலை அவிழ்த்துத் தோளில் போட்டுக் கொண்டு உட்கார்ந்தார்.



படிப்பகம்

www.padippakam.com

வெயில் மேலேறிச் சுள்ளியது. தூரத்தில் பஞ்ச வர்ணம் கஞ்சி எடுத்து வந்து கொண்டிருந்தாள்.

'இந்தா, மத்தியானத்துக்கும் சேத்துக் கொண்டு வந்திருக்கேன். குடிச்சுக்கோ.. ம்... காசு குடு, அரிசி வாங்கி ரவைக்கிக் கஞ்சி காய்ச்சணும்." வியர்வையை வழித்து எறிந்து கொண்டு கேட்டாள்.

சமயன் எடவார்ப்பட்டைப் பையிலிருந்து ஒரு பத்து ரூபாய் எடுத்துக் கொடுத்தார்.

'பொழுது போறதுக்கு முன்ன வீட்டுக்கு வந்து சேரு' பஞ்சவர்ணம் கிளம்பிவிட்டாள்.

சமயன் கஞ்சிக் கலயத்தின் மூடியைத் திறந்து பார்த்தார். கலயம் நிறையக் கம்மங்கஞ்சி கரைத்து இருந்தது. மேலே அலுமினியக் கிண்ணத்தில் துவையல்.

சின்ன வயசில் நாலாவது படிக்கும்போது ரெட்டிவீட்டு வரதராஜி சொன்னதைக் கேட்டு, கூடப்படிக்கும் ஆண்டாளின் பாவாடை நாடாவின் உருவாஞ்சுருக்கை இழுத்துவிட்டு அவளை அம்மணமாக்கி, வாத்தியாரிடம் பிரம்படி வாங்கிய ஞாபகம்தான் வரும் - அவளைப் பார்க்கும் போதெல்லாம். ஆண்டாள் அந்த வழியாக வந்து கொண்டிருந்தாள். அவளிடம் ஏதாவது எடக்குப் பண்ண வேண்டும் போல் தோன்றியது சமயனாருக்கு.

பனையடியில் உட்கார்ந்தார். தன் குறியை லங்கோட்டின் விளிம்புக்கு மேல் தெரியும்படி வைத்துக் கொண்டார். அதைப் பார்க்க உரித்த வெங்காயத்தை மடியில் கட்டிக் கொண்டது போல் தெரிந்தது. வலது கையில் துவையலும், இடது கையில் கஞ்சிக் கலயமும் வைத்துக் கொண்டார். ஆண்டாள் நெருங்கி நடந்து வந்து கொண்டிருந்தாள்.

'ஆத்தாடி ஆண்டாளு, மடீல வெங்காயம் உரிச்சு வச்சிருக்கேன்; சித்தை எடுத்துக் குடுத்திட்டுப் போம்மா' சமயன் கெஞ்சலாகக் கேட்டார்.



'அட, ஒனக்கு வேற வேலயே இல்லை.'

'ஒங்கையால எடுத்துக் குடுத்தா.. ஒனக்குக் கோடிப் புண்ணியம்.. ரெட்டி வீடு ஏழு தலைமொறைக்கும் நல்லா இருக்கும்'.

'சரி, எங்க வச்சிருக்க...'

'இந்தா இங்கதான் தாயி...' சமயன் தொப்புளுக்குக் கிழே கண்ணால் காட்டினார்.

'வெங்காயம் வச்சிருக்கிற எடத்தப் பாரேன்...!' ஆண்டாள் வெங்காயத்தை எடுத்தாள். மெதுக்கென்ற ஸ்மரணையில் அது வெங்காயம் இல்லை என்று புரிந்து கொண்டாள்.

'ஒவ்' என்று ஓங்கரிப்பது போல் செய்தாள். 'கருமம்.. கருமம்... காலங்காத்தால... தூத்தேறி...' வெட்கத்தை மறைத்துக் கொண்டு வேகமாக நடந்தாள்.



படிப்பகம்

www.padippakam.com

'ஆண்டாளு, இன்னிக்கு ஒனக்கு யோகந்தான் போ... நரி மொகத்துல முளிச்சிட்டு வந்திருக்க போல' என்றார் சமயன்.

சமயனுக்கு மனதில் புதுத் தெம்பும் கிளர்ச்சியும் பரவியது. வேலை மளமளவென்று ஆனது. சாரோலைகளும் குருத்தோலைகளும் சுமக்கும் மட்டும் மட்டையோடு கட்டி எடுத்துக் கொண்டுவந்து வீட்டு வாசலில் போட்டார். பொழுது சாய்ந்துவிட்டிருந்தது.

கழுத்திலும், மார்பிலும், பின்னங்கால்களிலும் உப்புக்குடைந்து போயிருந்தது. உடம்பெல்லாம் நமைச்சல். சமயன், வீட்டெதிரில் உள்ள தட்டித் தடுப்பிற்குள் தண்ணீர் கொண்டு வந்து வைத்துக் குளிக்க ஆரம்பித்தார்.

சமையல் முடுக்கில் பஞ்சவர்ணம். அடுப்பில் எரிந்த எள்ளுமார்கள் புகையை ஏகமாய்க் கிளப்பிக் கொண்டிருந்தன. சுவற்று ஆணியில் மாட்டி வைத்த கைவிளக்கு புகைவெளியில் மங்கலாக வெளிச்சம் உமிழ்ந்து கொண்டிருந்தது.

சமையல் முடித்து புகை மூட்டம் தாங்காது, வெளியில் திண்ணையில் உட்கார வந்த பஞ்சவர்ணத்திற்கு பகீரென்றிருந்தது. அந்த மங்கல் வெளிச்சத்தில் திண்ணையில் ஒரு நாகம் படமெடுத்து நிற்பது தெரிந்தது. அதன் அசையாத கோலம், உக்கிரத்தை வெளிப்படுத்தி பார்ப்போரை நடுங்கச் செய்தது. பயத்தில் அலறிவிட்டாள். அக்கம் பக்கத்தில் இருப்பவர்கள் எல்லாம் ஓடிவந்துவிட்டார்கள். அனைவருக்கும் இதைப் பார்க்க திக்கென்றிருந்தது.

ஒருவருக்கும் கம்பெடுத்து அதை அடிக்க வேண்டுமென்று துணிச்சல் இல்லை. ஆளாளுக்கு யோசனை சொல்லிக் கொண்டிருந்தார்கள். 'நல்லது' (நல்ல பாம்பு) வர்ற வீடு நல்ல வீடுப்பா.. அத அடிக்கக்கூடாது.. போய் கற்பூரம் ஏத்தும்மா' என்றார் ஒருவர்.

'வக்காளி இத்தன பேரு நிக்கிறோம்.. அது கொஞ்சமாச்சும் அசைஞ்சு குடுக்குதா பாரேன்.. என்ன தெகிரியம் பாரு...'

'தெரியாம யாராவது திண்ணைல ஒக்காந்திருந்தா, என்ன கெதி ஆகியிருக்கும்!'

'வாய மூடுங்கடா.. ஆள அடையாளம் வச்சுக்கிட்டு நாளப்பின்ன கொத்தீரப் போகுது'

வைரவன் மட்டும் துணிச்சலுடன் பாம்பை அடிக்க ஒரு தடியை எடுத்து வந்தான். பாம்பு எந்தப் பக்கம் வேண்டுமானாலும் தப்பி ஓட முயற்சிக்கலாம். யார் காலிலும் கொத்தலாம். ஆளுக்கொரு பக்கம் ஓட ஆயத்தமாக இருந்தனர். வைரவன் தடியோடு பாம்பை நெருங்கிக் கொண்டிருந்தான்.

குளித்து முடித்து வெளியே வந்த சமயனுக்கு வீட்டின் முன்னால் இவ்வளவு கூட்டத்தைப் பார்த்தும் மனதில் கலவரம் மூண்டது.

'என்ன ஆச்சு?' திகிலுடன் கேட்டார் சமயன். 'வக்காளி நீ இங்கதான் இருக்கியா மாமா... இங்க பாரு.. உன் வீட்டுத் திண்ணைல பாம்பு படமெடுத்து நிக்கிது.'

லங்கோடு இறுக்கமின்றி இருந்தது. சமயன் சுதாரித்துக் கொண்டார்.

"டேய் மாப்ளே.. கம்பக் கீழே போடு, நான் பாத்துக்கிறேன்... பாம்ப அடிச்சா ஒங்கக்கா கௌவியாயிடப் போறா... செத்த ஒதுங்கு."

கூட்டம் ஒதுங்கியது. சமயனை ஆவலாகப் பார்த்தது. சமயன் மெதுவாக நெருங்கி திண்ணையில் படமெடுத்து நின்ற பாம்பை நோக்கிக் கைநீட்டி எடவார்ப்பட்டையை எடுத்து இடுப்பில் கட்டிக் கொண்டார்.

●



படிப்பகம்

www.padippakam.com

# தன் வரலாறு :

## வல்லிக்கண்ணனின் "வாழ்க்கைச் சுவடுகள்"

## உண்மை - ஏற்கனவே தயாரிக்கப்பட்டிராத சொற்களில் வருகிறது

- பா. செயப்பிரகாசம்



பூமியில் எந்தச் சாதாரணின் அனுபவங்களும் சாதாரணமானவை அல்ல. இவர்கள் எல்லோருடையவையும் கனமானவை; வித்தியாசமானவை.

ஒவ்வொருவருடைய வாழ்வுச் சம்பவங்களும், அவைகளை அவர் உள் வாங்கலும் வித்தியாசப்பட்டவை; அதனாலேயே சுவாரசியமானவை; பதிவு செய்யப்படவேண்டியவை.

ஆனால் எல்லோரும் பதிவு செய்வதில்லை என்பதொரு யதார்த்தம். அதற்கான வெளிப்பாட்டுத் திறனும், வெளிப்பாட்டுவாய்ப்பும் எல்லோருக்கும் கிடைப்பதில்லை.

தமிழ் இலக்கிய வகைப்பாட்டில், தன்வரலாறுகள் மிகவும் குறைவு. இருப்பவைகளில் புனைவு அற்ற, மிகை அர்த்தம் செருகப்படாத வெளிப்பாடுகள் கை விரல்கள் எண்ணிக்கை தான்.

பிறமொழிகள், இவ்வகை ஆதாரங்களை அதிகமாகவே கொண்டுள்ளன. உதாரணமாக பஞ்சாபி மொழி. அறியப்பட்ட இலக்கியவாதிகள் தருவது மட்டுமே தன்வரலாறு அல்ல; ஒரு விளையாட்டு வீரன், அல்லது எல்லைப் பாதுகாப்பு என்ற பெயரில் சபிக்கப்பட்ட வாழ்க்கையுள்ள ராணுவ உடைக்காரன் எழுதுவது கூட தன்வரலாறாக மதிக்கப்படுகிறது. குறிப்பாக, கன்னடத்தில் சித்தலிங்கையாவின், 'ஊரும் சேரியும்', அரவிந்த மாளகத்தியின் 'கவர்மெண்ட் பிராமணன்' தலித் இலக்கிய முன்னோடிகளின் தன் வரலாறுகளாக சொல்லப்பட்டன.

தலித்துகளுடைய தன்வரலாறு, தனி வரலாறு ஆகும். இவ்வாறு வகைப்படுத்துவது இலக்கியத்தைக் கூறுபோடுவதோ, ஒரு பிரிவுக்கு தூபம் போடுவதோ ஆகாது. அப்படியே வைத்துக் கொள்வதும் தவறில்லை. அவர்களுக்கு அதற்கான எல்லாத் தகுதிகளும் இருக்கின்றன. கடைசிக்கும் கடைசியாய், கீழுக்கும் கீழாய் வைக்கப்பட்ட



படிப்பகம்

www.padippakam.com

அவர்களின் வாழ்தலில், பொருளாதாரத்தில், சுவாசிப்பிலும் ஏவப்பட்ட அடக்குமுறை; மூச்சுக்காற்றைக் கூட அளந்து விட அவன் விதிக்கப்பட்டிருக்கிறான். உடலியல் வன்முறை மட்டுமல்ல; உளவியல் வன்முறை அதை விட ஆயிரம் மடங்கு அதிகம்.

அவர்களுடைய வலியை அவர்களே சொல்லி "வாய் ஆத்துகிற" தலித் தன் வரலாறுகள், தமிழில் தலித் எழுத்தாளர்களிடமிருந்தும் வரவில்லை.

சுருக்கு, சங்கதி - இந்நூல்களெல்லாம் தன்வரலாறுகளே என்கிறார் பாமா. புதினம், புனைகதை என்று கூடுதலாக அதற்குப் பெயர் கொடுத்துக் கொண்டார்கள் என்கிறார். ஆனால் தன்வரலாறு என்று பதிவு செய்வதற்கும், புனைகதை, நாவல் என எழுதுவதற்கும் பாரிய வித்தியாசங்கள் உண்டு; அது பதிவுசெய்வது; இது எழுதப்படுவது.

தன் வரலாற்றைத் தானே தருவதில், இதுவரை அறியப்படாத உண்மைகள் வெளிவருகின்றன; குறிப்பிட்ட கால சமுதாய, அரசியல், பொருளாதார சித்திரங்களை தன்னுடன் இணைத்துக் கூட்டிக் கொண்டு வருகிறது.

தன் வரலாற்றைத் தானே முன் வைக்காமல் போவதில் பேரிழப்புகள் பல சம்பவிக்கின்றன.

முதல் இழப்பு : ஒரு மனிதருடைய நாட்குறிப்பேடு, கடிதங்கள், குறிப்புகள் மற்றவர்களுடன் நடத்திய உரையாடல்கள் என்பவைகளையெல்லாம் ஆவண ரீதியாகச் சேகரித்து, தொகுத்து, தேர்வு செய்து அவரைப் பற்றி எழுதுவது பெரும் பணியாகி விடுகிறது. இறுதியில், வெளிப்படுத்து கிற பொறுப்பு இன்னொரு தோள்களுக்கு மாறிவிடுகிறது.

இன்னொரு இழப்பு : வெளிப்படுத்துகிறவர், அவருடைய சார்பாளர் அல்லது எதிர்ப்பாளராக இருந்து விட்டால் நேர்கிற கொடூரம், எழுத்து தர்மத்தையே, தூக்கி எறிந்து எள்ளி நகையாடுகிறதாக ஆகிவிடுகிறது.

தன்வரலாறாகட்டும், மற்றவர் வரலாறாகட்டும் - நேர்மை அதன் அளவுகோல். கபடு படாமல் சொல்லுதல் அதன் உள்ளோடும் விதி.

இந்தத் தொடர்பில், எனக்குச் சுயமாக நேர்ந்த அனுபவத்தை தருதல் சரியாக அமையும். 1978-ல் சென்னை தியாகராய நகரிலுள்ள காமராசர் இல்லம் அரசுடமையாக்கப்பட்ட போது, அங்குள்ள பொருட்களைப் பட்டியலிடும் அலுவலர் பொறுப்பில் இருந்தேன். அங்கு கண்டவைகளில் ஒன்று விருதுநகர் தொகுதி பற்றி, காமராசர் கைப்பட எழுதிய நோட்டுப் புத்தகம். அதில் விருதுநகர் தொகுதி வாக்காளர்கள் கிராம வாரியாக, ஒவ்வொரு ஊருக்கும் சாதிவாரியாக எழுதப்பட்டிருந்தது. ஒவ்வொரு ஊருக்கும் ஒவ்வொரு தாள்.

மற்றொன்று, 1967-ல் தி.மு.க. ஆட்சிக்கு வந்த, சுறுசுறுப்பான நேரம். கடலூரைச் சேர்ந்த ஒரு காங்கிரஸ் பிரமுகர், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்; தனக்கு போட்டியிட வாய்ப்புக் கிடைக்காததால், காங்கிரசையும் காமராசரையும் பழித்து முதலமைச்சர் அண்ணாவுக்கு எழுதிய கடிதம். தி.மு.க.-வில் இணைந்து உண்மையாகப் பாடுபடுவேன் என ஒப்புதல் வாக்குமூலம் அதில் காணப்பட்டது. ஆச்சரியமானது இந்தக் கட்சி தாவல் கடிதம் அல்ல. அண்ணாவில் கைகளிலிருந்து தாவி, அது எப்படி காமராசரின் கைக்குப் போய் விழுந்தது என்ற கேள்விதான். எந்த புறா தன் அலகில் எடுத்துக் கொண்டு காமராசரின் வீட்டில் போய்ச் சேர்த்தது? அது காமராசர் தமிழகத் தேர்தலில் தோல்வியுற்று நொந்து நொம்பலப்பட்டிருந்த காலம். காமராசரின் அணுக்கப் பணியாளராக இருந்து, வாழ்ந்து அவருடைய பொருட்களை ஒப்படைக்கிறபோது உடன் இருந்த ஒருவர், முதலமைச்சர் அண்ணாவே காமராசரிடம் இக்கடிதத்தைச் சேர்ப்பிக்கச் செய்தார் என்றார்.

இவ்விரு தகவல்களும் இவ்விரு தலைவர்களது வாழ்க்கை வரலாற்றை வரைந்தவர்களால் கண்டுகொள்ளப்படவில்லை. இதுதான் பேரிழப்பு என்று சுட்டப்பட வேண்டியது. இந்தத் தரவுகள், இந்தத் தலைவர்களது அரசியல் கலாச் சாரத்தை, குணாம்சத்தை வெளிப்படுத்துகிற ஆவணங்கள்.



படிப்பகம்

www.padippakam.com

வல்லிக்கண்ணன் சில நாவல்களின் பல சிறுகதைகளின் ஆசிரியர். சிறுகதை வடிப்பும் நாவல் வரைவும் புனைவியல் தன்மை கொண்டவை. வாழ்வியலோடு பொருந்துகிற கற்பனை வியலோடு இணைந்து நடை பழகுபவை. ஒரு படைப்பாளியின் புனைவியல் சாரம் ஊறிய வல்லிக்கண்ணன், தன்வரலாற்றைத் தருகிற போது சிறுகதையாசிரியனை நெருங்கவிடாமல் தொலைவில் நிறுத்துகிறார். நாவலாசிரியனை, அவனுடைய நடமாட்டம் தெரியாமல் விரட்டி யடித்திருக்கிறார். புனைகதை குணங்களைத் தூரவிலக்கி, நடந்த சம்பவங்களை அலுங்காமல் குலுங்காமல் அவ்வாறே வைத்துப் போகிறார்.

இவ்வாறான தன்வரலாற்றில் தானொருவரே பல நேரங்களில் சாட்சியாக இருக்க முடியும்.

புத்தகங்களில் படித்திருந்த பல வரலாற்று நிகழ்வுகள் என்னுள் வேலை செய்தன. பெயர் பெற்ற ஆங்கில நாவலாசிரியன் கவிஞன் ஆலிவர் கோல்டுஸ்மித் நடந்து நடந்தே ஐரோப்பா முழுதும் பயணம் செய்தான். ரஷ்ய எழுத்தாளன் மார்க்சிம் கார்க்கி நடந்து நடந்தே ரஷ்யாவின் நீள அகலங்களைக் கண்டறிந்தான். இத்தாலிய சர்வாதிகாரியாக வளர்ந்துவிட்ட பெனிட்டோ முசோலினி பையில் மூன்றே மூன்று காசுகளோடு தொலைதூரக் கிராமத்தி லிருந்து புறப்பட்டு நடந்தே ரோம் நகரை அடைந்தான்.

நடப்பது ஒன்றும் சிரமமான காரியமில்லை என்று மனம்சொல்ல, எழுத்தாளனாகும் இலட்சியத்துடன் நடையாய் நடக்கிறார். திருநெல்வேலியிலிருந்து சென்னை 400 மைல் தூரம். தினசரி மைல் 30 நடக்கலாம். அப்படி நடந்தால் 15 நாட்களில் சென்னை போய்ச்சேர்ந்து விடலாம் என்று கணக்குப் போட்டு, 1942 மே மாதம் 24ம் நாள் அதிகாலையில் புறப்பட்டு, அம்மாவை, அண்ணனை, உறவைப் பிரிந்து புறப்பட்டபோது அவரிடம் இருந்தவை எழுத்தாளராக மட்டுமே பரிணமிக்க வேண்டும் என்ற இலட்சிய நோக்கம்; அதற்காக, ஒரு பையில் இரண்டு வேட்டி, இரண்டு சட்டை, இரண்டு துண்டு, எஸ்.எஸ்.எல்.சி. சர்டிபிகேட், எழுத சில தாள்களும் ஒரு பேனாவும். திருநெல்வேலி யிருந்து கோவில்பட்டி ஒரு நாள்; கோவில்பட்டி யிலிருந்து விருதுநகர் ஒருநாள்; விருதுநகரிலிருந்து மதுரை ஒரு நாள். இப்படி எழுத்தாளனாக வேண்டும் என்ற கனவுகளுடன் நடைபயணம் போன வீரசாகசம் அவருக்கு மட்டும் தெரிந்த சேதி (பக்கம். 60, 61).

மூன்று வருடம் ஏழு மாதங்கள் அரசுப் பணியில் இருந்துவிட்டு, எழுத்தாளக் கனவுகளு டன் அதை உதறிவிட்டு 'லோல்' படுகிறார் என்று நினைத்துக் கேட்கிறபோது "அரசாங்கப் பணியில் இருந்த போது சந்தோஷமாகவும் இல்லை. உதறி வந்த போது வருத்தமாகவும் இல்லை" என்று சாவதானமான பதில் வருகிறது.

இப்படியெல்லாம் செய்ய முடியுமா வாழ்வில்? வல்லிக்கண்ணன் தனக்குக் கொடுக்கப் பட்ட சிறுவாழ்வில் அப்படியெல்லாம் செய்ய முடியும் என்று நிரூபிக்கிறார்.

இப்படியெல்லாம் இருக்குமா, வாழ்க்கை? வல்லிக்கண்ணனுக்கு அப்படித்தான் இருந்திருக் கிறது.

எதையும் ஒளிப்பதில்லை, எதையும் புனைவதில்லை என்ற தன் வரலாற்று வரைதலின் இரு இலக்கணங்களை அவர் கறாராக கடைப்பிடித் திருக்கிறார்.

1942 ஆகஸ்டில் வெள்ளையனே வெளியே போ என்ற முழக்கம் எழுப்பிய நேரம். தேசம் எரிதழலில் மிதந்தது. கிளர்ச்சி, தந்திக்கம்பங்கள் முறிப்பு, ரயில் நிலையங்களுக்குத் தீவைப்பு என்று நெடுக நடந்து கொண்டிருந்தது. காரைக்குடி அருகேயுள்ள பள்ளத்தூர் ரயில் நிலையமும் தீயிட்டுப் பொசுக்கப்பெற்று முற்றிலும் சிதைக்கப் பட்டது. "புதுக்கோட்டையில் இருந்துவந்த திருமகள் பத்திரிகையில் பணியாற்ற 1942 மே மாதம் அவ்வழி சென்றபோது, பசுமையாய், முழுமையாகக் காட்சி தந்த சில இடங்கள் 1943 ஜனவரியில் பார்க்கையில் கருகிச் சிதைந்து காணப்பட்டன. அழகான சூழ்நிலையில் அமைதி யாக நின்ற சிறிய கட்டிடம் பள்ளத்தூர் ரயில்



படிப்பகம்

www.padippakam.com

நிலையம். இப்போது கருகிச் சரிந்தகூரையும், இடிந்து தகர்ந்த சுவர்களுமாய் கண்களை உறுத்தியது. தேவையில்லாமல் அதுஎன் மனசில் நிலையாகப் பதிவாகி விட்டது" என்கிறார் (பக். 73, 74)

ஒரு புத்தெழுச்சிக் காலம் மேலெழுந்து வருகிறபோது, தான் எந்தப் பங்கும் ஆற்றாமலே அதில் தன்னை இணைத்துக்கொண்ட தன்புகழ்க் கதை சொல்லிகள் வரலாற்றில் ஏராளம். வ.க. அப்படி சொல்லியிருக்க முடியும். தான் அந்த வரலாற்று நிகழ்வில் ஈடுபடாததை அவ்வாறே பதிவு செய்திருக்கிறார். அதை விமர்சிக்கிற சுதந்திரத்தை நமக்குத் தந்து விடுகிறார்.

தன் வரலாறு எப்போதும் தன்னை உள்ளடக்கியதல்ல. சமகால நிகழ்வுகளை, வளர்ச்சியை, சுற்றிலும் பின்னித் தருகிற சமுதாய வரலாறாகவும் இருக்கிறது. அந்தக் குறிப்பிட்ட மனிதர் நடந்து போன திசைவழியில் எதிர்ப்படுகிற சமுதாய நடப்பு முழுதும் உள் வருகிறது.

அந்தக்காலம் போலவே அவரும் எட்டாம் வகுப்புவரை நீளமான முடியுடன், தலை பின்னி சடை போட்டுக் கொண்டிருந்தார். நாடகத் தேவைக்காக வளர்த்துக் கொள்கிற நடிகர்களின் நீளமான முடி போல்.

மதுரை மீனலோசினி, தத்துவ வித்தக சங்கீத நாடக சபை, மதுரை ஸ்ரீ தேவி பால வினோத சங்கீத நாடக சபை- என்று நீள நீளமான பெயரை வைத்துக் கொண்டு நெல்லை வந்த நாடகக் கம்பெனிகள் அவர் எழுத்து வழியில் காட்சியாகின்றன. போனகிராப் என்று பெயர் பெற்றதும், 'பூனைக்கிராப் பெட்டி' என்று கிராம மக்களால் அழைக்கப்பட்டதுமான 'கிராம போன்' ஆட்சி செய்த காலம், ரேடியோ வராத அக்காலம் - என்று சம கால வளர்ச்சிகள் உள் மடிந்து விரிகின்றன. (பக். 32-34)

1948-ல் பாரதியார் பாடல்கள் நாட்டுடமை யாக்கப்பட்டன. அதுவரை அது ஏ.வி.எம். மெய்யப்ப செட்டியாரின் தனிச் சொத்தாக இருந்தது. அவர் ஏற்கனவே குஜராத் சேட் ஒருவரிடமிருந்து விலைக்குப் பெற்றிருந்தார். அப்போது தமிழக முதலமைச்சராக இருந்த ஓமந்தூர் ராமசாமி ரெட்டியாரின் பெருமுயற்சி யால் அது தேச உடமையாக்கப்பட்டதாக அறியப் பட்ட வரலாறு சொல்கிறது. அவர்களிருவரும் இருப்பதான புகைப்படம் இன்றும் திருவல்லிக் கேணி பாரதியார் இல்லத்தில் மாட்டப்பட்டுள் ளது. அந்தப் புகைப்படத்துக்குள் அடக்காத, அறியப்படாத ஒரு வரலாறு உள்ளது. பாரதி விடுதலைக் கழகம் தொடங்கப்பட்டு, நாரண துரைக்கண்ணன் தலைவராகவும், திருலோகசீதா ராம், வல்லிக்கண்ணன் அதன் செயலாளர்களாக வும் என்று பணி தொடர்கிறது. ஏகப்பட்ட அலைச்சல், பதட்டம், முயற்சி வெற்றிபெருகிறது. பெருந்தலைகளின் போக்கே வரலாறாகப் பதியப் படுகிற காலத்தில், வல்லிக் கண்ணன் சொல்லும் இந்த முடக்கப்பட்ட சங்கதிகள் அவரது தன் வரலாறு மூலம் நமக்குக் கிடைத்திருக்கிறவை.

வல்லிக்கண்ணன் ஒரு போதும் தனது கடந்த காலத்திற்குள், அல்லது நிகழ் காலத்திற்குள் மூழ்கித் தொலைந்து போகிறவர் இல்லை. ஓடிக்கொண்டேயிருக்கிற நதி போல் எதிர் காலத்திற்குள் நடந்துகொணடேயிருக்கிறவர். கனமான இரும்பு கிணற்றுக்குள் மூழ்கிப் போகிறது. கனம் இல்லாத நார்ப்பெட்டியும் தண்ணீர் ஏறி மூழ்குகிறது. ஆனால் ஒரு வாளி ஒரு போதும் மூழ்கிப்போவதைப் பற்றி பேசுவ தில்லை. மேலெழுந்து வருவதே அதன் மொழி யாக இருக்கிறது. வெறும் வாளியாக அல்ல; தன்னைச் சுற்றியுள்ள மக்களுக்குத் தேவையான தண்ணீரைச் சுமந்து வருகிற வாளி அது.

வரலாற்றுச் சூழலில் தன்னைத் தொலைத்து விடாத வ.க., எழுத்தாளனாக வேண்டும் என்ற தீராத தாகத்துடன் செல்வம் செழிக்கிற சினிமா நதிக்கரை ஓரங்களில் நடந்து செல்கிற வ.க. திரைப்படத்துறை, வணிகப் பத்திரிகை என்ற கவர்ச்சி நதிகளின் கரை ஓரம் நடக்கிற போதும், தாகத்துக்கும் கை நனைக்காத வ.க. - இப்படி நூலின் எல்லாப் பக்கங்களிலும் தெரிகிறார். இரு உதாரணங்களைச் சொல்லலாம்.



படிப்பகம்

www.padippakam.com

**கவர்ச்சி வலை ஒன்று :**

லைலா - மஜ்னு என்ற திரைப்படத்துக்கு சில காட்சிகளுக்கு வசனம் எழுதுகிறார் வ.க. எழுதி முடித்த பின், "படம் நல்லா வந்திருக்கு. நீங்க எழுதிக் கொடுத்ததற்காக ஆயிரம் ரூபாய் தரலாம்னு முடிவு பண்ணியிருக்கோம்" என்கிறார்கள். சாப்பிடச் செய்து, சாப்பாட்டு மேஜையில், சாப்பிடுகிற போதே பேசி முடிப்பது இவர்களுக்கு வசதியான செயல்முறை போலும் என்று நினைக்கிறார் (பக். 139).

லைலா - மஜ்னு படத்தின் வசனத்தை பல பேர் எழுதினார்கள்; வசனம் முழுவதையும் வ.க. வே எழுதியது போல், வசனம்- வல்லிக் கண்ணன் என்று தனியாகக் காட்டப்பட்டது. "அது எனக்கு மகிழ்ச்சி அளிக்கவில்லை. பொய்யான கவுரவம் - போலிப் பெருமை என்றே நினைத்தேன்" என்கிறார் (பக். 140).

லைலா - மஜ்னு படத் தயாரிப்பாளரான நாகூர், லாவண்யா பிக்சர்ஸ் தயாரிக்கும் ஒரு படத்திற்கு பரிந்துரை செய்ய, அதன் பேரில் நேரில் சென்ற வ.க., புராணப்படம் என்பதால் கதை, உரையாடல் எழுத விரும்பவில்லை என்று மறுக்கிறார்.

"புராணப் படமானால் என்ன? பெரிய பகுத்தறிவு சுயமரியாதைவாதியான பாரதிதாசனே புராணப் படங்களுக்கு கதை வசனம் எழுதறாரு. நீங்க ஏன் எழுதக்கூடாது" அவர்கள் கைவசமுள்ள கடைசிக் கவர்ச்சிக் குண்டை வீசியெறிந்தபோது, பலியாகாமல் தப்பிக்கிறார் வ.க.

"அவர்கள் போக்கின்படி எழுதிக் கொடுத்தால் பணம் கிடைக்கும். பணம் அதிகம் சேர்ந்த பிறகு, உங்கள் இலட்சிய நோக்கின்படி காரியங்களைச் செய்யலாமே" என்கிற மூதுரை முன் வைக்கப்படுகிறபோது,

பணம் சம்பாதிப்பதற்கு ஒரு போக்கு, பணம் சம்பாதித்த பிறகு ஒரு போக்கு - எனக்குச் சம்மதமில்லை என்று மறுத்து விடுகிறார்.

**கவர்ச்சி வலை இரண்டு :**

எவ்வளவு சிரமங்கள் இருந்தாலும் தான் தேர்ந்தெடுத்துக் கொண்ட பாதையிலே முன்னேற விரும்புற திடமான கால்கள் வ.க.வுக்கு. நேரடி நிரூபணமாக வெளியீட்டுத் துறையில் ஒரு தாவல் நிகழ்கிறது. அது ஒரு பிரபலமான சினிமா பத்திரிகை.

"தமிழ்நாட்டில் சிந்தனை விழிப்பு ஏற்பட்டு, வளர்ந்து கொண்டிருந்த காலம். பெரியார் ஈ.வெ.ரா.வின் சூடும் சுவையுமான சொற்பொழிவுகள், கட்டுரைகள், சி.என். அண்ணாத்துரையின் எழுத்துக்கள், திராவிட இயக்க இளைஞர்களின் எழுத்துக்கள், பொதுவுடமைச் சிந்தனை வெளியீடுகள், பல்வேறு பத்திரிகைகள் எல்லாம் மக்களுக்கு அறிவுச் சுடர் ஏந்தி வந்தன" (பக். 120). இவற்றாலும், கோவைக்கிழார் என்பவர் எழுதிய 'கோயில் பெருச்சாளிகள்' என்ற வெளியீட்டினாலும் தாக்கம் பெற்ற வ.க., கோரநாதன் என்ற புனை பெயரில் "கோயில்களை மூடுங்கள்" என்றெழுதி சாந்தி நிலைய வெளியீடாக வந்து மகத்தான பாராட்டும் பெற்றது. மூன்று பதிப்புகள் உடனே விற்றுத் தீர்ந்தன. இது போன்ற சிறு சிறு வெளியீடுகளாக சினிமாவில் கடவுள்கள், ஈட்டிமுனை, அடியுங்கள் சாவு மணி, ஓடிப் போனவள் கதை என்று அடுத்தடுத்து கோர நாதன் எழுதி நான்கு நூல்கள் வெளியாகின. அதே போல் பல பதிப்புகள் விற்றுத் தீர்ந்தன.

"கோரநாதன் திராவிடக் கழக இயக்கத்தை ஆதரித்து எழுதியதில்லை. ஆயினும் கோரநாதன் சிந்தனைகளும் எழுத்தும் பகுத்தறிவுக் கொள்கைகளுக்குச் சாதகமாக இருந்தன. தி.க. வைச் சேர்ந்த எம்.கே.டி. சுப்பிரமணியன் சென்னைக்கு வரச் சொல்லி தொடர்ந்து வற்புறுத்தியதால் துறையூரிலிருந்து சென்னை சென்றார். எம்.கே.டி. சுப்பிரமணியன் ஆரம்பித்த "தீப்பொறி" மாதமிருமுறை இதழ் - ஆசிரியர் கோரநாதன் என்று விளம்பரம் செய்யப்பட்டது. தீப்பொறியும் நெடுங்காலம் சுடர் பரப்பவில்லை. பத்து இதழ்களோடு முடிந்து போனது.



படிப்பகம்

www.padippakam.com

# இசையில்லாத இலையில்லை - தேன்மொழி கவிதைகள்

## ஒரு பார்வை

- ப்ரதிபா ஜெயச்சந்திரன்




உலகில், கவிதை ஓர் உன்னத இலக்கியம் என்று இன்றும் மதிக்கப்படுகிறது. வேறு இலக்கிய வகைகளிலும் (சிறுகதை, நாவல், கட்டுரை போன்ற) கவித்வம் (POETICS) தன் முகம் காட்டி அந்தந்த இலக்கிய வகைகளைச் செழுமைப்படுத்தும். கவித்வம் உன்னதப் படைப்பாளுமையின்பாற் பட்டது. இதுவரையிலான தமிழ்க் கவிதை இயக்கத்தில் கவிதையைக் கண்டுபிடித்து அதனுடன் ஒன்றி ஒதுங்கிவிட்டவர்கள் மிகச் சிலர்தான். ஒரு சில கவிதைகளே எழுதியிருக்கும் அமரன் எஸ். சம்பத்தின் ஒரு கவிதை :

'எனது ஆச்சரியங்கள் தான்
என் கடவுள்'

அவர் கவிதை முழுக்கவும், அவருக்கான ஆச்சரியம் என்ன என்று தேடினால், கவித்வம் மட்டுமே எஞ்சி நிற்கும். கவிமனதின் கவித்வ அகக்கூறுகள் புறக்கூறுகளைப் பற்றிப் படர்ந்து பால் ஒளிபரப்பும் கவிதைகளாக.

ஒரு மொழி வரலாற்றில், ஓர் இலக்கிய வடிவத்தின் வளர்ச்சிப் போக்கில் பல்வேறு காலகட்டங்களைக் கடந்து வருகிறோம். தமிழ்க்கவிதைகளில் நாம் அப்படிக் கடந்து வரும் போது ஜல்லியடிக்கும் நிறைய கவிதைகளை ஒரு காலகட்டத்தில் நாம் கடந்து வந்திருக்கிறோம். உதாரணமாக நா. காமராசனின் ஓரிரு வரிகள் ஏழைகள் பற்றி :

நாங்கள் விட்ட பெருமூச்சு
கடற்கரைக்குச் சென்றிருந்தால்
கப்பல்கள் கவிழ்ந்திருக்கும்.

மேற்படி கவிதையின் refined form தான் தேன்மொழியின் கீழ்க்கண்ட வரிகள் :

"கன்றுக்குட்டி மாதிரி
மேடுபள்ளம் அறியாமல்
ஓடித்திரிந்த வயதில்
ஊற்றுத் தண்ணீரைப் பார்த்து
உறைந்து நின்றவள் நான்" (பக்.110)

கவிஞர் தேன்மொழிக்கு ஊற்றுத் தண்ணீரைப் போன்ற நல்ல கவிதைகளைப் பார்க்க (படிக்க) இன்னும் சந்தர்ப்பம் வாய்க்கவில்லை என்றே தோன்றுகிறது. இன்னும் நிலை கொள்ளாமல் ஓடித்திரியும் அலைபாயும் வரிகளாக இவர் கவிதைகள் நிற்கின்றன.

கவிதைகளுக்கான வார்த்தைத் தேர்வுகள் மிகவும் முக்கியம். வார்த்தைகளுக்கான வரலாற்றுப் படிமங்கள் உண்டு. அவற்றுக்கான வாழ்க்கைக்கூறுகள் அதன் தன்மையோடு வாசிப்புத் தளத்தில் அணுகப்படும். 'கொலுசு' என்ற வார்த்தை அணிகலனாக, பெண்களின் மகிழ்ச்சிக்குரிய விரும்பப்படும் பொருளாக, பெண்ணின் மகிழ்ச்சியின் குறியீடாக உள்ளது - வாசிப்புத் தளத்தில் அவ்வாறு அணுகப்படும்.

இந்திராகாந்தி சுட்டுக் கொல்லப்பட்ட போது ஆயிரம் அஞ்சலிக் கவிதைகள் வெளிவந்தன. அவற்றுள் மு. மேத்தாவின் கவிதை வரி :

'இந்த தேசம் சோக உலா வருகிறது'. 'உலா' என்ற வார்த்தை சுற்றுலா, மாலையில் உலா வருதல், உப்பரிகையில் உலாத்துதல் இப்படி மகிழ்ச்சியான மன நிலையில், நம்மை உணர வைக்கும் வார்த்தையைப் போட்டு அஞ்சலிக் கவிதையை நையாண்டியாக மாற்றிவிட்டார் கவிஞர்.

வார்த்தை மோகத்தில் கவிப் பேரரசுகள் கூட தம் கவிதையாக்கத்தில் மண்ணைக் கவ்விய உதாரணங்கள் உண்டு. தேன்மொழியின் சரிதா கவிதை (பக்.28) :

'சலிப்பைக் கொலுசென
கால்களில் மாட்டி நடப்பாள்'



படிப்பகம்

www.padippakam.com

என்று பேசுகிறது. வார்த்தை மோகத்தின் கவனமின்மையின் விளைவு.

மேற்கண்ட கவிதை போல் அசட்டையாக எழுதப்பட்ட வரிகள் ஏராளமாக உள்ளன.

ஒரு நல்ல காட்சிப்படிமம் கவிஞருக்குப் பிடிபட்டிருக்கிறது. அதைச் சொல்லும்போது, வார்த்தைகளை உபயோகிப்பதில் உள்ள அசட்டைத் தனம் காட்சியை சிதைவுறச் செய்துவிடுகிறது.

பக்கம் 104-ல் உள்ள வரிகள் :

'இங்கொன்றும் அங்கொன்றுமாய்
இசைத்தட்டுகளை
விசிறிவிட்டுப் போகும்
குளம் நெடுக
மழை'

இசைத்தட்டு பிசிறற்ற வட்டவடிவம் கொண்டது. விசிறி விட்டுப் போகும் மழை பிசிறற்ற வட்டவடிவ இசைத்தட்டுக் காட்சிப் படிமத்தை உருவாக்க முடியாது. இப்படி இருந்திருக்கலாம் :

'இசைத் தட்டுக்களை
இறக்கி விட்டுப் போகும்
குளம் நெடுக
மழை'

இதுபோல் நிறைய உதாரணங்கள் சொல்ல முடியும். மேலும், ஒரு கவிஞருக்கு அவர்தம் கவிதைகளே அணிந்துரையாக இருக்கமுடியும். ஒரு பட்டாளமே வரிந்து கட்டிக் கொண்டு கொடுத்துள்ள அணிந்துரைகள் வெறும் சப்பைக் கட்டுகளாக எஞ்சி நின்று அவரவர் படைப்பாக்கத் தகுதியையே கேள்விக்குள்ளாக்குகிறது.

அவசரமாக அள்ளித் தெளித்த கோலமாக; கொஞ்ச நேரம் மனசில் நிற்கும் மத்தாப்பூக் கவிதைகளாக தேன்மொழியின் கவிதைகள் நின்று விடுகின்றன. இவர், கவிதைக்குள் பயணப்பட வேண்டிய தூரம் இன்னும் அதிகம். இவர் கால்கள் தரைதொட்டு நடக்கும்போது தூரம் வசப்படலாம். ●

வெளியீடு : மதி நிலையம் - விலை ரூ.60/-

# காசுக்காக அல்ல

- அஸ்வகோஷ்

மே 1972

எக்ஸ்பிரஸ் பஸ், ஸ்டாண்டில் வந்து நின்றது.

"ரிக்ஷா சார்... ரிக்ஷா..."

"சார் ரிக்ஷா..."

"ரிக்ஷா வேணுமா சார், ரிக்ஷா..."

தளத்தில் வந்து இறங்கும் விமானத்தைச் சுற்றி பெட்ரோல் வண்டிகளும், டிரக்குகளும் சூழ்வதைப் போல சைக்கிள் ரிக்ஷாக்கள் சூழ்ந்தன.

மாணிக்கம் இடது கையால் 'ஹாண்பாரை'ப் பிடித்தபடி பஸ்ஸிலிருந்து இறங்கும் முகங்களைப் பார்த்துக் கொண்டிருந்தான். டீக்காகவும்... நாசுக்காகவும்... வெள்ளை சள்ளையுமாகவும்... பேண்ட்டும் சூட்டுமாகவும் அவன் கண்கள் தேடிக் கொண்டிருந்தன.

"ரிக்ஷா சார்..."

மல்லிகைப் பூ வெள்ளையில் சவரன் மார்க் வாயில் வேஷ்டியும், முழுக்கை டெரிகாட்டன் ஷர்ட்டும், கையில் தோல் 'பேக்'குமாக மொழு மொழுப்பான சிவந்த சரீரமுடைய ஒருவர் அவனை நெருங்கினார்.

"கிரப்பாளையம் வர்ரீயாப்பா?"

"எந்த கிரப்பாளையம் சார்?... காராமணி குப்பத்துக் கிரப்பாளையமா?...."

"இல்ல; உழந்த கிரப்பாளையம், மொதலியார் பேட்ட கிட்ட இல்ல..."

"ஆமா சார்; எங்க... ஆல வாசப்படிய தாண்டியா... அதுக்கு இந்தாண்டியே வா...!"



படிப்பகம்

www.padippakam.com

"தாண்டிதான். அப்படியே மெயின் ரோடிலேயே நாலஞ்சி ஊடு தள்ளி..."

"சரிதான் சார், ஏறுங்க..."

அவன் சீட்டைத் தட்டிக்காட்டினான்.

"ஏர்றது இருக்கட்டும்... எவ்வளவு கேக்கற?...

"முக்கா ரூவா குடுத்துடுங்க சார்..."

"என்னாது? முக்கால் ரூபாயா!..." அவர் ஆச்சரியப்பட்டார். "எப்பவும் பஸ் ஸ்டாண்டுல இருந்து கிரப்பாளையம் போறதுன்னா எட்டணா தாம்பா குடுக்கிறது..."



"என்னா சார்யிது! இங்கருந்து ஒப்பித்தாலைக்கி போறதுன்னாலே முக்கா ரூவா வாங்கறோம் சார், ஒப்பித்தாலையவுட தூரமாச்சே யிது... ரயில்வே கேட்டல்லாம் தாண்டி போவணுமே சார்..."

"அதெல்லாம் வேணாம். எட்டணாதான்! எட்டணாதான் வழக்கமா குடுக்கிறது."

அவன் அவர் முகத்தைப் பார்த்தான்.

"என்னா சார்... தெரிஞ்சவங்களே யிப்படி பேசுறீங்க? கஷ்டம் சார்... ஆலவாசப் படிய தாண்டி போவணும் சார்... மொதலியார் பேட்டைக்கே எட்டணாவுக்கு யாரும் வர மாட்டாங்க சார்..."

பக்கத்திலிருந்த மின்சாமி கேட்டான். "என்னா பா அது, எங்க போவணுமாம்..."

"ஓழந்த கிரப்பாளையம். எட்டணா தர்றாராம்..."

"என்னா சொன்ன...?"

"முக்கா ரூவா கேட்டேங்..."

"அப்புறம் என்னா... அதுக்கு கொறைஞ்சி யார் சார் வருவாங்க..."

வந்தவர் சுற்று முற்றும் பார்த்தார்.

மின்சாமி அவரைப் பார்த்தான்.

"பத்தணா குடுத்திட்டு போ சார்... அதுக்கு கொறைஞ்சி இங்க யாரும் வரமாட்டாங்க... இதே நாங்கன்னா வரமாட்டம்... ஏதோ கேட்டுட்டிங்க... போபா, கெடக்குது... வந்த சவாரிய ஏன் உடற..."

"என்னாடா நீ வேற; பத்தணான்னிப் புட்டு... நீ போவியா பத்தணாவுக்கு?" அவன் முனங்கிக் கொண்டே வண்டியை எடுத்தான். "அவன் சொல்லிட்டானேண்ணவாசி வர்ரேன் சார். இல்லண்ணா எங்கப்பாணா பத்தணாவுக்கு எவனும் வர மாட்டான்..."



படிப்பகம்

www.padippakam.com

மங்களாம்பிகை சைக்கிள் ரிக்ஷா ஓர்க்ஸில் வாடகைக்கு எடுத்து வண்டி ஓட்டுபவன் அவன். நாள் ஒன்றுக்கு ரெண்டரை ரூபாய் வாடகை, தினம் கட்டி விட வேண்டும். வாடகைக்கு மேலே நாலைந்து ரூபாயாவது ஓட்டாமல் ரா பத்து மணியானாலும் வண்டியை விட மாட்டான். மேலண்ட புல்வார் வீதி நெடுகிலும், டுப்ளே ஸ்ட்ரீட்டிலும், ரங்கப்பிள்ளை வீதியிலும், அஜந்தா டாக்கீஸ் எதிரிலும் விகாரம் எடுத்த கண்களால் ஜனங்களைப் பார்த்துக்கொண்டு திரிவான். சந்தடி ஓய்ந்த தெருவில், போக்கு வரத்து ஓய்ந்த நிசப்தத்தில் ரெண்டாவது ஆட்டம் விட்டபிறகு சவாரி கிடைக்காதா என்று சினிமாக் கொட்டகைகளின் எதிரில் அமைதியோடு காத்துக்கொண்டிருப்பான்.

எப்போதாவது சில சமயம் 'நரி மொகத்தில் முழித்து' அந்தக் காசை பொழுதோடவே சம்பாதித்து விடுகிற நாட்களில் அவன் உற்சாகமாக வீடு திரும்புவான். நியூடோன் எதிர்த்தாற் போலிருக்கும் நடைபாதைக் குடியிருப்பில் வண்டியை விட்டு விட்டு கள்ளுக் கடைக்கோ சாராயக் கடைக்கோ போவான். ரெண்டு மொந்தையோ, நாலு தெரானோ அடித்து விட்டு கண்கள் வெளிற தள்ளாட்டத்துடனே வண்டியில் வந்து வீழ்வான். சீட்டில் அமர்ந்து கால்களைத் தூக்கிப் போட்டுக் கொண்டு அசதியில் கண்களை மூடுவான்.

பொன்ஜாதியிடம் ரெண்டோ மூணோ கொடுத்துவிட்டு குடித்தது போக மீதியில், புள்ளைகளுக்கு தள்ளு வண்டியில் விற்றுப்போகிற இனிப்புப் பண்டங்களை வாங்கிக் கொடுப்பான். நாலு புள்ளைகளுக்குத் தகப்பன் அவன். அக்கம் பக்கத்துப் பசங்களையெல்லாம் கூட்டி வைத்து வாங்கிக் கொடுப்பான். குஷியாயிருக்கிற நாட்களில் அதுகளுக்கு கதைகள் சொல்லுவான். அதுகள் தின்று பூரிக்கிற அழகை மயக்கம் நிறைந்த கண்களால் பெருமிதத்தோடு பார்ப்பான்.

"எல்லாம் தின்னுங்க; நல்லா தின்னுங்க... நாம்ப பிச்சை எடுத்து தின்னல... நான் சம்பாரிக்கிற காசி... நான் வாங்கிக் குடுக்கறேன். ஒடம்புல தெம்பு இருக்கிற வரிக்கும் சம்பாரிச்சிக்னே இருப்பேன். வாங்கியாந்து குடுப்பேன்."

ரிக்ஷா 'ஜவானாலை டர்ன்' திரும்பி ஊர்ந்தது. சித்திரை வெய்யில் அனல் பறக்கக் கொளுத்தியது. உருகிய தார்ச்சாலையில் வீல்கள் அழுந்தப் புதைவதைப் போலிருந்தன. அவன் எழுந்து நின்று மெறிக்கத் தொடங்கினான். வெப்பம் நிறைந்த எதிர் காற்று சைக்கிளை அசைய வொட்டாமல் தடுத்தது. யாரோ பின்னாலிருந்து இழுப்பதைப் போலிருந்தது. அவன் சிரமத்துடன் அழுத்தி மெறித்தான். எண்ணெய் காணாத காய்ந்த தலை மயிர்கள் காற்றில் பம்பிப் பறந்தன. நெற்றி ஓரங்களில் வியர்வை வழிந்து புருவ மேட்டின் வழியாக கீழே இறங்கியது. சினிமா ஸ்டார் படம் போட்ட முண்டா பனியனும், முரட்டுத்தனமான அழுக்கு அரைக்கால் டிரவுசரும் வியர்வையால் நனைந்து கசகசத்தன. ஒவ்வொரு முறை பெடல்கள் ஏறி இறங்கும் போதும் நரம்புகள் விம்மி விம்மி புடைத்து அழுந்தின. கருத்த உடம்பில் குளுப்பாட்டியது போல் வியர்வை வழிந்தது. அவன் மூச்சைப் பிடித்துக்கொண்டு பிரயாசையுடன் மெறித்தான்.

வண்டி செம்மண் புழுதி படிந்த ஆலை வாசற்படி சந்து திருப்பி, தாண்டி, பக்கத்து மெயின் ரோட்டை அடைந்தது.

"எந்த ஊடு சார்...?"

"அதோ! அந்த மெத்த ஊடுதான்... நீல பெயிண்ட் அடிச்சில்ல..."

வண்டி வீட்டெதிரில் நின்றது.

அவர் கீழே இறங்கி சட்டைப் பாக்கெட்டில் கைவிட்டார். அவன் ரெட்டைக் கரைக் கட்டம் போட்ட சின்ன கைத் துண்டால் முகத்தையும், அக்குளையும் அழுந்தத் துடைத்து தன்னை ஆசுவாசப்படுத்திக் கொண்டு அவரை நோக்கினான்.

"ரொம்ப கஷ்டம் சார்... கூட எதுனா பாத்து, போட்டுக் குடுங்க சார்..."



படிப்பகம்

www.padippakam.com

"அதெல்லாம் ஒண்ணும் பேசாத. சொன்னா சொன்னதுதான்."

"யாரும் வரமாட்டடங்க சார்... இந்த வெய்யில்ல... எவ்வளவோ செலவு பண்ணிட்டுப் போறீங்க.... ஒரு டீக்கிதான் சார்.."

அவன் முக வாட்டத்தோடு திரும்பினான். சரியாக ஒரு நேரு நாணயமும், ஒரு பத்து பைசா, ஒரு ரெட்டை பைசா துட்டு மட்டுமே அவன் கைகளில் விழுந்தன. அவர் உள்ளே போய் விட்டார். அவன் வண்டியைத் திருப்பிக் கொண்டு நடந்தான்.

"இருக்கிறவனுங்களுக்குத்தான் மனம் வரமாட்டேன்னுது. எவ்வளவோ துட்டு எப்படி எப்படியோ செலவு பண்ணிட்டுப் போறாங்க; கஷ்டாளிக்கு ஒரு ரெண்டு பணம் குடுக்கறதுன்னா தான் எல்லாருக்கும் நொளப்பமாருக்குது..."

அவன். வண்டியில் ஏறி மெதுவாய் உருட்டினான். பஸ் ஸ்டாண்ட் வரைக்கும் சும்மா போக முடியாது. அதற்காக இங்கேயே போட்டு வைக்கவும் முடியாது. யாராவது பஸ் ஸ்டாண்ட் போகிறவர்கள் கிடைத்தால் தேவலாம்...

அவன் பாக்கெட்டில் கைவிட்டு சில்லரையை எடுத்து எண்ணினான் : மூணு ரூபாய் கூட இல்லை. "தூமப் பசங்க... எங்கியோ கெடந்து வந்து கோரி மேட்டுல இந்த ஆஸ்பத்திரி கட்டினாலும் கட்டினாங்க.... ரிக்ஷாக்காரன் பொழப்புல மண்ணாப் பூடுத்து.... ஆஸ்பத்திரி கட்டினானோ இல்லையோ, கண்டவனல்லாம் 'டெம்போ' கொண்ணாந்து உட்டுட்டான். அப்புறம் சைக்கிள் ரிக்ஷாவுல எவன் ஏர்றன்றான்... சங்கமாங்கிப் பசங்க...! டர்ருன்றான், டிர்ருன்றான், முப்பது பைசாவுக்கு எங்க பார்த்தாலும் கொண்டும் போய் உட்டுட்றான். சர்ருன்னு அதில போயி எறங்கறதப் பாப்பானா... லொங்கு லொங்குன்னு ரிக்ஷாவுல வருவானா, பத்தாத்துக்கு டவுன் பஸ்ஸு வேற..."

அவன், 'ரிக்ஷா வேண்டும்' முகங்களைக் கூர்ந்து நோக்கிக் கொண்டு வந்தான். தளர்ச்சியோடும், அசமந்தமாகவும் மெல்ல அசங்கி, அசங்கி மெறித்துக் கொண்டு வந்தான். தொழிலாளர் சங்கத்துக் கொட்டகையைத் தாண்டி கொஞ்ச தூரம் - அவன் கண்கள் ஆச்சரியத்தால் அகல விரிந்தன...

"மெய்தானா?... பத்து ரூபா நோட்டா அது!"

அவன் அவசரமாக பிரேக்கை இழுத்து கீழே இறங்கினான். இறங்குவதற்குள் ஃப்ரன்ட்டு வீல் எட்டாக மடிந்து கிடந்த நோட்டின் மேல் ஏறி நின்றது. அவன் வண்டியை கொஞ்சம் அசக்கி அதை வெளியில் எடுத்தான். "பத்து ரூபாய்-!" நெஞ்சு விம்மிப் பூரித்தது.

"யாருடையதோ - யாராவது இடுப்பில் செருகி வைத்துக்கொண்டு போகும்போது கீழே விழுந்து விட்டிருக்கலாம்..."

கையில் நோட்டைத் திணித்து மறைந்துக் கொண்டு யாருக்கும் சந்தேகம் தோணாத வகையில் காற்று போதுமா... சரியாக இருக்கிறதா என்று பார்ப்பவன் மாதிரி வீலை அமுக்கிப் பார்த்து, செக் நட்டையும் சும்மா ஒப்புக்கு நன்றாக திருகி இறுக்கிக் கொண்டு சைக்கிளில் ஏறி உட்கார்ந்தான்.

மனம் உற்சாகத்தால் துள்ளியது. உதட்டோரத்தில் ஒரு நமட்டுச் சிரிப்பு. "இன்னைக்கு கூட ஒரு 'தெரான்' அடிக்கலாம்; அவளுக்கு ஒரு ரவிக்கைத் துண்டு எடுத்துக் கொடுக்கலாம்; பசங்களுக்கு இஷ்டம்போல துன்ன வாங்கிக் கொடுக்கலாம்; சினிமாவுக்கு இட்டுக்னு போகலாம்; அப்படியே ஞாபகமாக அங்காளம்மனுக்கும் ஒரு பணத்துக்கு சூடம் வாங்கிக் கொளுத்தி விட வேண்டும்"

அவன் சந்தேகத்தோடு பாக்கெட்டை அமுத்தி, நிமிண்டிப் பார்த்துக்கொண்டான். நோட்டு ஆப்டது மெய்தான். உள்ளே அப்படியே பத்திரமாய்த்தான் இருக்கிறது. மாயமாய் கீயமாய் மறைந்து விடவில்லை. மொத்தம் பார்த்தால் பதிமூணு ரூபாய் மாமூல் வருமானத்துக்கு மேலே! அதுவும் ரெண்டு மணிக்குள்ளாக..."



படிப்பகம்

www.padippakam.com

அன்றையப் பொழுதுக்கு இனி அவன் வண்டியை ஓட்ட வேண்டியதில்லை. அவன் வருமானத்துக்கு மேலேயே அவனுக்குக் கிடைத்துவிட்டது. இனி, அவன் கள்ளுக் கடைக்குப் போகலாம்; சாராயக்கடைக்குப் போகலாம்; பகலாட்டம் சினிமாவுக்குப் போகலாம்; அல்லது வண்டியை எங்காவது மரத்து நிழலில் விட்டு விட்டு நிம்மதியாகத் தூங்கலாம்...

ஆனால் அவன் ரிக்ஷாவை மெறித்துக் கொண்டிருந்தான். ரிக்ஷாவுக்காக வேண்டி நிற்கும் முகங்களைத் தேடிக் கொண்டிருந்தான். காலியாகவே உருட்டிக் கொண்டு வந்தான். கொஞ்சம் சோர்வடைந்தான். மந்தமாக ஒரு சாயா குடிக்கலாம் என்று சங்கரநாயர் கடையண்டை வண்டியை நிறுத்தினான்.

பின்னாலிருந்து யாரோ ஒருவர் குரல் கேட்டது "ரிக்ஷா" - அவன் திரும்பினான்.

ஒட்டிய கன்னமும், கருத்த உதடுகளில் சுருட்டும், முன்புறம் லேசாய் சரிந்த தொப்பையுமுடைய ஒரு பெரியவர் கேட்டார் "ஏம்பா நெல்லித்தோப்பு வர்ரியா"

"நெல்லித்தோப்புல எங்கே!..."

"காளியம்மன் கோவில் சந்து."

"சரி ஏறுங்க..."

"எவ்வளவு கேக்கற...?"

"ஏறுசாமி; எட்டணா குடு..."

"எட்டணா தாங்காதுப்பா; ஆறணா குடுத்துடறேன்."

"எதனாகுடுசாமி - ஏறு..."

அவன் உற்சாகமடைந்தான். அவன் முகத்தில் ஒரு புதிய ஒளி பிரகாசித்தது. குதூகலத்துடனும், மகிழ்ச்சியுடனும் வண்டியை எடுத்தான். ரயில்வே கேட்டைத் தாண்டி கொஞ்சம் சறுகலான ரோட்டில் வண்டி ஓடியது. காற்று பின் வாட்டத்தில் அடித்தது. அவன் எழுந்து நின்று சரசரவென்று மெறித்து 'ஸ்பீட்பிக் அப்' பண்ணிவிட்டு சீட்டில் உட்கார்ந்தான். வண்டி மெறிக்காமலே ஓடியது. சவாரி கிடைத்த சந்தோஷமும், வண்டி வாழைப் பழம் மாதிரி நழுவுகிற குஷியும் மனசு லேசாகி பறப்பதைப் போலிருந்தது. எதிரே பரவலாக வரும் வாகனங்களுக்கும் மனிதர்களுக்கும் மத்தியில் அவன் லாவகமாகவும் அசாதரணமாகவும் வண்டியை ஓட்டிச் சென்றான்.

பின்னால் உட்கார்ந்திருந்த பெரியவர் "பார்த்துப்பா!" என்றார்.

அவன் அனாவசியமாகவே மெறித்தான். பூரிப்போடு சிரித்துக் கொண்டான். நெல்லித் தோப்பு சீக்கிரமே வந்துவிட்டது. காளியம்மன் கோவில் சந்து திரும்பி, பெரியவர் காட்டிய வீட்டெதிரில் வண்டியை நிறுத்தினான்.

பெரியவர் கீழே இறங்கி மடியில் கைவைத்து அவிழ்த்து சில்லரையை விரித்தார். கசங்கிய ஒரு ஒத்தை ரூபாய் நோட்டு; ஒரு நாலணா துட்டு; ஒரு பத்து பைசா. அவன் வண்டியை விட்டு இறங்காமலே பார்த்தான்.

"முப்பத்தஞ்சி பைசாதாம்பா இருக்குது; ஒரு ரூபாய்க்கு சில்ற வச்சிக்கினுகிறியா? ரெண்டு பைசா கொறையுது..."

"காட்டுசாமி... பரவால்ல! எவ்வளோ துட்டு எப்படியெப்பிடியோ அழியிது. இப்ப இந்த ரெண்டு பைசாவுல தானா வந்துடுத்து... நீதான் சாப்டு போ சாமி..."

அவன் பெருமிதத்தோடு சில்லரையை வாங்கி ஜேபியில் போட்டுக் கொண்டு, அடுத்த சவாரியை எதிர்நோக்கி தெம்போடு வண்டியை மெல்ல ரோட்டில் உருட்டினான்.

●



படிப்பகம்

www.padippakam.com

# "புலம்பெயர் இலக்கியமல்ல, புலம்பெயர் இலக்கியங்கள் தான் உண்டு"

எழுத்தாளர் ஷோபாசக்தி நேர்காணல்.

**பு**லம் பெயர் சூழலில் தலித் இலக்கியம், தலித் அரசியல் முதலியவற்றில் அக்கறை காட்டியவர்கள் 'இருள் வெளி' குழுவினர். புலம் பெயர் எழுத்துக்கள் மட்டுமின்றித் தமிழகத் தலித் எழுத்தாளர்கள் பலரின் எழுத்துக்களையும் உள்ளடக்கிய 'இருள்வெளி', 'சனதரும போதினி' என்கிற இரு தொகுப்புக்களையும் கொண்டு வந்தவர்கள் இவர்களே. தலித் இதழ்களை, எழுத்துக்களை அறிமுகம் செய்வதில் முன்னிற்கும் இக்குழுவினரில் ஒருவரான எழுத்தாளர் ஷோபா சக்தி சென்ற மாதம் தமிழகம் வந்திருந்தார். தற்போது தமிழில் பெரிதும் விவாதிக்கப்படுகிற 'கொரில்லா' என்னும் நாவலின் ஆசிரியரான இவர் 'புதிய கோடாங்கி' இதழுக்காக அளித்த பேட்டி.

நேர் காணல் : அயன்புரம் ராஜேந்திரன் நீலகண்டன்

**ஷோபாசக்தி என்ற பெயர் ரொம்பவும் வேடிக்கையாக இருக்கிறது. ஒரு தீவிர இலக்கிய வாதியின் பெயர் போலவே இல்லை. நீங்கள் ஒரு புனைபெயரை தேர்வுசெய்ய வேண்டிய நிலை வந்த போது ஏன் இந்தப் பெயரைத் தேர்வு செய்தீர்கள்?**

எனது பூர்வாசிரம புனைபெயர் 'சிவசக்தி' ஆகும். இது என் அம்மாவுடைய தோழியின் பெயர். ஈழத்திலே எங்களது குடும்பம் மிகவும் வறியது. வறுமைக் கோட்டுக்கு கீழே என்று கூட சொல்ல முடியாது. எங்கள் குடும்பத்திலிருந்து பார்த்தால் வறுமைக் கோடே தெரியாது. அவ்வளவு கீழே இருந்தோம். அப்போது எனது படிப்புச் செலவுகளை ஏற்று என்னைப் பத்தாவது வரை படிக்க வைத்தவர் அம்மாவின் தோழியே. அவர்தான் சில மெலிதான மாற்றங்களுடன் எனது 'கொரில்லா' நாவலில் ஜெயசிலியாக வருபவர். 1983ல் நான் பத்தாவது படித்துக் கொண்டிருந்த போதுதான் ஈழத்தில் மிகப் பெரிய அரசியல் எழுச்சி உருக்கொண்டது. அத்தோடு என் படிப்பும் நின்று போயிற்று. பின்னர் நான் எழுத ஆரம்பித்த போது 'சிவசக்தி' என்ற பெயரைத் தெரிவு செய்தேன். கடைசியாக 1996ல் ஈழமுரசு பத்திரிகையில் 'சோவியத் யூனியனின் சினிமாவும் சில்க் ஸ்மிதாவின் முகங்களும்' என்ற கட்டுரையை சிவசக்தி என்ற பெயரில் எழுதியிருந் தேன். அது நான் 'நான்காம் அகிலம்' என்ற ட்ராஸ்கிய கட்சிக்கு இணக்கமாக பணி செய்து வந்த காலம். அக்கட்டுரையால் கட்சித் தோழர் களுடன் ஒரு முறுகல் நிலை உருவாகியிருக்க, நாயும் வரஉறியும் அறுந்து விழுந்தது போல எமது கட்சியின் இலங்கைப் பிரிவான 'புரட்சி கம்யூனிஸ்ட் கழகத்'தின் தலைவர் விஜே டயஸ் ஐரோப்பாவிற்கு வந்திருந்தார். ஒரு விவாத இரவில் 'நிரந்தரப் புரட்சித் தத்துவத்'தால் என்னைத் தாக்கிய தோழர்களிடம், இறுதியில் நிபந்தனையற்ற சரணாகதி அடைந்து 'சிவசக்தி செத்துவிட்டான்' என அறிவித்தேன். நான் நினைக்கிறேன் அநேகமாக 1953 ஹர்த்தாலுக்குப் பின்னாக நமது கட்சி பெற்றுக் கொண்ட ஆகப் பெரிய வெற்றி இந்தச் சம்பவமாகத் தானிருக்கும். பின் ஒரு நாளில் கட்சியோடு தொடர்புகளை அறுத்துக் கொண்டு வந்து மீண்டும் எழுத ஆரம் பித்த போது எனக்கு புதியதொரு புனைபெயர் தேவைப்பட்டது. நமது கலை இலக்கியப் போக்கில் கம்பதாசன், பாரதிதாசன், சுப்புரத்தின தாசன் சுரதா என ஆரம்பித்து இன்றைய ஜெய மோகனதாசன் வரை வந்திருப்பதை அறிவீர்கள். நான் யாருக்கு தாசனாகலாம் என ஆய்ந்த போது தனது கலை ஆளுமையால் என்னைச் சொக்க வைத்து இன்றும் 'அழியாத கோலங்களா'ய்க் கிடக்கும் ஷோபாவைப் பற்றிக்கொண்டேன். ஷோபா பாதி, சிவசக்தி பாதி கலந்து செய்த கலவை நான்.



படிப்பகம்

www.padippakam.com

**இது மாதிரி ஒரு நடிகையின் பெயரை வைத்திருப்பதால் ஏதாவது விமர்சனங்களை எதிர்கொண்டிருக்கிறீர்களா?**

நடிகையின் பெயரை வைத்துக் கொள்வதை ஏன் விமர்சிக்க வேண்டும். நமது படா படா எழுத்தாளர்கள் கூடத் தான் நடிக்கிறார்கள். உடனடியாக ஞாபகம் வருபவர்களில் அசோகமித்திரன் சினிமாவில் நடித்திருக்கிறார். கே.ஏ. குணசேகரன் நடிக்கிறார். மு. ராமசாமியும், எம்.ஜி. சுரேசும் நடிக்கிறார்கள். இவர்களை விடத் திறம்பட நடித்திருக்கும் 'ஊர்வசி' ஷோபாவின் பெயரை நான் வைத்திருப்பதில் விமர்சிக்க என்ன இருக்கிறது?

**புலம் பெயர் இலக்கியத்தின் போக்கு எப்படியிருக்கிறது?**

1960-களில் எமில் சௌந்தரநாயகம் என்றொரு 'யாழ்ப்பாணத்தான்' அய்ரோப்பாவில் வாழ்ந்தார். இவர் இலண்டனிலிருந்த நாலு கோடீஸ்வரர்களை யாழ்ப்பாணத்துக்கு அழைத்து வந்து யாழ்ப்பாணத்தின் அருகாமையிலுள்ள ஏழு தீவுகளுக்கும் தானே சக்கரவர்த்தி எனச் சொல்லி அந்த நான்கு வெள்ளையர்களையும் நம்பப் பண்ணி ஏழு தீவுகளையும் அவர்களுக்கு விற்று விடுவதாகக் கூறி பணத்தை வாங்கி ஏமாற்றினார். அதற்கு அடுத்ததாக யாழ்ப்பாணத்தார் செய்யும் 'இண்டர்நேஷனல்' ஏமாற்று மோசடி வேலை என்று ஒன்று உண்டென்றால் அதுதான் புலம் பெயர் இலக்கியம்.

**புலம் பெயர் இலக்கியந்தான் தமிழின் சாதனை இலக்கியமாக வரும் என்கிறார்களே?**

புலம் பெயர்வதால் அகதி அட்டை வரும், குளிர் வரும், இளமையிலேயே தலையில் வழுக்கை வரும், கொஞ்சம் அசந்தால் நாடுகடத்தல் உத்தரவு வரும். ஆனால் சாதனை இலக்கியமும் வரும் என்று பேசுவது எந்த நியாயத்தில் சேர்த்தி? புலம் பெயர்ந்த அகதிகளிடையே தடித்த வெள்ளாளனும் இருக்கிறான், ஒடுக்கப்பட்ட தலித்தும் இருக்கிறான். ஆணும் இருக்கிறான், பெண்ணும் இருக்கிறாள். படித்துக் கிழித்த வர்க்கமும் இருக்கிறது, படிக்காமலே கிழிக்கும் வர்க்கமும் இருக்கிறது. ஸ்தூலமான முதலாளிய சிந்தனையுடனும், உதிரிப் பாட்டாளி வர்க்க சிந்தனையுடனும் அகதி மனிதர்கள் முரணாய்க் கிடக்கிறார்கள். தமிழ்த் தேசியத்தை உயர்த்திப் பிடிக்கும் எழுத்தாளனும் இருக்கிறான், தமிழ் அடையாளத்தையே மறுத்து எழுதிக்கொண்டிருப்பவளும் இருக்கிறாள். இத்தனை சில்லம் சில்லமான கண்ணிகளிடையே இருந்து கட்டப்படும் பிரதிகளை, ஒடுக்குபவனுடைய இலக்கியத்தையும் ஒடுக்கப்படுபவளது இலக்கியத்தையும் புலம் பெயர் இலக்கியம் என்ற ஒற்றைச் சட்டகத்துள் அடக்கி விடுவது மகா தவறு. இன்று புலம் பெயர் தமிழ் ஊடகங்கள் பெரும்பாலும் இந்து வெள்ளாள ஆண்களின் கையிலேயே இருக்கிறது. சிறு பத்திரிகைகளில் கூட பெரும்பாலும் அவர்களின் நாட்டாமையே நடக்கிறது. புலம் பெயர் இலக்கியத்தின் தொண்ணூறு வீதமான எழுத்தாளர்கள் தேசியவாதத்துள்ளும், அறியப்பட்ட வறட்டு மற்றும் சும்மா மார்க்சியத்தினுள்ளும் மூழ்கிக் கிடக்கிறார்கள். ஈழத் தமிழர்கள் முதலில் ஒரு சாதியச் சமூகம், அதற்கு அடுத்ததே வர்க்கச் சமூகம் என்ற பிரக்ஞை இவர்களிடம் இயங்குவதில்லை. முக்கியமாக தாங்கள் ஒடுக்கும் சாதியில் பிறந்தவர்கள் என்ற குற்ற உணர்வே இவர்களிடம் துண்டறக் கிடையாது. நான் திரும்பவும் திரும்பவும் சளைக்காமலும் ஓயாமலும் ஒரு சின்னத்தனத்தை சுட்டிக்காட்ட விரும்புகிறேன். நாங்கள் தமிழ் பத்திரிகைகளில் சாதிய விளம்பரங்கள் இடம்பெறக் கூடாது என்றொரு தீர்மானத்தை நிறைவேற்றியிருந்தோம். அந்தச் சாதியம் காப்பாற்றும் பத்திரிகைகளை இன்றுவரை நிராகரிக்கிறோம். இந்தத் தீர்மானத்தை 'சரிநிகரை'த் தவிர்த்த வேறெந்த மாற்றுப் பத்திரிகைகளும் கவனிக்கவில்லை. புகலிடத்தின் பெரும்பாலான வெள்ளாள எழுத்தாள மசிர்களும் கவனிக்கவில்லை. ஏற்றுக்கொள்ளவில்லை. ஆனால் வருசத்துக்கு ஒரு முறை சித்திரைப் புத்தாண்டில் லண்டன் பத்மநாபன் என்ற சாதித்திமிரெடுத்த பார்ப்பான் வெளியிடும் மலரில் மட்டுமே இவர்களின் மௌனம் கலையும். இன்று வரை தன் சாதிப்பட்டத்தை துறக்கவோ



படிப்பகம்

www.padippakam.com

தன் சாதிபற்றிய குற்ற உணர்வோ இல்லாமல் சாதி அரிப்பெடுத்து அவர் பூணுலால் முதுகு சொறிய இவர்களும் சேர்ந்து சொறிகிறார்கள். இவர்களா சாதனை இலக்கியம் படைக்கப் போகிறார்கள்? இவர்கள் இந்துத்துவ வெள்ளாள ஆணாதிக்க இலக்கியம்தான் எழுதுவார்கள். இந்தச் சூழலில் தான் நமது ஜெர்மனி தேவாவும், கலாமோகனும், சுகனும் அருந்ததியும், தேவதாசும் மோதி நிற்க வேண்டியிருக்கிறது. இவர்கள்கூட இவர்களின் சாதி எதிர்ப்பு எழுத்துக்களாலும் மறுத்தோடிக் குரல்களாலும்தான் முக்கியத்துவம் பெறுகிறார்களே ஒழிய புலம் பெயர்ந்ததால் அல்ல. நம்முடைய நோக்கமெல்லாம் புகலிடத்தில் தலித் இலக்கியம், தீவிரப் பெண்ணிய இலக்கியம், விளிம்பு நிலை இலக்கியம் போன்றவற்றின் இடத்துக்காக போராடுவதே ஒழிய புலம் பெயர் இலக்கியம் என்ற ஒற்றை அடையாளத்துள் அடங்கிப் போய் விடுவதல்ல.

**தமிழ் நாட்டுச் சூழலில் நீண்ட காலங்களாகவே போர் போன்ற அனுபவங்கள் இல்லை. ஆனால் நீங்கள் போரால் புலம் பெயர்ந்திருக் கிறீர்கள். அதன் விளைவாக நல்ல இலக்கியங்கள் கிடைக்குமென நாங்கள் எதிர்பார்த்திருக்கிறோம். அதற்கான சாத்தியக் கூறுகள் இல்லையா?**

இதே போன்றவொரு கருத்தைத்தான் அண்மையில் சுஜாதாவும் 'கற்றதும் பெற்றதும்' என கூறியிருக்கிறார். தமிழகத்தில் போர் இல்லையாம், அதனால் நல்ல கவிதைகள் பிறக்காதாம். உண்மையிலே தமிழகத்தில் போர்கள் நடந்து கொண்டிருக்கவில்லையா? வெண்மணியும், கொடியன்குளமும், தாமிரபரணியும் ஒடுக்கப் பட்டவர்கள் மீது தொடுக்கப்பட்ட போர் இல்லையா? இரண்டாயிரம் வருடங்களாக இந்த யுத்தம் தொடுக்கப்பட்டுள்ளதே! தினம் தோறும் நடைபெறும் காவல் நிலைய பாலியல் வல்லுறவுகள் என்ன? இலட்சக்கணக்கான குழந்தைகள் கட்டாய உழைப்பில் ஈடுபடுத்தப்பட்டிருக்கிறார்களே அது குழந்தைகள் மேல் தொடுக்கப்பட்ட யுத்தம் இல்லையா? தர்மபுரிப் படுகொலைகளும், இன்று முஸ்லீம்கள் மீது ஏவி விடப்பட்டிருக்கும் போலீஸ் அராஜகமும் தடாவும் பொடாவும் போர் இன்றி வேறென்ன? இவையெல்லாம் நிராயுத பாணிகள் மேல் தொடுக்கப்பட்டுள்ள யுத்தங்கள் தானே. இந்தப் போரின் பகைப்புலத்தில் முகிழ்த்தவை தானே பூமணியின் வெக்கையும் பாமாவின் கருக்கும் வேறு பலவும். இவை இலக்கியங்கள் இல்லையா?

சரி, உங்களின் கேள்விக்கு வருவோம். போரினாலே ஈழத்தமிழர்கள் நாடிழந்தார்கள், உயிரிழந்தார்கள் என்பதெல்லாம் சரி, ஆனால் இவர்கள் எப்போது உயிரிலும் மேலாகத் தாம் கட்டிக்காத்து வரும் சாதி அபிமானத்தை விட்டுத் தொலைக்கிறார்களோ, எப்போது பொதுத் தமிழ்ப் பண்பாட்டை தூக்கிபோட்டு உடைக்கிறார்களோ, எப்போது தமது ஒழுக்கவாத பாலியல் மதிப்பீடுகளை கைவிடுகிறார்களோ அப்போதுதான், போர் நடந்தாலென்ன நடக்காவிட்டாலென்ன புலம் பெயர்ந்தாலென்ன பெயராவிட்டால் தான் என்ன 'ஆமான' இலக்கியம் எழுத முடியும்.

**ஈழத்திலே இப்போது நடந்து கொண்டிருக் கும் விடுதலைப் போரினால் அங்கே சாதி ஒடுக்குமுறை அற்றுப் போய் விட்டது என இங்கு ஒரு கருத்து பரப்பப்படுகிறதே?**

இருபது வருடங்களுக்கு மேலாக தமிழ் பேசும் மக்கள் மீது இலங்கைப் பேரினவாத அரசு தொடுத்துவரும் யுத்தத்தால் இப்போது கிராமங்கள் என்ற நிலவியல் சமூகவியல் அமைப்பே பெரும்பாலும் குலைந்து போயுள்ளது. நாளுக்கு நாள் மக்கள் நாட்டுக்குள்ளேயே தீவு - நாடு வன்னி - மன்னார் என்று புலம்பெயர்ந்து அகதிகளாக அலைகிறார்கள். இதனால் சாதி அமைப்பில் சற்று நெகிழ்வு ஏற்பட்டிருக்கிறது. அதாவது இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டிருப்பதால் இப்படி பல கலாச்சாரக் கட்டுமானங்கள் சற்றே நெகிழ்ந்துள்ளன. ஆனால் சாதி ஒழிப்பில் புலிகள் ஈடுபட்டிருக்கிறார்கள் எனக் கூறுவது சரியாகாது. ஒரு வெறும் 'வன்கொடுமைச் சட்டம்' எதைச் சாதித்து விடும். இந்தியாவில் கூடத்தான் 'சாதி வன் கொடுமைச் சட்டம்' உள்ளது. அது எதைச்



படிப்பகம்

www.padippakam.com

சாதித்துள்ளது? புலிகள் பண்பாட்டுத் தளத்தில் என்ன செய்கிறார்கள்? இந்து மதத்தைக் குழி தோண்டிப் புதைக்காமல் சாதி ஒழியுமா? புலிகள் தங்கள் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் உள்ள கல்வி நிலையங்களிலும் வேலைத் தளங்களிலும் தலித்துக்களுக்கான இட ஒதுக்கீடுகளை வழங்கத் தயாரா? இன்று புலிகளின் கட்டுப்பாட்டின் கீழுள்ள லப்பா சிப்பாக் கட்சிகளை பாராளு மன்றத்தில் தலித்துக்களுக்கான தனித் தொகுதி களை வழங்கக் கேட்டுப் போராடுமாறு அறி வுறுத்துவார்களா? இந்து மதத்தை ஒழிப்பதற்குப் பதிலாய் அதைத் தளைத்தோங்கச் செய்யும் முயற்சியிலல்லவா புலிகள் ஈடுபட்டிருக்கிறார் கள். அகதியாய் ஆறாயிரம் மைல்களுக்கு அப்பால் ஓடினால் கூட இந்தச் சனியன் விடாமல் துரத்து கிறது. பிரான்ஸின் தலைநகர் பாரிஸில் புலிகள் மேன்மை கொள் சைவ நீதியை உலகெல்லாம் விளங்கப் பண்ண ஒரு முத்துமாரியம்மன் கோவில் கட்டி கோவில் முதலாளிகளாய் இருந்தால் எப்படி இந்து மதம் ஒழியும்? இந்து மதத்தின் கருத்தியலான சாதி எப்படி ஒழியும்? தங்களுடைய கோவிலிலாவது குறைந்த பட்சம் ஒரு தலித் பூசாரியை கொண்டு பூசை நடத்தப் புலிகள் தயாரில்லையே. இவர்கள் எப்படிச் சாதியை ஒழிக்கப் போகிறார்கள்? ஈழத்திலே இயல்பு நிலை திரும்பினால் மறுபடியும் நெகிழ்வு கள் கெட்டிதட்டும். அப்போது நீறு பூத்திருக்கும் சாதி நெருப்பாகும். இன்று கூட ஈழத்தில் சாதிய மோதல்கள் அங்கொன்றும் இங்கொன்றுமாய் நிகழ்வதை மறந்து விடக்கூடாது. தமிழீழ விடுதலைப் போராட்டம் உக்கிரம் கொண்டிருந்த வேளையில்தான் யாழ்ப்பாணத்து வெள்ளாளர் கள் E.P.R.L.F. என்ற இயக்கத்தை ஈழம் - பள்ளர். R.L.F. என்று விரித்தழைத்தார்கள் என்பதையும் மறக்கக்கூடாது. யுத்தச் சூழலிலிருந்து, தமிழீழப் போராட்டத்தால் புடம் போடப்பட்ட இவர்கள் தான் வெள்ளாள சிவந்த பெண் தேடி தினப் பத்திரிகைகளில் விளம்பரம் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள்.

**ஈழத்திலே என்னென்ன சாதிகள் உள்ளன?**

பள்ளர், பறையர், நளவர், சக்கிலியர், துரும்பர் இவை தலித்துக்களிடையே உள்ள முக்கிய சாதிப் பிரிவுகள். வெள்ளாளர், கரையர் மட்டக்களப்பிலே முக்குவர் ஆதிக்க சாதிப் பிரிவுகள். இவை தவிர சாண்டார், மடப்பள்ளி வேளாளர், கோவியர், கைக்குளர், கொல்லர், வடுகர், தட்டார், தச்சர், திமிலர், பரவர், சாணார், பண்டாரம், வண்ணார், கடையர், அம்பட்டர் போன்ற சாதிகளும் உள்ளன.

**விடுதலைப் புலிகளின் தலைவர் ஒரு தலித் என்று தலித் முரசு பத்திரிகையில் பழ. நெடுமாறன் குறிப்பிட்டிருந்தார். அவர் எந்த தலித் சாதியைச் சேர்ந்தவர்?**

விடுதலைப் புலிகளின் தலைவர் ஒரு தலித் கிடையாது. அவர் கரையார் என்ற ஆதிக்க சாதியில் பிறந்தவர். ஈழத்திலே முதன்மை ஆதிக்க சாதியான வெள்ளாளருக்கு அடுத்த நிலையில் உள்ளவர்கள் கரையார்களே. பெரும்பாலான யாழ்ப்பாணத்துக் கரையோரப் பிரதேசங்களில் இவர்களே முதன்மை ஆதிக்க சாதியினர்.

**ஈழத்திலே பார்ப்பனர்கள் ஆதிக்க சாதி இல்லையா?**

நேரடியாக இல்லை. ஆனால் இந்து சமூகத்தின் சாதியப் படிநிலையில் பார்ப்பனர்கள் சாதிய மேலடுக்கில் உள்ளவர்கள் மட்டுமல்ல. சாதியமே அவர்களால் வளர்த்தெடுக்கப்பட்ட கருத்தியல்தானே. அந்த வகையில் ஈழத்தில் கோலோச்சுவதும் பார்ப்பனியக் கலாச்சாரமே. அக்கலாச்சாரத்தைக் காவிச் செல்பவர்கள் வெள்ளாளர்கள், கரையார்கள்.

**பார்ப்பன ஆதிக்கமே இல்லாத சூழலில் பார்ப்பனியம் என்று எப்படி அழைக்கலாம்?**

ஈழம் எங்கேயோ ஆப்பிரிக்கா கண்டத்தில் இல்லை. இந்தியாவின் கீழே கூப்பிடு தொலை வில் தொங்கிக்கொண்டுள்ளது. மொழி, பண் பாடு, இதிகாசம், இலக்கியம், புராணம், பூசை, புனஸ்காரம், வேதம் எல்லாமே இந்தியாவி லிருந்து அங்கே வந்தவைதான். சாதியக் கலாச்



படிப்பகம்

www.padippakam.com

சாரமும் இந்தியாவிலிருந்துதான் இறக்கப்பட்டது. சாதியக் கலாச்சாரம் பார்ப்பனியத்தின் விளைவு தானே.

**புகலிடத்தில் தலித் எழுச்சி எவ்விதம் பிரதிபலிக்கிறது?**

தமிழகத்தில் நடைபெற்ற தலித் எழுச்சி மெல்லப் புகலிடத்துக்கும் பரவிற்று. இன்று புலம் பெயர் தமிழ் அறிவுப் புலத்தில் தலித்தியம் தனது கலகக் குரல்களை எழுப்புகிறது. தலித் இலக்கியம், தலித் பெண்ணியம் போன்ற கருத்தாக்கங்கள் எதிர்ப்புக்களை வெற்றிகொண்டு நிறுவப்பட்டு விட்டன. அதைத் தக்க வைத்துக் கொள்ள இடைவிடாமல் இயங்குகின்றன. தொடக்கத்தில் 'தலித் முரசு' இதழ்களை எமது தோழர்கள்தான் இங்கு வாங்கி விநியோகித்தனர். சுமார் 25 பிரதிகள் வரை விநியோகித்தோம். இப்போது புத்தக விற்பனை நிலையங்களிலேயே அவற்றைப் பெற்றுக் கொள்ளும் நிலை ஏற்பட்டுள்ளது. 'புதிய கோடாங்கி' முதலிய தலித் இதழ்களுக்கு நேரடியாக சந்தாதாரர்களும் உள்ளனர்.

**தலித்தியத்துக்கு என்ன வகையாக அறிவுப் புலங்களில் எதிர்ப்புக் கிளம்பியது?**

என்னத்தைக் கிளப்பப் போறான்கள்... முதலில் தலித்தியம் வர்க்கப் போராட்டத்துக்கு எதிரானது என்றார்கள். தமிழ் விடுதலைப் போராட்ட வேளையிலே தமிழர்களை தலித்தியம் கூறு போட்டுவிடும் என்றார்கள். பின் குறுங்குழு வாதம் என்றார்கள். இப்போது ஒன்றும் செய்யப் பாதையில்லாமல் இது தமிழகத்தில் அ. மார்க்சிடம் கடன் வாங்கிய தத்துவம். இது ஈழத்துக்கு செல்லுபடியாகாது. ஈழத்து சாதி அமைப்பு வேறு வகையானது. அதற்கு இடது சாரிகளின் சாதி எதிர்ப்பு வழி முறைகளே தோதானது என நொட்டுகிறார்கள். இந்த இடது சாரி வழி எதிர்ப்புப் போராட்டமே ஈழத்துக்கு சரியானது என்று இதுவரை புகலிடத்தில் எந்தவொரு தலித்தும் பேசியதாகவோ எழுதியதாகவோ நான் அறியேன்.

**அது என்ன இடது சாரி வழி எதிர்ப்புப் போராட்டம்?**

1960களில் ஈழத்தில் இடது சாரிகளின் தலைமையில் சாதி எதிர்ப்புப் போராட்டம் நிகழ்ந்தது. இடது சாரித் தலைமைத்துவத்திலிருந்தவர்கள் - இவர்களில் முக்காலே மூணு வீசம் வெள்ளாளர்கள்- வர்க்கப் போராட்டத்தின் ஊடாகத்தான் சாதிப்பிரச்சனையைப் பார்த்தார்கள். நமது உற்பத்தி உறவு சாதிய உற்பத்தி உறவே என்ற மிக எளிய விடயத்தைக் கூட அவர்கள் புரிந்து கொள்ளவில்லை. ஒரு தலித்துக்களுக்கான இட ஒதுக்கீட்டு கோரிக்கையையோ, இரட்டை வாக்குரிமைக் கோரிக்கையையோ இவர்கள் மறந்தும் உச்சரிக்கவில்லை. சுருக்கமாகச் சொன்னால் இன்றுள்ள பிரக்ஞாபூர்வமான தலித் தலைமை, தலித் தனித்துவம், தலித் பண்பாடு, தலித் இலக்கியம், தலித் கட்சி போன்றவற்றை நிராகரிப்பதற்காக வெள்ளாளப் பதர்களாலும் அவர்களின் அடிவருடிகளாலும் முன்மொழியப்படுவதுதான் இடது சாரி வழி சாதி எதிர்ப்புப் போராட்டம். இன்னொன்று ஈழத்திலுள்ள சாதியமைப்பும் தமிழகச் சாதியமைப்பும் வேறு வேறானவை என்கிற அறிவு சீவிகள் ஈழத்தில் பார்பனர்கள் நேரடி ஆதிக்க சாதி இல்லை என்ற குழந்தைப் பிள்ளைக்கு கூட தெரிந்த புள்ளியைத் தவிர வேறெந்த காரணங்களாலும் தமது வாதத்தை இதுவரை நிறுவியதில்லையே. இந்த அறிவு சீவிகள் வீரகேசரியின் மூன்றாவது பக்கத்தில் 'ஈழச் சாதியமைப்பும் தமிழகச் சாதியமைப்பும் ஒரு ஊடாட்டமும் ஆள் நிலை நோக்கும்' என்று கட்டுரை எழுதுவார்கள். அப்பத்திரிகையின் இரண்டாவது பக்கத்திலேயே சாதிய திருமண விளம்பரம் பல்லிளித்துச் சிரிக்கும். அதைத் தட்டிக் கேட்க வக்கில்லை... என்ன ஆய்வுச் செருப்பு வேண்டிக்கிடக்கிறது?

**தமிழகத்தில் தலித் உணர்வாளர்களால் எழுப்பப்படும் 'நாங்கள் இந்துக்கள் அல்ல' என்ற முழக்கம் புகலிடத்திலும் எதிரொலிக்கிறதா?**

நமது மொழி சாதி காப்பாற்றும் மொழி,



படிப்பகம்

www.padippakam.com

நமது கலாச்சாரம் சாதி காப்பாற்றும் கலாச்சாரம், நமது இலக்கியம் சாதி காப்பாற்றும் இலக்கியம் என்றார் பெரியார். எங்கள் சூழலில் நமது தமிழ் தேசியம் சாதி காப்பாற்றும் தேசியம், நமது தமிழ் தேசியம் நம்மிடையே உள்ள சிறுபான்மை சமூகத்தை இரவோடு இரவாக வடபுலத்தை விட்டுத் துரத்திய தேசியம் என்பவற்றையும் கணக்கில் எடுத்துக் கொண்டு நாங்கள் தமிழ் அடையாளத்தையே மறுக்கிறோம்.

**விடுதலைப் போராட்டம் நடைபெறும் சூழலில் நீங்கள் போராட்டத்தை விமர்சனம் செய்து 'கொரில்லா' நாவல் எழுதியிருப்பது விடுதலைப் போராட்டத்தை பின்னடையச் செய்யும் ஒரு முயற்சி என்றொரு பிரச்சாரம் இங்க மேற்கொள்ளப்படுகிறதே?**

விடுதலைப் போராட்டத்தை பின்னடையச் செய்வது குறித்த கேள்விகளை எல்லாம் நீங்கள் புலிகளிடம்தான் கேட்க வேண்டும். சுந்தரம், ஒபரேய் தேவன், ஜெகன் அமீன், சிறிசபாரத்தினம் என்று ஆரம்பித்து இன்று வரை சகோதர இயக்கப்படுகொலை செய்வது போராட்டத்திற்கு பின்னடைவு இல்லையா? அநுராதபுரத்திலும் எல்லைப் புறங்களிலும் அப்பாவி சிங்கள மக்களை கொன்று குவித்தது பின்னடைவு இல்லையா? சகோதர இயக்கங்களை தடை செய்து அழித்தது போராட்டத்திற்கு பின்னடைவு இல்லையா? ராஜினி, செல்வி, விமேலேஸ்வரன், தில்லை போன்ற எண்ணி லடங்கா கருத்துப் போராளிகளைக் கொன்று புதைத்தது பின்னடைவு இல்லையா? பிரேமதாசாவுடனும், சந்திரிகாவுடனும், ரணில் விக்கிரமசிங்கவுடனும் இரு வருடங்களுக்கு ஒரு முறை பின் கதவால் தேனிலவு கொண்டாடுவது பின்னடைவு இல்லையா? ஈழப் புலத்தில் அனைத்து மாற்றுக் கருத்துகளுக்கும் தடைவிதித்தது தொடர்ந்தது பின்னடைவு இல்லையா? எல்லாவற்றிற்கும் மேலாக பரம்பரையாக எம்மோடு கூட வாழ்ந்த இசுலாமிய மக்களை ஒரே நாளில் கொள்ளையிட்டு விரட்டியது போராட்டத்திற்குப் பின்னடைவு இல்லையா? முற்று முழுதாக மக்களிடமிருந்து அந்நியப் பட்டு 'தலைவர்' அவதாரமாய் ஆனது பின்னடைவு இல்லையா? அதுதான் எல்லாவற்றையும் பாழாக்கி நாசப்படுத்தி விட்டார்களே. இதில் நான் எதைப் பிடித்து பின்னே இழுக்க... இன்னொன்று, இன்று புலிகள் மட்டுமே போராட்டத்தைக் குத்தகைக்கு எடுத்திருப்பதால்தான் அவர்களைச் சுட்டிப் பேசுகிறேன். தவிர மற்றைய அனைத்து இயக்கங்களும் சந்தர்ப்பம் கிடைத்த போதெல்லாம் மக்களுக்கும் போராட்டத்துக்கும் துரோகம் இழைத்தவர்கள் தான், இழைத்துக் கொண்டிருப்பவர்கள்தான்.

**தலித்தியம் என்பது தலித் மக்களின் நியாயத்தில் இருந்து எழுவது. நீங்கள் தலித்தியத்தைச் சாக்காக வைத்து புலிகளுடனான உங்கள் தனிப்பட்ட கோபங்களைத் தீர்க்கிறீர்களா?**

நாங்கள் ஆரம்பத்தில் சாதியம், ஆணாதிக்கம் போன்ற சமூக இழிவுகள் தேசிய விடுதலையூடாக நீங்கும் என நம்பினோம். பின்பு வர்க்கப் புரட்சியூடாக இவற்றைச் சாதிக்கலாம் என நம்பினோம். எல்லாக் கனவுகளும் தகர்ந்திருந்த வேளையில்தான் கடந்த சில வருடங்களுக்கு முன்பாக எங்களுக்கு பின் நவீனத்துவ அறிதல் முறையும், விளிம்பு நிலைச் சிந்தனைகளும் அறிமுகமாயின. இந்தச் சிந்தனை முறைமைகள் வல்லாதிக்கவாதிகளின் அரசியலுக்கு எதிராய் இருக்கின்றன. இந்தச் சிந்தனை முறைமைகளை வரித்துக் கொண்ட நாங்களும் புலிகள் உட்பட்ட எல்லா வல்லாதிக்க சக்திகளின் மேலும் கடும் விமர்சனங்களை வைத்துக்கொண்டிருக்கிறோம்.

**தமிழகத்தில் பார்ப்பனர்கள் காட்டும் புலி எதிர்ப்புணர்வும் உங்களின் எதிர்ப்புணர்வும் எப்படி வேறுபடுகின்றன?**

பாருங்கள்; திராவிட இயக்கங்கள் மீது சோ. ராமசாமி, சுந்தர ராமசாமி, சுப்பிரமணியசாமி போன்ற சாமிகள் வைக்கும் காழ்ப்பான விமர்சனங்களுக்கும் திராவிட இயக்கங்கள் மேல் அ. மார்க்ஸ், எஸ்.வி. ராஜதுரை போன்றவர்கள் வைக்கும் இடது சாரி விமர்சனங்களுக்கும் இடையே வித்தியாசம் உண்டு. நான் புலிகளை



படிப்பகம்

www.padippakam.com

நூறு சதவீதம் எதிர்க்கிறேன். ஆனால் இலங்கை இனவாத அரசை இருநூறு சதவீதம் எதிர்க்கிறேன். புலிகளின் இருப்புக்கு காரணமே இலங்கை பேரின வாத அரசின் இன ஒடுக்குமுறைதான் என்பதை நான் உறுதியாக நம்புகிறேன். சோ. ராமசாமி மற்றும் இருபத்தாறு உயிர்களைத் தூக்கிலிட்டு 'லீவர்' இழுத்த சத்தம் இன்னும் கேட்காததால் நிம்மதியான தூக்கமிழந்து அலைந்து கொண்டிருக்கும் கொலைகாரப் பாவி மாலன் போன்றவர்கள் நாம் புலிகள் மீது வைக்கும் விமர்சனங்களை அகண்ட இந்தியத் தேசியத்துக்கும், இந்திய அரசுக்கம் ஆதரவாகத் திரிக்கும் வேலைகளில் ஈடுபட்டிருக்கும் நயவஞ்சகத் தனத்தையும் நான் அறிவேன். அதே வேளையில் பால் தக்கரேயின் சிவசேனை புலிகளுக்கு ஆதரவு அளிப்பதன் பின்னாலுள்ள அரசியலையும் நாம் மறந்துவிடக்கூடாது.

**பெரியார் பெண் விடுதலையைப் பேசினார்; பிரபாகரன் நடைமுறைப் படுத்துகிறார் என்றொரு பிரச்சாரம் உள்ளதே?**

ஆயுத பாணிகளாவதால் மட்டும் பெண் விடுதலை அடைந்து விடுவாளா? ஈராக்கில் அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கு எதிராக பெண்கள் ஆயுதம் ஏந்தியுள்ளார்கள். அங்கு பெண்விடுதலை சாத்தியமாகிவிடும் என்று நாம் சொல்லலாமா? வியட்நாமில் இலட்சக்கணக்கான பெண்கள் ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்டார்கள். வியட்நாம் பெண்ணின் இன்றைய நிலை என்ன? வியட்நாமில் நான் சில காலம் வாழ்ந்திருக்கிறேன். இன்று ஆசியாவின் மிகப்பெரும் பாலியல் அடிமைகளை உருவாக்கும் சந்தையாக அது வளர்கிறது. லாவோஸில் இரண்டு பசுமாடுகளைக் கொடுத்தால் ஒரு பெண்ணை விலைக்கே வாங்கி விடலாம். சங்க காலப் புகழும் தமிழ் கலாச்சாரக் காப்பும் பாடிக் கொண்டிருக்கும் புலிகளின் தலைமையில் பெண் விடுதலை குறித்து சிந்திப்பது மூடத்தனம். பெண் புலிகள் வருடா வருடம் மார்ச் 8ம் தேதியில் 'தலைவரின் தலைமையில் பெண் விடுதலையை சாத்தியப்படுத்தியிருக்கிறோம்' என்று அறிக்கையிடுவது மகா அப்பாவித்தனம்.

**புகலிடச் சிறுபத்திரிகைச் சூழலில் சமபாலுறவுகள் குறித்து என்ன அபிப்பிராயம் நிலவுகிறது?**

காதலின் சூட்சுமமும் உடல்மொழியும் அறியா சில வரட்டு மார்க்ஸிஸ்டுகளையும், கலாச்சாரக் காவலர்களான தமிழ்த் தேசியர்களையும் தவிர இங்குள்ள சிறுபத்திரிகைச் சூழல் சமபாலுறவுகளை அங்கீகரிக்கிறது. ஒப்பீட்டளவில் தமிழக சிறுபத்திரிகைச் சூழலை விட புகலிட சிறுபத்திரிகைச் சூழலில் சமபாலுறவு குறித்த கரிசனங்கள் அதிகம் என்றே நம்புகிறேன்.

**காலச்சுவடு தமிழ் இனியை புகலிடங்களிலும் தொடர்ந்து நடத்தப் போவதாக செய்திகள் வருகின்றனவே! நீங்கள் பங்கெடுப்பீர்களா?**

எனக்கு இது புதிய செய்தி. கருத்தரங்குகள் புகலிடங்களிலும் தொடரப்போகின்றன என்பது நல்ல செய்தியும் கூட. தமிழ் இனி 2000 த்தின் மீது வைக்கப்பட்ட நியாயமான விமர்சனங்களுக்கு காது கொடுத்தும், புரவலர்களிடம் விலை போகாமல், இலக்கியம் மூலம் வியாபாரத்தை விருத்தி செய்ய முயலாமல், மாற்றுக் கருத்துகளுக்கும் உரிய இடமளித்து, குடித்து விட்டு வரக் கூடாது, அழைப்பிதழ் இல்லாமல் வரக்கூடாது, அரங்கினுள்ளே சத்தம் போடக்கூடாது, முத்தம் கொடுக்கக் கூடாது போன்ற போலிஸ் சட்டங்களின்றி அவர்கள் ஒரு கருத்தரங்கு நடத்தினால் மிகுந்த மகிழ்ச்சி. அதை விடுத்து அடாவடி 2000 தான் அடுத்து வரும் ஆண்டுகளிலும் தொடருமெனில் ஒரு அறிக்கையை விட்டதன் பின்னால் நாங்கள் ஒதுங்கிக் கொள்ளலாம். வேறென்ன செய்ய முடியும்? அறமிஞ்சிப் போனால், இந்தியன் சுஜாதாவும் கடப்பாறை ஜி.ஆஸ்.ஆர். கிருஷ்ணனும் வருவார்களானால் அவர்களுக்கு விமான நிலையத்தில் கறுப்புக் கொடி காட்டுவது குறித்து யோசிக்கலாம்.

**கொரில்லா விமர்சனக் கூட்டத்துக்கு தந்தை பெரியார் திராவிடக் கழகத்**



படிப்பகம்

www.padippakam.com

**தலைவர்களில் ஒருவரான ஆனூர் ஜெகதீசன் வந்திருந்தது குறித்து?**

மிகவும் மகிழ்ந்தேன். எனக்கொரு நினைவுப் பரிசும் அளித்தார். அவரோடு உரையாடக் கூடிய சூழல் அமையவில்லை. ஆதலால் வேறெதுவும் சொல்ல முடியவில்லை.

**புலம் பெயர் சூழலில் ஈழத்துப் பெண்ணியவாதிகள் என்ன மாதிரியாக இயங்கி வருகிறார்கள்?**

மிகத் தீவிரமாக இயங்கி வருகிறார்கள். பெண்கள் என்ற பொது சாராம்சவாதத்தை விட்டுவிட்டு தலித் பெண்கள், கறுப்புப் பெண்கள் என்ற வித்தியாசங்களை நோக்கி நகரவும், குடும்பச் சிதைவு, மறு உற்பத்தி மறுப்பு என்ற தளங்களிலே பேசவும் எழுதவும் செயல்படவும் செய்கிறார்கள். சக்தி என்ற பெண்ணியப் பத்திரிகை வருவதை அறிந்திருப்பீர்கள். வேறு வேறு பத்திரிகைகளில் ஆண்களுடன் இணைந்து செயற்பட்டுக் கொண்டிருக்கும் பெண்ணியர்களிடமும் தீவிர உழைப்புக் காணக்கிடைக்கிறது. இந்த ஆண் பத்திரிகையாசிரியர்களை துரத்தி விட்டு இந்தப் பெண்ணியர்கள் பத்திரிகைகளை, களங்களைகைப்பற்றிக் கொள்ளும் போது மேலும் பல பரிமாணங்கள் புகலிடப் பெண்ணியத்துக்கு கிடைக்கக் கூடும் என நம்புகிறேன்.

**ஈழத்தில் முசுலீம்கள் தாங்கள் ஒரு தேசமென எழுவது குறித்து?**

நான் ஒரு தேசத் துரோகி. தேசிய அபிமானம், மொழி அபிமானம், சாதி அபிமானம் எல்லாவற்றையும் மக்கள் துறக்கக் கடவர் - என்ற தந்தை பெரியாரின் வாக்கை முன் நிபந்தனையாக வைத்துக் கொண்டு ஒன்று கூறுகிறேன். முசுலீம் மக்களுக்கு தங்களுடைய அரசியலை தாங்களே தீர்மானிப்பதற்கு உள்ள உரிமைக்கும் நாம் நிபந்தனையற்ற ஆதரவு அளிக்கிறோம்.

●

# பட்டுப்பூச்சிகள் வருகைக்காக...

- பி. வசந்ததீபன்

புறாவுக்கு
புலியின் நகம் முளைத்திருக்கிறது.

பூக்களும் ரத்தம் சிந்துகிறது.

அரிவாள்களும், தீவட்டிகளும்
ஆங்காரத்தோடும், ஆவேசத்தோடும்
ஆர்பரித்து அலைகின்றன.

மனிதக்குருதி ருசிக்க
நாக்கைச் சுழட்டியபடி
வாழ்க்கை
கொக்கின் கவனத்தோடு காத்திருக்கிறது.

அச்சுறுத்தும் வேதனையை
அறுத்துப்போடு...!

துக்கம் விழுங்கித் தவிக்கும் காலம்
வெடித்து நொறுங்கட்டும்...
பூ பூக்காத இருதயங்கள்
பொசுங்கி போகட்டும்...

நனையட்டும் பனிமழையில்
காட்டு விலங்குகளின்
கண்களைப் போன்று
எரியும் ஆன்மாக்கள் யாவும்.

நிழல்களின் ஊஞ்சலில்
வெட்டுக்கள் நிறைந்த முகங்கள்
தூங்கி ஆறுதலடைவது எப்போது?

அழகான உலகை நிர்மாணிக்க
பட்டுப்பூச்சிகள் பறந்து வரும்
மனம் பூக்கும் நாள்
மிகு அருகில்...

●



படிப்பகம்

www.padippakam.com

# கண்ணுக்கெட்டியவரை கவிதைத் தூறல்

- ப்ரதிபா ஜெயச்சந்திரன்

'உன் இமைகள் பிரியும் போதெல்லாம்
பீலிகள் விரல்களாய் நீண்டு
நினைவுகளை
சிவக்கக் கிள்ளுகின்றன'

'இரக்கத்தின் வாயிலில் மண்டியிடும்
பிச்சைப் பாத்திரம்'

'முற்றம் ஒதுக்கிய முதுகுகளில்
வானம் நெகிழ்ந்து
மழை நூலால்
தைத்துச் செல்லும்
நீர்ப் பூக்கள்'

'மஞ்சள் குளித்த பெண் பொழுதின்
மெல்லிய தூறல்'

'நாளைக் கிழித்தெறிவதுபோல்
எளிதில்லை நாளைக் கிழிப்பது'

'நாம் முரண்பட்ட மாலை
முதல்பனி வீழ்ந்த குளுமை
நெஞ்சில் நெறி கட்டிக் கொண்டது'

'என் சவக்குழியின் புற்களோ
புன்னகைகளையே
பூத்திருக்கும்'

'சில அந்திகளில்
முகம் கழுவி புனைந்து வானம்
வண்ணப் பட்டையால் கட்டி
விசும்பைப்
பரிசளிக்கக் காத்திருக்கும்
வாங்கிக் கொள்வோரின்றி
எல்லோர்
வாசல் முன்பும்'

'இறந்த காலம் அப்பிய துண்டுகளின் மீதுதான்
நிகழ்ந்தபடியுள்ளது வாழ்க்கை'
'காலத்தைத் தன்கீழ் இழுத்துப் போட்டு
மெல்ல ஊரும் ஒரு நத்தை'

மேற்கண்ட வரிகள் அழகிய பெரியவனின் தொகுப்பில் காணப்படும் சில கவிதை வரிகள்.

கனவுகள், மழை, பூக்கள், குளிர்மாலை, வண்ணச்சிறகு போன்ற மெல்லிய வார்த்தைகளினூடாகப் பயணப்பட்டு வாழ்க்கையை எடுத்து வைக்கிறார் கவிஞர். ஆர்ப்பாட்டமின்றி மெல்லக் கைகளின் அரவணைப்பிற்குள் புரிதலோடு பொதித்துக் கொள்ள வரும் சின்ன குழந்தை போல இவர் கவிதைகள்.

வார்த்தைகளில் சிக்கனம், வரம்பு மீறாத கற்பனை, தரைதொட்டு கால் நடக்கும் யதார்த்த முனைப்பு, தொடு தொலைவில் வாழ்வை வசப்படுத்த ஏங்கும் ஏக்கம், பூக்களை நட்சத்திரங்களாக்கிக் கைக்குள் வைத்து திருப்தியடையும் அலைபாயாத கவி மனசு, காலத்தையும் மடக்கிக் காலுக்கிழ் போட்டு நகரும் சூரத்தனம் - இப்படி நிறைய சொல்லிக் கொண்டே போகலாம்.

சின்னத் தொகுப்புதான் என்றாலும் தமிழில் தவிர்க்க முடியாத தொகுப்பு.

---

(நீ நிகழ்ந்த போது - அழகிய பெரியவன் - தமிழினி - ரூ.15)



படிப்பகம்

www.padippakam.com

# பெண்களும் - மநுவும் (அ) பெண்கள் - இதழ்கள் பற்றி

- நிகழ் அய்க்கண்

தினமும் காலையில் செய்தித் தாள்களை புரட்டினோமாயின் பெண்களுக்கு எதிரான குற்றங்கள் பற்றிய செய்திகள் இடம் பெறாத நாள் மிகமிக அரிது.

அதிரடிப்படை / போலீஸ் காவலில் பெண்கள் கற்பழிப்பு, கொடுமைப்படுத்தப்படல், மனைவியை விற்பது / எரிப்பது, பெண் சிசுக்கொலை, குப்பைத் தொட்டி / புதரில் வீசுதல், அரசின் தொட்டில் குழந்தை திட்டத்தின் கீழ் விட்டு விடுதல், பால்ய வயது திருமணம், சதி, இப்போது பரபரப்பாக வக்கிர காட்சிகள் - இப்பட்டியல் மிக நீண்டது.

வேதக்கல்வி, ஜோதிடம், ஆகியவற்றைப் பாடத்திட்டத்தில் சேர்ப்பது, பாராளுமன்றத்தில் பெண்களுக்கு இடஒதுக்கீடு இவைகள் குறித்து பத்திரிகைகள், தகவல் தொடர்பு சாதனங்களில் சர்ச்சைகள் நீடிக்கின்றன.

இவற்றிற்கெல்லாம் வெறும் பொருளாதார அணுகுமுறை மட்டுமே தீர்வாகுமா?

இவைகளைப் பற்றியெல்லாம் மகளிர்க்கான வெகுஜன, வார / மாதமிருமுறை, மாத இதழ்களில் தீவிரமான விவாதங்கள் பதிவு செய்யப்பட்டிருக்கிறதா எனில் ஏமாற்றமே.

மாதிரிக்காக,

மங்கையர் மலர் (செப்டம்பர் 2001, அக்டோபர் 2001), சிநேகிதி (ஆகஸ்ட் 2001, டிசம்பர் 2001), அவள் விகடன் (நவம்பர் 23/2001, டிசம்பர் 7/2001), பெண் மலர் (நவம்பர் 2001, டிசம்பர் 2001), பெண்மணி (டிசம்பர் 2001) போன்ற இதழ்களை உற்று நோக்க நேரிட்டது.

இவ்விதழ்கள், பெரும்பாலும் இந்துத்துவா என்ற பெயர் தாங்கியுள்ள பார்பனியக் கோட்பாடுகளை கலாச்சார கூறுகளை முன்னிறுத்திச் செயல்படுபவையாக இருக்கின்றன. அனைத்து இதழ்களிலும் ஒத்த தன்மைகளாக, ஜோதிடம், சமையல் (சைவம்) அழகுக் குறிப்புகள், இந்துக் கோயில்கள், வாஸ்து, மருத்துவபகுதி, புனிதப்பயணங்கள், அருளுரைகள் என்பன விரவிக்கிடக்கின்றன. எம்ப்ராய்டரி, கோலம், தையல், குழந்தையின்மை, பெண்கள் ஹாஸ்டல் கார்னர், லேடீஸ் கிளப் எனவும் சில இதழ்களில் காணமுடிகிறது.

இதில் வருகின்ற விளம்பரங்கள் கூட சமையல், அழகு, அதிர்ஷ்டக்கற்கள், மந்திரம், காயகல்பம், ஆங்கிலம் பேச, புனித பயணங்கள், ஜோதிடம் - பற்றியே இருக்கின்றன.

தொலைக்காட்சி, ரேடியோ, சினிமா பாட்டு, விளம்பரங்களில் வரும் பிரபல வார்த்தை, சொற்றொடர்கள் அப்படியே கட்டுரையின் தலைப்பாகக் கூட வருகின்றன.

மங்கையர் மலர் (10/2001) இரட்டைச் சிறப்பிதழில் "பெண் தெய்வம்" - குங்குமம், பட்டு அலங்கரிப்பு, மல்லிகைப்பூ, மூக்குத்தி, கழுத்து நகைகள், காது தொங்கட்டான், கண் மை, தலைக்கிரீடம், நெற்றிப்பொட்டு, தலை அலங்காரம் இவைகளுடன் முன் அட்டையில் காட்சி தருகிறது. இன்று, இதே போல, நாம் வெள்ளிக்கிழமையிலும், திருமணங்கள், வழிபாட்டு தலங்களிலும், விழாக் காலங்களிலும் நடமாடும் 'பெண் தெய்வங்' களைக் காணலாம்.

விளம்பரங்களில் சில பெண்களைக் கேலியுடன் நோக்குவதை அறியலாம். கிரின் லேபிள் காபி எக்ஸ்ட்ரா ஃப்ரியில் (Extra Free)

"எங்கள் எடை அதிகரித்துள்ளது பற்றி எங்களுக்கு சந்தோஷமே" - (அவள் விகடன் டிச. 7 இதழ்)

TVS Scooty விளம்பரத்தில்:



படிப்பகம்

www.padippakam.com

"ஸ்கூட்டி கிளாஸ் ரூமை விட பெட்டர். ஏன்னா, ஸ்கூட்டியிலே நீங்க யாரோட வேணுமானாலும் உட்காரலாம்" (அவள் விகடன் டிச. 7 இதழ்).

இருபதிலும், அறுபதிலும் இளமை உணர்வோடு வாழ 'காயகல்பம்'. 'வனப்பூட்டும் இளமை; வியப்பூட்டும் வீரியம்'. 'உடலுக்கு உறுதி' - பெண்மலர் (நவம்பர் - 2001 இதழ்).

செய்திகளாக வரும் கட்டுரைகள்: மூடத்தனங்களை ஊக்குவிப்பதாக இருக்கின்றன.

(உ.ம்.) 1. விவாகரத்துகள் நடப்பதற்குக் காரணம் - சந்திரனே! 'கிரகம்'தான் - நமது வாழ்க்கைப் பாதைக்கு அடிப்படையாகிறது.

2. மலர்களின் மூலம் ஜோதிடம் கூறுவது:

மல்லிகைப் பூ - அழகு மற்றும் மகிழ்ச்சி
கனகாம்பரம் - சுயநலம்
கதம்பம் - பொறுப்புணர்ச்சி

3. கடன் தொல்லை தீர தீப வழிபாடு.

4. இல்லறம் சிறக்க ஜோதிடம் பார்த்துத் திருமணம் செய்ய வேண்டும்.

- பெண்மலர் (நவம். 2001 இதழ்)

1. இழந்த பொருட்கள் மற்றும் காணாமல் போனவர்கள் கிடைக்க ஸ்லோகம் கூறினால் போதும்!

2. 'அழகாக தாய்ப்பால் கொடுக்கலாம்' என்ற தலைப்பில் அழகு குலையாமல் தாய்ப்பால் தர சில வழிகள்.

3. கடவுளை வணங்கி குழந்தை 'பாக்கியம்' பெற்றது பற்றிய ஒப்புதல் வாக்கு மூலங்கள்!

- சிநேகிதி (ஆகஸ்ட் 2001, டிசம்பர் 2001 இதழ்கள்)

பெண்கள் அவசியம் தெரிந்திருக்க வேண்டிய 25 வகையான சிறுதலைப்பிட்டு "தஸ்புஸ்கள்" எனப்பெயரிட்டுள்ளது. அதில் ஏழாவது சிறு தலைப்பாக வருவது

வின்டோ ஷாப்பிங் (Window Shopping):-

பர்ஸில், பாக்கெட்டில் சல்லிக்காசு இல்லாமல் பெரிய பெரிய ஷாப்பிங் காம்ப்ளக்ஸில் ஏறி இறங்கி 'பராக்'-பார்த்துவிட்டு வர்றதாம் - சிநேகிதி (டிச. 2001 இதழ்)

மங்கையர் மலரில் 'சில வார்த்தைகள்' என்று தலைப்பிட்டு:

I Love You, Friends day, காதலர் டே, Mother's day, Father's day போன்ற வெளிநாட்டு கலாச்சாரங்கள் இந்த மண்ணில் புகுவதை மேலோட்டமாக குறை கூறி, இறுதியில்

"அவரவர் தர்மத்தை அவரவர் செம்மையாக செய்து கொண்டு போனால், குடும்பமே அற்புதமாக உயரும் என்று நினைத்தார்கள்" என்கிறார்கள்.

- செப்டம்பர் 2001 இதழ்

இதே போன்று அக். 2001 இதழிலும் "வாழ்க்கையில் அவரவர்க்கு விதிக்கப்பட்ட கடமைகளை தர்மத்தை செய்யறதிலே எந்த ஏற்றத் தாழ்வும் இல்லை" என்கிறார்கள்.

கடமை, தர்மம் போன்ற வார்த்தைகளை நுணுக்கி ஆராய்ந்தால் 'மநு'-வின் மனப்பிரதிகளாக, பாதுகாவலர்களாக இருப்பதைக் காணலாம்.

ஜோதிடத்தில் கூட, இந்திய மரபிலான வாஸ்துகளும், சீன மரபிலான வாஸ்து 'புங்ஸ்வே' பகுதிகளும் இடம் பெற்றிருக்கின்றன. 'புங்ஸ்வே' முறைப்படி அரிசியில் அதிர்ஷ்டம் பார்க்கலாமாம் - அப்பட்டமான மூடநம்பிக்கை! பார்ப்பனியம் பல்வேறு வழிகளில் எளிய மனித மனங்களை மாசுபடுத்துகிறது. மறைமுக சூழல் கேடு!



படிப்பகம்

www.padippakam.com

கண்ணகி சிலை காணாமல் போனதற்கு கான்வெண்ட் கல்வியும் கரைக்க முடியாத மன மாசே காரணம்.

வீட்டில் ஐஸ்வர்யம் வேண்டும் என்றால் சீன புங்ஸ்வே வாஸ்துபடி "மீன் தொட்டிகள்" - வையுங்கள் என்கிறது. உச்சபட்ச மௌடீகம்.

- சிநேகிதி (ஆகஸ்ட் 2001 இதழ்)

மருத்துவ கேள்வி பகுதிகளை பார்த்தோமேயானால் பெண்கள் தொப்பையை குறைக்க வழிகள் (சிநேகிதி டிச : 2001 இதழ்), ஒல்லியாக இருக்கிறேன் குண்டாக வழி, முடி கொட்டுவதை தடுக்க வழி, கருப்பாக இருக்கிறேன் சிவப்பாக வழி. (மங்கையர் மலர். அக். 2001)

இப்படியாக அழகு நிலையங்களுக்கு ஆள் சேர்ப்பு; அடுத்த இதழுக்கு விளம்பரத்துக்கான அடித்தளம் - பாவம்! படித்த பாமரக்கூட்டம்.

## நாசுக்கான சாதி துவேஷம் :

1983-ல் ஜெயிலில் இருந்த பூலான் தேவியிடம் பேட்டி எடுத்திருக்கின்றனர். இப்போது நினைவுபடுத்தும் வகையில் கட்டுரை இடம் பெற்றிருக்கும் போலும். பேட்டி எடுத்தவரோ (இவரும் பெண்மணி) பூலான் தேவியோடு ஒருமையில்தான் பேசியிருக்கிறார். ஆனால் பூலானோ மாதாஜி என்றே அழைக்கிறார்.

கேள்விகளை வரிசைப்படுத்தினால்,

1) போலீஸாரின் கைக்குள் சிக்காமல் எப்படி இருந்தாய்?

2) அந்த மூன்று நாட்கள் தொந்தரவு?

3) உனக்கு குழந்தை பெற்றுக் கொள்ள ஆசையா?

இறுதியில் 'துர்க்கையை பிரார்த்தனை செய்' என்ற அறிவுரை! பூலான் தேவி 'க்ஷேமமாய் இருக்க' இவரும் வேண்டினாராம்.

- மங்கையர் மலர் (செப்.2001)

பால்ய விவாஹம் பற்றி 'அம்மா மடியில் கல்யாணம்' என்று தலைப்பிட்டு ஒரு செய்தி :

"இராஜஸ்தான் மாநிலம் ஜோத்பூர் - பாலி கிராமத்தில் தேவாஸி இனத்தினர் கணேஷ் சதுர்த்தி அன்று 80 சிறுமிகளுக்கு பால்ய விவாஹம் (அம்மா மடியில் தூங்கிக் கொண்டே) - வேதனைக்குரிய விஷயம்! திருமண ஊர்வலம் போலீஸ் ஸ்டேஷன் அருகே போனபோது போலீஸ்காரர்கள் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தனர்"

- மங்கையர் மலர் (அக். 2001)

நாட்டின் சட்ட - திட்டங்கள் பற்றியே அறியாத சட்டத்தின் காவலர்கள்!

சரி, நமது தமிழகத்தில் தில்லை நடராஜரைச் சுற்றியிருப்பவர்கள் இன்று வரை பால்ய விவாஹம்தானே செய்து கொள்கின்றனர். ஏன் இவர்கள் தடுக்க முனைவதில்லை.

பாரம்பரியம், அவாளுக்கு மட்டும். இந்த நாட்டின் சட்டத்திலிருந்து விதி விலக்கு - தனி நீதி, மறையவில்லை மநு - தர்மம்.

கடந்த நூற்றாண்டின் தொடக்கம் வரை பார்ப்பனர்கள் போற்றிக் கடைபிடித்த, இந்த நாகரிகமற்ற செயலின் விளைவுகளை ஆங்கிலேய எழுத்தாளர் காதரின் மேயோவின் தமிழாக்க புத்தகமான 'இந்திய மாதா' விலிருந்து அறிய முடியும். இதோ சிறு துளிகள் மட்டும் :

7 வயது - சிற்றின்ப விஷயத்தில் புருஷனுடைய கொடுமை பொறுக்க முடியாமல் உயிர் துறந்தாள்.

9 வயது - ஸ்திரி அவயத்தில் அதிகரணம். ரணசிகிச்சை செய்வது கூட துர்லபமாய்ப் போய்விட்டது. இவளைத் தவிர இவளுடைய



படிப்பகம்

www.padippakam.com

புருஷனுக்கு இரண்டு மனைவிகள். இப்பெண் ஆங்கிலக் கல்வி கற்றவள்.

10 வயது - ஆஸ்பத்திரிக்கு வரும் போது நடக்கக் கூட சக்தியில்லை. கல்யாணம் ஆனதிலிருந்து அவளால் எழுந்து நிற்கவும் முடியவில்லை.

10 வயது - நிற்கக்கூட சக்தியில்லை, பெண்குறியில் புண்ணுண்டாகி ரத்தம் பெருகி ஒழுகுகின்றது.

சென்னையிலிருந்து 300 மைல் தொலைவில் உள்ள ஓர் ஊரில் அந்த பெண்ணுக்கு பால்ய விவாஹம் செய்யப்பட்டது. 10 வயது ஆனவுடன் கணவரிடம் கொண்டு போய் விட்டனர். கணவர் மிருகத்தனமாக நடந்து கொண்டதால், ஈடு கொடுக்க முடியாததினால், தினமும் அவளை அடித்து துன்புறுத்த, அவள் நோய் வாய்ப்பட்டு, மூலையில் கிடந்தாள். கணவர் இரண்டாம் திருமணஞ் செய்ய, இவளைத் தன் தோள் மீது தூக்கிக் கொண்டு போய் மனித சஞ்சாரமில்லாத (காட்டில்) விட்டிருக்கிறான்.

- (இந்திய மாதா தமிழ் பதிப்பு)

அண்மையில் சுட்டுக் கொல்லப்பட்டு இறந்த பூலான் தேவிகூட பால்ய விவாஹத் திருமணத்தால் பாதிக்கப்பட்டிருக்கிறார். பால்ய விவாஹச் சட்டம் கூட 1891-ல் அறிமுகப்படுத்தப் பட்டு 1925-வாக்கில்தான் சட்டமாக அமுலுக்கு வந்திருக்கிறது.

சட்டம் என்பது நாடு ஜனநாயகத் தன்மையுடையது என்று காட்டிக் கொள்ளத்தானே ஒழிய உண்மையான அர்த்தத்தில் தடுத்து நிறுத்த அல்ல என்பதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

"பெண் குழந்தையாய் இருக்கும் போது கூட, பருவமடையாவிட்டாலும் திருமணம் செய்க" - மநு கூறியிருக்கிறார். மநு-வில் 24வயது ஆண் 8 வயது சிறுமியை மணக்கலாம், 30 வயது ஆண் 12 வயது சிறுமியை மணக்கலாம் என்கிறார்.

அருவருப்பாக இருக்கிறதா? மநுவின் ஆதரவாளர்கள் நம்மிடையே ஏராளம். மறைந்திருக்கும் விஷக்கொடுக்குகள் பற்றி எச்சரிக்கை இல்லாவிடில் 'மநு' மணி மகுடம் சூட்டும் நாள் வரும் ஆபத்து உள்ளது.

பிறந்த குழந்தை பெண்ணாக இருந்தால் கழுத்தை நெரித்து கொல்லும் வழக்கம் இங்கே இருந்திருக்கிறது. 1870-ல்தான் இதைத் தடுக்கும் சட்டம் இயற்றப்பட்டிருக்கிறது. ஆனால், இன்னும் தமிழகத்தின் சில பகுதிகளில் 'சிசுக் கொலை' பற்றி பத்திரிகை மூலம் அறிகிறோம்.

இக்காலத்தில் நவீன தொழில் நுட்பங்களும் (பெண் குழந்தையை) கருவிலே கொலை செய்ய உதவி புரிகின்றன.

டெல்லியில் "பெண் சிசு மரணத்தை" பற்றி அனைத்து மதத் தலைவர்களும் பங்கு கொண்ட நிகழ்ச்சியில் காஞ்சி மடத்தின் ஜெயேந்திரர் மங்கையர் மலர் செப். 2001-க்கு அளித்த பேட்டியில் ஒரு கேள்விக்கான பதில் மட்டும்.

கேள்வி : தில்லியில் நடைபெற்ற மாநாட்டில் தாங்கள் வலியுறுத்திய கருத்தின் அடிப்படையில் என்ன கூற விரும்புகிறீர்கள்?

பதில் : "மாத்ரு தேவோ பவ"; பிறகுதான் "பித்ரு தேவோ பவ"; மாதா, அன்னை, பெண், அவள்தான் இவ்வுலகில் நாம் வரக்காரணமாய் இருப்பவள். அவளை, அவளே எப்படி கொன்று கொள்ளலாம். இது மிகவும் இழிவான செயல். அருவருக்கத் தக்க விஷயம். ஒரு தாயானவள் இத்தகைய ஈனச்செயலை செய்வதற்கு வெட்கப் படவேண்டும். போராடி தன் வெற்றிக்கு வழிவகுத்துக் கொள்ள வேண்டும்" என்கிறார்.

உத்தியோகத்துக்காக வெளியே செல்லும் பெண்களின் ஒழுக்கம் பற்றி நாக் கூசாமல் தூற்றல் கருத்துக்களை வெளியிட்டவர் என்பதை எண்ணாமல் இருக்க முடியவில்லை.

பெண்ணுக்கு தீர்மானிக்கிற சக்தி 'மநு'-வில் எந்த இடத்திலும் வழங்கப்படவில்லை.



படிப்பகம்

www.padippakam.com

பெண்ணை சுட்டிவிட்டு ஆண் தப்பித்துக் கொள்ளும் தந்திரத்துக்குப் பின்னே மநு இருக்கிறார்.

மேலும் இந்தியாவில் 1000 ஆணுக்கு 931 பெண்தான் இருக்கிறார். சரிவிகிதக் குறைவுதனை சரி செய்யாவிட்டால் 'அகமணமுறை' நொடிந்து கலப்பு உண்டாகிவிடும் என்கிற ஐயமே இப்போதைய 'முற்போக்கு' முகபாவத்துக்கு அடிப்படையோ என எண்ணத் தோன்றுகிறது.

டாக்டர் அம்பேத்கர் அவர்கள் கூறும் போது பால்ய விவாஹம், கட்டாய விவாஹ முறை, சதி, சரிவிகித முறை - இவற்றிற்குக் காரணம் "அகமண முறையே" என்கிறார்.

(டாக்டர் அம்பேத்கர் தொகுதி : 7)

வைதீக மதக் கடவுள்கள், மதப்பழைமைச் சிந்தனை, அருளுரைகள், மேல் தட்டு - மேல்ஜாதி எண்ணங்கள், சமையலறையில் பெண்ணைத் தக்க வைத்தல், குடும்ப வாழ்வைப் பேணுதல், புனித ஸ்தலங்களுக்குப் போவது, குலம் - கோத்திரம் பேணுதல், அழகு பதுமையாகப் பெண்ணைச் சித்தரிப்பது, பன்மையை மறுப்பது போன்ற தன்மைகளை . மேற்கூறிய இதழ்கள் கொண்டுள்ளன. மேல்ஜாதி அல்லாத பிற நுகர்வோரையும் இந்த சதி வலைக்குள் சிக்க வைப்பதின் மூலம் 'திட்டமிட்ட கருத்து வன்முறையை' - திணிக்கின்றன.

## மக்கள் தொடர்பு சாதனங்கள் - மநு

பண்டைய ஆரிய சமூகத்தில் புரோகிதத் தொழில் பார்ப்பனர்கள் கையில்தான் இருந்திருக்கிறது. இவர்களின் சேட்டைகள் குணங்கள் பற்றி டாக்டர் அம்பேத்கர் கூறுகிறார்.

"வாசனைப் பொடிகளையும், தைலங்களையும், உடம்பில் பூசிக் கொள்ளுதல், குளித்தல், எண்ணெய் தேய்த்து உடம்பின் மீது மல்யுத்த வீரர்கள் செய்வது போலக் கட்டைகளால் உருட்டி எடுத்தல், நிலைக்கண்ணாடிகளைப் பயன்படுத்துதல், கண் மையிடுதல், மாலைகள் அணிதல், கன்னத்திலும், இதழிலும் செவ்வண்ணம் பூசிக் கொள்ளுதல், கடகம், கழுத்தணி ஆகியவற்றை அணிதல், கைத்தடி பயன்படுத்துதல், மருந்துப் பெட்டகம், குத்துவாள் ஆகியவற்றை எடுத்துச் செல்லல், பூ வேலைப்பாடுடைய பாத அணிகள், தலைப்பாகை, மணிமுடி அணிதல், வெண் சாமரம் வைத்துக் கொள்ளுதல், அலங்கார கரையுடைய மேலங்கி அணிதல்".

புரோகிதர்கள் பின்வருமாறு இழிவான உரையாடலில் ஈடுபடும் பழக்கமுடையவர்கள் :

"அரசர்களைப் பற்றிய கதைகள், திருடர்களைப் பற்றிய கதைகள், அரசாங்க மந்திரிகள், போர், பயங்கரச் சம்பவங்கள், போர்க்காட்சிகள் ஆகியவற்றைப் பேசுதல், உணவு வகை, பானங்கள், உடை வகை, படுக்கைகள், மாலைகள், வாசனைப் பொருட்கள், கிராமம் / நாடு / நகரம் பற்றிய பேச்சுகள், பேய் , பிசாசு கதைகள், நிலையானது - நிலையற்றது பற்றிய யூகங்கள்."

பிழைப்பிற்காக இழிந்த / பிற கலைகளை மேற் கொண்டு பொருளீட்டினர்.

கைரேகை பார்த்தல், நெடிய ஆயுள், செல்வ வளம், சகுனம், குறி, அதிர்ஷ்டசாலிகளாக்க மந்திரம், உலக அமைதிக்காக ஜெபித்தல், கர்ப்பம் தரிக்க மந்திரம், வீரியம் உண்டாக்கச் செய்தல், மருத்துவம் சார்ந்த தொழில் செய்தல். (டாக்டர் அம்பேத்கர் தொகுதி நூல். 7)

இன்றைய இதழ்களின் போக்கும், புராண கால புரோகித தொழில்களும், பல விஷயங்களில் இன்றளவும் ஒத்துப் போவதையும் நாம் அறியலாம்.

'மநு' - பெண்களை திட்டமிட்டு அவதூறு பரப்பி, கல்வியை மறுத்து, இல்லறம் காப்பவளாக விபச்சாரி ஆக்கி, குழந்தை பெறும் சாதனமாக்கி, ஆணின் காலைப் பிடித்துதான் வாழவேண்டும் என ஆக்கிவிட்டார் என்பதற்கு மநு தர்மத்திலிருந்து சில துளிகள் :-



படிப்பகம்

www.padippakam.com

"தூய்மை, பொறுமை, பிறனை விழையாமை, மது, புலால் உண்ணாமை, கற்புடமை, இவை கைம்பெண்ணுக்கு இலக்கணம்".

"நன்மக்கள் பெறுதல், தீ வளர்த்தல், முதலிய நற்கருமம் பணியாற்றல், இன்பம் தருதல், கணவனுக்கும், தென்புலத்தாருக்கும் மோட்சம் வழங்குதல், யாவையும் மனைவியின் மாண்புகளாகும்".

காமம், சினம், பொய், துரோக எண்ணம், ஒப்பனை, இருக்கை, படுக்கை யாவும் பெண்கள் பொருட்டே தோற்றுவிக்கப்பட்டன.

கூடா ஒழுக்கம், மாதரைக் கூடாமல் காத்திடுக, அன்றெனில் பிறந்த குலமும் அழியும், புகுந்த குலமும் அழியும்.

பெண் பிறவியை தூய்மையாக்கும் செயல்பாடுகள் எதுவும் இல்லை, பெண்ணுக்கு வெள்ளை உள்ளமும் இல்லை, பொய்யைப் போல அழகுடையவர் ஆவர். வேண்டாமென்று கணவன் விலக்கி வைத்தாலும், வேறொருவனுக்கு விற்றுவிட்டாலும் அவளின் மனைவித் தன்மை மாறாது. ஆதி நாள் முதல் இதுதான் மரபு.

மாதர் மண், கணவன் விதை, மண்ணும் விதையும் கூடி மக்கள் உயிர்கள் தோன்றுகின்றன.

விதை அதே பயிரை விளைவிக்கிறது. விதையின் வடிவத்தோடு தாவரம் யாவும் தோன்றும். நிலத்தின் அடையாளத்தோடு அல்ல. சிறப்புடையது விதையே தவிர, நிலமல்ல.

- மநு தர்மம் (ஆசிரியர் - தமிழ் நாடன்)

புத்த மதத்தின் எழுச்சியில் பெண், சுதந்திரம் பெற்றவள் ஆவாள். திருமணம் அவளை அடிமையாக்கவில்லை. புத்தமத விதியின்படி திருமணம் ஓர் ஒப்பந்தமாகவே இருந்தது. புத்தமத முறைமையில் அவள் சொத்து சேர்க்க முடியும். கல்வி கற்க முடியும், இதைவிடக் குறிப்பிடத்தக்கது என்னவென்றால், அவள் புத்தமதத்தின் பிக்குனிகள் அமைப்பில் உறுப்பினர் ஆக முடியும். அதன் மூலம் பிராமணனின் அந்தஸ்தையும், கௌரவத்தையும் அடைய முடியும்.

(டாக்டர் அம்பேத்கர் நூல் தொகுப்பு : 7)

"இந்து மதத்தில் ஜனநாயகம் இல்லை; ஜனநாயகம் இல்லாத இந்து மதத்தில் விடுதலை, சமத்துவம், சகோதரத்துவத்துக்கு வழியில்லை."

- டாக்டர் அம்பேத்கர்

மநுவில் -

குலங்கள் தழைக்க காரணம் = பெண்

குலங்கள் வீழக் காரணம் = பெண்

கலப்புக்கு காரணம் = பெண்

கலப்பு மறுப்புக்குக் காரணம் = 'மநு'

(கலப்பு) மறுப்பு X (குலங்கள்) காப்பு

"கலப்பு மணத்தடை, கலந்துண்ணல் தடை ஆகிய இரண்டு தூண்கள் மீதுதான் சாதி நிற்கிறது. சாதி முறைக்கும், கலப்பு மணத்தையும், கலந்து உண்ணுவதையும் தடை செய்யும் விதிகளுக்கும் உள்ள தொடர்பு நோக்கத்துக்கும், அதை அடையும் வழிகளுக்கும் உள்ள தொடர்பாகும். உண்மையில் வேறு எந்த வழியிலும் அந்த நோக்கத்தை அடைய முடியாது" என்கிறார் டாக்டர் அம்பேத்கர். (டாக்டர் அம்பேத்கர் : Vol : 7 Page : 198)

தலித்தும், பெண்களும் 'மநு'-விலிருந்து விலக்கி வைக்கப்பட்டிருக்கின்றனர். இந்த தூய்மையற்றவளே, கெடும் எண்ணமுள்ளவளே, பொய்யரே, சூத்திரர் - சண்டாளர்களே மொத்த இந்து சமூகத்தில் பாதிக்கு மேல் இருக்கிறார்கள். ஆனால், இன்று, இந்தியாவில் பெரும்பான்மையைத் தக்கவைக்கவும், இந்து மதச்சடங்குகள், சம்பிரதாயங்கள், உயிர்ப்புடன் பேணப்படவும் கருவியாக ஆக்கப்பட்டிருக்கின்றனர்.

'மநு'-வை மீள் உருவாக்கம் செய்வதில், பத்திரிக்கைகள், சினிமா, ஊடகங்கள், கல்வி நிறுவனங்கள் ஆகியன அணுக்கதிர் வீச்சு போல பேருதவி செய்கின்றன.



படிப்பகம்

www.padippakam.com

உதாரணத்துக்கு, கடந்த டிச.27 மும்பையில் காஞ்சி ஜெயேந்திரர் தமிழய்யர் டாட் காம் இணைய தளத்தினை துவக்கி வைத்து இந்து மதச் சடங்குகள், சம்பிரதாயங்கள், கலாச்சாரம், பாரம்பரியம் போன்றவற்றை எடுத்துரைக்கும் வகையில் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டு, உலக அமைதியும், நேசமும் மேலும் தழைக்கவும், கொடுமை, பயங்கரவாதம் ஒழியவும் இவை உதவிகரமாக அமையும் எனவும் கூறியிருப்பது கவனிக்கத்தக்கது.

- தினமணி (டிச. 27/2001)

எந்த வேதக்கல்வியும்- ஜோதிடமும் தலித்து களை தீண்டத் தகாதவர்களாகவும், பெண்களை எழுத்தறிவற்றவர்களாகவும், நுடமானவர்களாக வும் ஆக்கியதோ அவை இன்று 'இந்துத்துவா' அரசில் பாடத்திட்டமாகி விட்டன.

மநுவின் மறு பதிப்பாகவே அரசியல் சட்டத்தினை பார்க்கிறவர்களும் உண்டு.

சாதியின் மூலம் தீண்டாமையையும், பெண்கள் மீதான அவதூறுகளையும் கற்பிக்கும் 'மநு' நமக்குத் தேவையில்லை.

ஒற்றை அடையாளங்களை மறுக்கிற, 'மநு' விலக்கி வைத்துள்ள அனைவரையும் அய்க்கியப் படுத்தி வேதங்கள் / புராணங்களுக்கு எதிராகத் திரளவேண்டியது அவசியமாகிறது.

அனைத்து வகையான மத / மூடப்பழக்க வழக்கங்களை, நம்பிக்கைகளை நிராகரித்து 'மநு'-வுக்கு எதிராக திருப்பி விடும்போதே பெண் களுக்கு சமூக விடுதலை என்பது சாத்தியமாகும்.

'மநு'-வை' சிந்தனை தளத்திலிருந்து அகற்றி, செயல் தளத்தில் கலப்பை ஏற்பதின் மூலமும், கலந்துண்ணல் செயல்படுத்தும் போதுமட்டுமே தாயும் / மனைவியும் / பெண் குழந்தையும் / தலித்தும் தந்தை பெரியார் கூறியது போல சுதந்திர உணர்ச்சியை - அனுபவத்தை - தேடலைப் பெறுவோம்.

●

# முகத்தில் முகம்

'இசுலாத்துக்கு மாறுகிற 'தலித்', மறு நாளே தனது 'சாதி' அடையாளத்தைத் துறந்து விட்டு இசுலாமியனாக மாறி விட முடிகிறது' (புதிய கோடாங்கி, ஃபெப்ரவரி 2002) என்று ஈ.வெ.ரா. பெரியார் கூறி இருந்தாலும் சரி அ. மார்க்ஸ் கூறி இருந்தாலும் சரி, அல்லது சுகுணா திவாகர் கூறினாலும் சரி, அது தவறு என்றுதான் எனக்குத் தோன்றுகிறது. 'லெப்பை' என்று அழைக்கப்படுகின்ற முஸ்லீம்கள், பிற்பட்ட வகுப்பினராகக் கருதப்பட்டு அவர்களுக்கு இட ஒதுக்கீடும் அளிக்கப் படுகிறது. எனவே, இந்திய ஒன்றியத்து முஸ்லீம்கள் இடையே சாதி வேறுபாடுகள் உண்டா? இல்லையா? என்பது நன்கு ஆராயப்பட வேண்டும் என்று நான் கருதுகிறேன்.

- சோதிப் பிரகாசம்,
சென்னை - 49.

பிப்ரவரி கோடாங்கியின் நூல் விமர்சனப் பகுதி:- இப்பகுதியில் ஷோபா சக்தியின் 'கொரில்லா' இருவகையான எதிர்வு விமர்சனங்களுக்கு உட்படுத்தப்பட்டுள்ளது. இரு கட்டுரைகளையும் வெளியிட்டிருப்பது நாவலை கட்டுடைத்துப் பார்ப்பதற்கு மிகவும் ஏதுவாக அமைந்திருக்கிறது.

முதலாவதாக நண்பர் மதிவண்ணனின் பார்வை - ஈழம் சார்ந்த அறிவு பெரிதும் இல்லாத பார்வையாகவே படுகிறது. அதனை அவரே ஒப்புக் கொண்டுதான் எழுதுகிறார். ஒரு ஈழத்து நாவலை தமிழியப் பார்வையில் மறுவாசிப்பு செய்வதாகவேபடுகிறது. இருப்பினும் நாவல் அழுத்தமாகப் பதிக்க வேண்டிய பதிவுகளை பதியாமல் சென்று விடுவதை சுட்டிக் காட்டத் தவறவில்லை. உதாரணத்திற்கு ஓரிரண்டு: இயக்கங்களால் சமூக விரோதிகள் என்ற பட்டத்தோடு படுகொலை செய்யப்படுவதில் முதல் பலி ஒரு பஞ்சமரே என்பதை போகிற போக்கில் அழுத்தப்பதிவுகள் இல்லாமல்



படிப்பகம்

www.padippakam.com

சொல்லிப் போகிறது நாவல். இதே போல் அந்தோணி என்ற அகதி பற்றிக் கூறும் பொழுதும் இதே ரீதியில் நாவல் கடந்து போகிறது.

இயக்கங்களில் சாதிவாரியாகவே இணைக்கப்படுபவர்கள் இடையேயான சாதியத்தாக்கங்கள் தர்க்கிக்கப்படவில்லை. பொதுவாக தமிழிய சூழலில் வாழும் வாசிப் புத்தளத்திலேயே நாவல் வாசிக்கப்பட்டாலும் கறாரான விமர்சனப்பார்வையோடுதான் மதிவண்ணன் பார்த்திருக்கிறார்.

அதே சமயம், ஈழத்தை வாழிடமாகக் கொண்ட 'கற்சுறா'-வின் பார்வை இதிலிருந்து வேறுபடுகிறது. அதிகமாக நாவல் விட்டுச் சென்றதும், சொல்லாமல் நழுவிச் சென்றதுமான பதிவுகளை நம்முன் நிறுத்துகிறது. வாழிடத்து அனுபவங்களின் பின்புலத்தில் பார்க்க வாய்ப்புப் பெற்றமையால் நாவலில் உள்ளார்ந்த முரண்களை வெளிப்படுத்துகிறது.

ஆனால் இங்கு நமக்கு நமது சூழலில் போர் குறித்ததும், இயக்கங்களின் உள்ளார்ந்த பிரச்சனைகளைத் தொட்ட 'சீரியஸ்' நாவலாகத் தெரிந்திருக்கிறது. இதுவே ஈழத்திலிருந்தும், புலம் பெயர்ந்தோரிடமிருந்தும் நிறையப் பகுதிகளை வாழிடத்துப் படைப்பாளியான 'கற்சுரா' காட்டியிருக்கிறார். மேலும் அப்பகுதிகளின் ஊடே இந்நாவலையும் பார்த்து அளவிட அவரால் முடிந்திருக்கிறது.

இருபுறத்து வன்முறைகளைக் கூறும் இந்நாவல் இன்னொரு 'ஹே ராம்' திரைப்பட மாகத் தெரிகிறது. இருதரப்பு வன்முறைகளைக் கூறினாலும் திரையில் இந்துத்துவ அடையாளங் களே பெரும்பகுதியினை அடைப்பதால், இந்துத்துவ முத்திரையினை பதிப்பதாகவே படுகிறது. அதேபோல் இந்நாவலும் புலிகளின் சாகசங்களையும், பழி பாவங்களை விலக்கி புண்ணியம் தேடுவதாக அமைகிறது என்பதால் இறுதியில் இன்னொரு 'ஹே ராம்' போல் புலிகளின் முத்திரையினைப் பதிக்கிறதா?

எப்படியிருப்பினும் இருவகையான எதிர்பு விமர்சனங்களை ஒருங்கே வெளியிட்டிருப்பதன் மூலம் 'புதிய கோடாங்கி' ஒரு புதிய கட்டுடைப்பு வாசிப்புத் தளத்திற்கு அழைத்துச் சென்றுள்ளது என்றால் அது மிகையல்ல.



அடுத்து இதழில் இடம் பெறும் ஓவியங்கள் குறித்து: ஏன்? ஒரே ஓவியர் - நிலைய வித்வான் மாதிரி. அவர் வரையும் ஓவியங்களை மட்டுமே வெளியிடுகிறீர்கள். ஓவியங்கள் பற்றிய கவனம் தேவையில்லையா? கதைகள் மற்றும் முகப்பு ஓவியங்கள் எளிமையாக இருக்க வேண்டும் என்ற ஒற்றை பரிமாணத்திற்குள் அடங்கி விடாமல், பல்வேறு பரிமாணங்களுக்கும், தேடலுக்கும் வாய்ப்பளிக்கக் கூடியதாகவும், செறிவு நிரம்பிய தாகவும் இருக்க வேண்டியது அவசிய மில்லையா? அதற்கு முன்னர் இடம் பெற்ற ஓவியங்கள் ஓரளவு செறிவு நிரம்பியவை. உதாரணத்திற்கு மண்டையோட்டில் வைக்கப் பட்டிருக்கும் 'வாழைப்பழம்', 'முந்தானை முடிச்சு' போன்ற வெண்ணிற மற்றும் கருப்பு நிறக் கரங்களின் இணைவு (இதழ் அட்டைப்படம்) போன்றவை நன்கு வந்துள்ளன. மேற்குறித்த செறிவும் கருத்தாழம் மிக்கவை.

இவ்விதழில் வந்த ஓவியங்கள் படைப்பு வாசனை வீசாமல் "Commercial Smell" வீசுகின்றன. சிறிது கவனம் செலுத்த அன்புடன் வேண்டுகிறேன். ஓவியம் பற்றிய விமர்சன அரங்கை, அதற்கான தளத்தினை 'புதிய கோடாங்கி' ஏற்படுத்தினால் இன்னும் இதழ் சிறப்படையும்.

- உலகு,
பெருவை.



படிப்பகம்

www.padippakam.com

பிப்ரவரி இதழ் கிடைத்தது. அஸ்வகோஷின் சாதாரண கதைக்கு முதலிடம் தந்தது ஆயாசமாயிருந்தது. கொரில்லா குறித்த மதிவண்ணன் மற்றும் கற்சுறாவின் விமர்சனங்களை ஒப்பிட்டுப் பார்த்தோமேயானால் பெரும் உண்மை விளங்குகிறது. வலியை உணர்வதையும் உணர்ந்தது போல் உள்ள பாவனையையும் போட்டு உடைக்கும் உண்மை அது. கற்சுறாவின் உணர்வும் மதிவண்ணனின் பாவனையும் ஒப்பிட வேண்டியது தலித் எழுத்தாளர்களுக்கு அவசியமான ஒன்றுதான். போபாலில் திக் கூட்டிய மாநாடு... அ.மார்க்ஸ் சொல்வது போல அடுத்த Project தானே தவிர வேறெதுவும் அல்ல. அது இந்துத்துவ சக்திகளுக்கு, மேலெழும்பும் தலித்துகளை அடையாளம் காட்டுவது அல்லது போட்டுக் கொடுப்பது போன்ற வேலைதான். கருத்தம்மா கலந்து கொண்டிருப்பார் என்றே நம்புகிறேன். அவர் மனசாட்சி பேசுவதை தலையங்கத்தின் இடையிடையே கேட்க முடிகிறது. பாவியின் மௌனி குறித்தவை புதுமைப்பித்தன், லாசாரா, ஜெயகாந்தன் குறித்தும் போய் ஜெயமோகன் வரை வர வேண்டும். முகத்தில் முகத்திற்கு இன்னும் அதிக பக்கங்கள் ஒதுக்கப்படுவது மிகவும் நல்லது. ஆசிரியர் இது குறித்து கூடுதல் அக்கறை கொள்ள வேண்டும். அ. மார்க்ஸின் இறுதிப்படுத்தப்படாத அல்லது இறுதிப்படுத்தக்கூடாத(?)பார்வையை சோதிப் பிரகாசம் மிகவும் கட்டுப்படுத்திக் கொண்டு நக்கலைக் குறைத்துக் கொண்டிருப்பது புரிகிறது. இமையம் இன்னும் கொஞ்சம் எழும்ப வேண்டும் என்பது என் ஆசை. அரையாள் மிகவும் சிறப்பாகவே வந்திருக்கிறது. இது அந்த மக்களுக்கு யாரேனும் வாசித்துச் சொல்ல அதை அவர்கள் உணர்வதைப் பார்க்க வேண்டும். ஒட்டு ஒட்டாததை சுப்ரபாரதிமணியன் தொடர்ந்து கவனித்து வர வேண்டும். ஜனவரியில் கௌதம சன்னாவின் கட்டுரைக்கு வாசகர்களிடம் எதிர்வினையைக் கோருகிறேன். நன்றி!

– குருசாமி மயில்வாகனன்,
சிவகங்கை.

'கோடாங்கி' பிப்ரவரி இதழ் படித்தேன்; மலர் 1 - இதழ் 8 எல்லா வகையிலும் வளர்ச்சி - கலை ரீதியிலும், கருத்து வகையிலும்! ஒவ்வொரு பக்கத்தையும் நின்று நிதானித்துப் படிக்கும் வாசகன், நிச்சயம் சமுதாய மாற்ற உணர்வுகளுக்கு வசப்படுவான்; மிக்க பயனடைவான்; நடுநிலையோடு, நேர்மையோடு, படைப்புக்களையும், கடிதங்களையும் வெளியிட்டு வரும் ஆசிரியர் குழுவுக்கு, என் உளமார்ந்த பாராட்டுக்கள்; தமிழ் இதழியல் துறைக்குப் 'புதிய கோடாங்கி', புதிய வளங்களைச் சேர்க்கட்டும்; புதிய மாற்றங்கள், மிகத் தேவை!

தலையங்கம், 'போபால் சாசனம்' படித்தேன்; ஜனவரி 30 இந்து இதழில் Kancha Ilaiah வின் 'The Bhopal Dalit Declaration' எனும் கட்டுரையையும், Frontline-ல் வந்துள்ள கட்டுரையையும் வாசித்தேன்; 'போபால் மாநாட்டுக் கருத்தரங்கக் கட்டுரைகளைத் தொடர்ச்சியாகக் 'கோடாங்கி' யில் மொழி பெயர்த்து வெளியிடுவதுடன், நூல் வடிவிலும் தமிழ் மக்களுக்குத் தருக! இன்று இது மிகமிகத் தேவை... நன்றி.

- தி.க.சி,
நெல்லை.

பிப்ரவரி கோடாங்கி கண்டேன். போபால் சாசன தலையங்கத்தின் ஆரம்பத்தில் 50 ஆண்டு மோச நிலைக்கு காங்கிரஸ் மீது பழி போட்ட தகவலைப் படித்தேன். முட்டாளுக்கும், மூர்க்கனுக்கும், விபச்சாரங்களுக்கும் என்று சுதந்திரம் கொடுத்தாலும் 50 ஆண்டுகள் மட்டுமல்ல 500 ஆண்டுகள் ஆனாலும் கூட சுற்றி இருப்போர்க்கு பயனில்லை. கொள்ளைக்காரர்களும் கூட இதில் அடக்கம். வீரமில்லாத மக்களைப் பெற்ற நாடு அடிமை நாடாகவே இருக்கும் என்று நெப்போலியன் சும்மாவா சொல்லி வைத்தார்.

குருவி வர்க்கம் சிறுகதை சரியானபடி முத்திரை பதித்து இருந்தது. என்றாலும் குருவி



படிப்பகம்

www.padippakam.com

வர்க்கத்தை ஒதுக்கிவிட்டு கதாசிரியர் நாய் வர்க்கத்தை பயன்படுத்தி சிறுகதையை படைத்து இருக்கலாம். காரணம் நாய்கள் எல்லைகளை ஒதுக்கிக் கொண்டு வருவோர் போவோர் மத்தியில் எல்லை மீறி நடந்து கொள்கிறது. குருவி வரலாறு அவ்வளவாக தெரியாத காட்சி.

தூக்கம் சிறுகதை படித்தேன். தேவகியோடு கட்டிலில் தூங்குவது எல்லாம் வீட்டோடு இருக்கட்டும். இங்கே பார்க்க வேண்டிய பரிசீலிக்க வேண்டிய அழித்தொழிக்க வேண்டிய விஷயங்கள் எல்லாம் பல்கிவிட்டன. அவைகளை வெளிச்சம் போட்டு காட்டும் சிறுகதைகளை இடம் பெறச் செய்யுங்கள். இன்றைய தேவைகள் இதுதான். படுத்து தூங்க வேண்டிய காலம் இதுவல்ல. அப்புறம் எட்டுமாசமாகவே ஒரு விஷயத்தை கொட்ட வேண்டும் என்று நினைத்து வந்ததை இப்போது கொட்டி விடுகிறேன். கோடாங்கியில் வெளிவரும் கட்டுரைகள் நீ...ண்...ட.... படி இருக்க வேண்டாம். சுருக்கமாகவே மாற்றி வெளியிடுங்கள். எல்லோராலும் பொறுமையாக படித்திட முடியாது. அதுபோன்றவைகளை புறந்தள்ளிவிட்டு வேறு பக்கம் பார்வை திரும்பி விடும் அபாயம் வாசகர்கள் மத்தியில் வந்து விடும். எனவே சுருக்கமாக வெளியிட முயற்சி செய்யுங்கள். அதுவே நல்லது.

- ஜே.டி. மூர்த்தி,
வேலூர்.

'திண்ணி கட்டு நாள்' - ஒரு நல்ல சிறுகதை வாசித்த திருப்தி. பள்ளி சென்று படித்து பட்டம் பெற வேண்டிய பாலகனின் பாழ்பட்ட வாழ்க்கையை படு யதார்த்தமாக விளக்கி உள்ளார் அழகிய பெரியவன். கதையின் இடைச் செருகலாக விவிலிய வசனங்களை விவரித்து கூனி குறுகி மனம் கூச வைத்திருக்கிறார் படைப்பாளி. சிறார்களை படிக்க வையுங்கள்; அவர்கள் சுதந்திரமாக சிறகடித்து பறக்கட்டும். யூதாவும் ஓர் நாள் விடுபடுவான் - அவன் ஆயா இருக்கும்போதே....!

- எஸ். மைக்கேல்,
சென்னை - 116.

பார்ப்பனீய கருத்தியலான சாதிய ஒடுக்கு முறையை வருத்தத்துடன் பகிர்ந்து கொள்வதைப் போல் நடித்து பின் பகிரங்கமாக கூச்சமற்று சாதியத்துடன் கைகோர்த்து கொள்ளும் கருத்தை முன் வைக்கிறது அஸ்வகோஷின் 'குருவி வர்க்கம்' கதை (புதிய கோடாங்கி பிப்ரவரி 2002).

வர்ணம் அல்லது சாதி என்றால் முதலில் அதை ஒழித்தாக வேண்டும் என்பதால் அதை வர்க்கம் எனப்பெயர் மாற்றும் பார்ப்பனீயத்திற்கு ஆட்பட்ட மார்க்சிய தந்திரமாய் 'குருவி வர்க்கம்' எனும் தலைப்பு வேறு.

பெரியாருக்கு பிந்தைய திராவிடர் இயக்கங்கள், அம்பேத்கருக்குப் பிந்தைய தலித் இயக்கங்களின் தளர்வுகள், தோல்விகள், துரோகங்கள் இவைகளைத் தாண்டி இன்றும் நீர்த்துப்போகாத 'சாதி ஒழிப்பு' எனும் விடுதலை முழக்கத்தோடு சாதிய B.C.க்களோடு தவிர்க்க இயலாத கை கலப்பை நிகழ்த்த நகர்கின்ற தலித் அரசியலை அதன் வீர இளைஞர்களை அதற்கும் முன்பாகவே பொதுப் புத்தியின் (சாதிப் புத்தி) தன்மையில் குற்றவாளிகளாக்கி தன் B.C. சாதிகளை எச்சரித்து தலித்தியத்திற்கு எதிராக தயார் செய்யும் போக்கை மிக நுட்ப எளிமையுடன் அண்ணன் அஸ்வகோஷார் செய்திருக்கிறார். இதற்கு சராசரி அப்பாவி தலித்தைப் போல் 'புதிய கோடாங்கி' பயன்பட்டிருப்பது மிகத் துயரமானது.

என்னதான் சொல்ல வருகிறார் அஸ்வகோஷ்? சாதிக்கொடுமை, சாதி ஒதுக்கல் என்பது மனித / மிருக / பறவை இயற்கை என்கிறாரா? யார் எண்ணிக்கையில் வலுத்திருந்தாலும் தனியாக இருப்பவர்களை கொடுமை செய்வதும், தீண்டாமை கடைபிடிப்பதும் இயற்கை, அது



படிப்பகம்

www.padippakam.com

தவிர்க்க முடியாது என்கிறாரா? வாய்ப்பு வந்தால் தலித்துகளும் மற்றவர்களைக் கொடுமை செய் வார்கள் என்கிறாரா?

சாதியக் கொடுமைகளை பொது விவாதமாக்க முயலும் காலகட்டங்களில் அரசியல், கலை, இலக்கிய தளங்களில் இதைப்போன்ற பார்ப்பனீய சார்புகளை அவ்வப்போதைய சநாதன பேர்வழிகள் அனுதா பத்துடன் வைத்து பார்ப்பனீயத்தால் நிகழ்த்தப்படு கின்ற வன்முறைகளை நியாயப்படுத்துவதை வரலாற்றின் வழி தோறும் இறைந்திருக்கும் ரத்தத்துளிகளைப் பார்த்து நாம் நினைவுப்படுத்திக் கொள்ளலாம்.

பெரியாரும் அவரின் உண்மைக் கருஞ் சட்டை தோழர்களும் சாதிஒழிப்பு போராட்டங் களை வீதிகளில் முன் வைத்த காலத்தில் "கருப்புக் காக்கைகளை கல்லால் அடித்து விரட்டுவோம்" என்று வன்முறையை ஏவிவிட்டார் பார்ப்பனர் ராஜகோபாலாச்சாரி. அவ்வாசகங்களின் உயிர்ப்பு குருவி வர்க்கத்தில் கருப்பு அரசியலை நிகழ்த்தும் தலித்தியத்திற்கு எதிராக வெளிப்பட்டிருப்பதை யும் காணலாம்.

ஒரே சமயத்தில் காலச்சுவட்டில் ஒரு காலும், புதிய கோடாங்கியில் ஒரு காலும் வைத்துக்கொண்டு பயணம் செய்யும் வித்தை அறிந்தவர் அஸ்வகோஷ். ஆனால் சமயங்களில் முகவரியைத்தான் மாற்றி எழுதிவிடுகிறார்.

- அயன்புரம் ராசேந்திரன்
நீலகண்டன்

புதிய கோடாங்கி பிப்ரவரி இதழ் வந்தது. கவிதைகள் நிறைய இல்லையே. சிறுகதைகளில் நீண்ட நாள்களுக்குப்பின் அஸ்வகோஷ் கதை பார்த்ததில் மகிழ்ச்சி ஏற்பட்டது.

அந்தக் கதையை இப்படியும் பார்க்கலாம். எப்பொழுதுமே பெரும்பான்மை சிறுபான்மை அவமதித்து நசுக்கியே வந்துள்ளது. அதே நேரத்தில் பெரும்பான்மை சிறுபான்மையாகவும் கூடும். அப்போது அவர்களுக்கும் தாக்குதல் ஏற்படும். இதைப்போக்க பாதுகாப்பு தராத நண்பர்கள் என்ன நண்பர்கள்.

'இமயத்தின் 'அரையாள்' கதை சற்று நீளம் அதிகம். ஆனால் காலச்சுவடில் வந்த மண்பாரத்தைவிட இக்கதையில் அவருக்கு மொழிநடை கைவசம் வந்துள்ளது. கதையின் மையம் அரையாளாக இருந்து அவனைச் சுற்றியே எல்லாப் புள்ளிகளும் குவிவது சிறப்பாக உள்ளது. கதை தொய்வின்றிச் செல்வது படிக்க ஆவலாக உள்ளது. பையனின் மன அழுத்தம் இன்னமும் சற்று நன்கு பதிவாகி இருக்கலாம்.

பாப்லோவின் மனக்குறை நியாயமானது. நிகிலனின் மதிப்புரை மிக மேலோட்டமானது. நூலைப்படித்ததாகவே தெரியவில்லை. ப்ரதிபா வின் நாடகம் 'கோப்பு' படித்தேன். நாடகத்தின் முடிச்சு அவிழாதது குறை. இன்னமும் கொஞ்சம் வெளிப்படையாக காட்டி இருக்கலாம்.

தொழிற்சங்கம் பற்றிய கட்டுரை இன்ன மும் சுருக்கமாக இருக்கவேண்டும். கொரில்லா பற்றியும் பா. விசாலத்தின் நாவல் பற்றியும் வந்துள்ள கட்டுரைகள் சிறப்பாக நூல் படிக்க வேண்டிய ஆர்வத்தைத் தூண்டுகின்றன. குறை யையும் காட்டுகின்றன.

மௌனியைப் பற்றித் தொடர்ந்து இந்த இதழிலும் கட்டுரை வந்துள்ளது. மீட்புக்காகக் காத்திருக்கும் உன்னதமான படைப்பாளிகள் பட்டியலையும் வெளியிட்டிருக்கலாம்.

மாட்டின் முகமாக மாறுவது குறித்து ஓம்சக்தியில் சுப்ரபாரதிமணியன் எழுதிய கதை 'ஓட்டு' படிக்கும்போது நினைவுக்கு வந்தது. இதழ் மேலும் வளரட்டும்.

- வளவ. துரையன்,
கடலூர்.



படிப்பகம்

www.padippakam.com

# அயோத்திதாசர் சிந்தனைகள்

## பார்ப்பார்களென்று சொல்லிக்கொள்ளுவோர்களுக்கும் பறையர்களென்று அழைக்கப்படுவோர்களுக்குமுள்ளப் பழயவிரோதத்தை பரக்கப்பாருங்கள்

நாம் இப்பத்திரிகையின் வாயலாய் பார்ப்பார்களென்போருக்கும், பறையர்கள் என்போருக்கும் பௌத்தமார்க்கத்தை அழிக்க வேண்டி நேரிட்ட பூர்வ விரோதமே நாளதுவரையில் வைத்துக் கொண்டு திராவிட பௌத்தர்களைத் தலையெடுக்கவிடாமல் தாழ்த்தி பறையர் பறையரென்று பதிகுலையச் செய்து வருகின்றார்களென்று விளக்கிவருகின்றோம்.

அதற்குப் பகரமாக இப்போதும் நடந்துவரும் அக்கிரமத்தைப் பாருங்கள்.

அதாவது :- செங்கற்பட்டு ஜில்லா மதுராந்தகம் தாலுக்கா, 96-நெம்பர் ஓரத்தூர் கிராமத்தில் வாசஞ்செய்யும் பாப்பார்களெல்லாம் ஒன்றுகூடிக்கொண்டு பறையர்களென்னும் ஏழைக் குடிகளைப் பலவகைத் துன்பங்கள் செய்திருக்கின்றார்களாம்.

அவைகளை சகிக்கமுடியாமல் அக்குறைகள் யாவற்றையும் நமது ராஜாங்கத்தோருக்கு விளக்கவேண்டுமென்று கருதி யாவரும்கூடி கைச்சாத்திட்டு நமது பத்திரிகைக்கு எழுதியிருக்கின்றார்கள். அவற்றை இதனடியில் பிரசுரஞ்செய்திருக்கின்றோம். இதனைக் கண்ணுறும் கருணை தங்கிய நமது ராஜாங்கத்தார் எழியகுடிகளின்மீது இதக்கம் வைத்து இராஜாங்க யூரேஷிய அதிகாரிகளிலேனும், மகமதிய அதிகாரிகளிலேனும் ஒருவரை அனுப்பி அவற்றைத் தேறவிசாரிணைக்குக் கொண்டுவந்து அக்கிராமவாசிகளின் அக்கிரமங்களை அடக்கி ஏழைகளைப் பாதுகாப்பார்களென்று எதிர்பார்க்கின்றோம்.

பத்திராதிபர்

### கடிதம்

நெ.96, ஓரத்தூர் கிராமம்
ம.எம்.எம்.ஸ்ரீ,

க. அயோத்திதாஸ் பண்டிதரவர்கட்கு 96-ம் கிராமச்சேரியில் நீடூழியாய் வாசஞ்செய்யுங்குடிகள் யாவரும் தங்கள் மேலானகனத்தை வருந்தி யெழுதுவது யாதெனில்:- தங்கள் பத்திரிகையில் யாங்கள் எழுதியதை பிரசுரிக்கக் கோருகிறோம்.

மேற்கண்ட நெ.96 மதுராந்தகம் தாலுக்காவைச் சேர்ந்த ஓரத்தூர் கிராமத்தில் வசிக்கும் பாப்பார்கள் சுமார் 27 வீட்டுக்காரர்களும் ஒன்றாய் சேர்ந்து சேரியில் வசிக்கும் 28 வீட்டுக்காரரையும் பறையர்கள் நீங்கள் எங்கள் பட்டாபூமியின் வழியாய்ப் போகப்படாதென்றும், ஏரியில் ஜலம் யாங்கள் மொள்ளக்கூடா தென்றும், அப்படி மீறி மொள்ளுபவர் குடங்களை உடைத்துவிடுவதாகவும் சொன்னதை கேட்டு சிலகாலம் பயந்து ஜலமெடுக்காமலிருந்தோம். எங்களுக்குள் சிலர் அவரிகளிடந்தான் தொண்டு



படிப்பகம்

www.padippakam.com

செய்கிறவர்கள். ஆனதால் நாங்கள் ஞாயங்கேட்கப் போனால் எங்களை தடிகளாலும், மண்கட்டிகளாலும் அடிக்க வருகிறார்கள். கிராம கணக்கப்பிள்ளை, முன்சீப் இவர்களிடஞ் சொன்னாலும் அவர்கள் இரு தரத்தாரையும் பறையர்களுக்கு உதவியாயிருப்பதைக் கண்டால் உங்களையும் பல்வித வாதைகள் செய்வோமென்று பயமுறுத்துகிறார்கள். யாங்களோ கல்வியில்லாதவர்கள். எங்கள் பிள்ளைகள் வாசிக்கவும் பள்ளிக்கூடம் இவ்விடங் கிடையாது. அப்படியிருந்தாலும் பறையர்கள் படிக்கப்படாது. மாடுகளை காலையில் ஓட்டிக்கொண்டு போய் அவர்கள் மாட்டில் மடக்கிக்கொண்டு அதுகள் போடும் சாணத்தையும் எடுத்துக்கொள்கிறார்கள். காரணம் அந்த சாணத்தால் நாங்கள் முன்னுக்கு வந்துவிடுவோமென்னும் கெட்ட எண்ணமே தவிர மேய்காட்டில் எங்கள் மாடுகளும், ஆடுகளும் மேயக்கூடாதென்றும் காட்டில் காய்ந்தவிரகு பொருக்கி சமைக்கக் கூடாதென்றும், எங்களுக்கு ஏர்மாடுகள் இருக்கப்படாதென்றும், யாங்கள் சுத்த ஜலம் சாப்பிடக்கூடாதென்றும், வஸ்திரங்கள் சுத்தமாய் கட்டக் கூடாதென்றும், மாட்டிற்கு யாங்கள் பல் அறுக்கக்கூடாதென்றும் தடுத்து எங்கள் பயிறுகளுக்கும், ஆடுமாடுகளுக்கும் இடஞ்சல் செய்துவருகின்றார்கள். இந்தவூரில் யாங்கள் நஞ்சை, புஞ்சை மானிய தீர்வை ஏறக்குறைய 100 ரூபாய் சர்க்காருக்கு செலுத்திக்கொண்டு வருகிறோம்.

நாட்டுப்புரத்தில் நாங்கள் படும் கஷ்டங்களை கவனிப்பார் யாருங்காணோம். சென்னையில் மாத்திரம் சுதேசிகள் சுயராட்சியங் கேட்கிறார்களே இப்பேர்கொத்த கொடும்நெஞ்சமுடையவர்களுக்கு சுயராட்சியங் கொடுத்துவிட்டால் முற்காலத்தில் எங்களை கற்காணத்திலும், கழுவிலும் ஏற்றியதாய் பெரியபுராண முதல் தற்கால சாட்சியிருக்கிறது. அப்பகையையும் உடனே தேடுவார்கள் அப்படி வராமல் கவர்ண்மெண்டார் எங்களை சீர்தூக்குவார்களென்று கோருகிறோம்.

எங்களை வாதை செய்வதின் காரணம் நாங்கள் நாளுக்குநாள் சொந்தபூமியும் பயிரிடுஞ் சமுசாரிகளாகிவிடுகிறோம் என்றுதான். அன்றியும் சர்க்கார் தீர்வை கட்டப்போனால் அக்கிராரத்தை சுற்றிச்சுற்றி வரவேண்டியதாயிருக்கிறது. அப்படி அவதிப்பட்டு பணம் வைத்துக்கொண்டு முன்சீப் ஐயரைக்கண்டால் அவர் வாங்கிக் கொள்ளாமல் கௌண்டனென்னுஞ் சாதியான் மூலமாய் பெற்றுக் கொள்ளுவது வழக்கம். இதுவும் தவிர போஸ்ட் பெட்டியை அக்கிராரத்துக்குள் வைத்துக்கொண்டிருப்ப தால் எங்கள் அவசரக் கடிதங்கள் தாமதப்பட்டுப்போகிறது. இப்படி பிராமணாளிடத்தில் பலவித ஹிம்சைகளை அனுபவித்துவரும் எங்களை கருணைதங்கிய பிரிட்டீஷ் கவர்ன்மெண்டார் முன்னுக்குக் கொண்டுவரும்படியாயும், கனந்தங்கிய (தமிழன்) பத்திராதிபர் எங்கள் இடுக்கங்களை கவனித்து காருண்ணிய கவர்மெண்டாருக்கு தெரியப்படுத்தவும் இதனடியில் கையொப்பமிட்ட யாங்கள் தெரிவித்துக் கொண்டோம்.

எங்களுக்குள் வரதனென்பவன் இந்த எடஞ்சல்களைப் போய் கேட்டதின்பேரில் நாலுபார்ப்பார்கள் அவனைக் கல்லுகளாலும், தடிகளாலும் அடித்து உதிரமே வரச்செய்துவிட்டார்கள். அவன் அதிகாரிகளிடம் பிரையாது செய்யப்போனப்பின் ஒரு வாழைக் குலையை வெட்டி வந்து முன்சீப் வீட்டுத் திண்ணையின்பேரில் வைத்து இந்த வாழைக்குலையைத் திருடினான் அடித்தோமென்று பொய்யைச் சொல்லுகிறார்கள்.

இப்படியாக எங்களுக்கு நேரிட்டுள்ள கஷ்டங்களை இங்கிலீஷ் ராஜாங்கத்தோருக்குத் தெரிவிப்பதுடன் மாஜிஸ்டிரேட்டவர்களும் சரியாக விசாரித்து ஏழைகளைக் காப்பாற்றும்படிக் கோருகிறோம்.

ஓரத்தூர் சேரிவாசிகள்.
*- 2:33, சனவரி 27, 1909.*



படிப்பகம்

www.padippakam.com

# அழுக்கு விடியல்

- அபிமானி

அசதிய சொமந்த
சுப்பையனோட ஒடம்பு
கண்விழிக்கும்
வெள்ளனங்காட்டியே
சூரியன முந்திக்கிட்டு.

மாடசாமித் தேவன்கிட்ட
கடன்சொல்லிக் குடிச்ச
சாராயம்
கிறக்கம் தெளிஞ்சி
வலிய மட்டும்
வச்சிருக்கும்
தலைக்குள்ள.

நவச்சாரம் கூடிப்போன
அலுசியத்தச் சொல்லும் அது.

சாணிப் பொறுக்குக்கு மேலே
கைய மடக்கிப்
படுத்திருந்தவன் விலாவுல
ஊசிக் குத்திளதுகெணக்க
வாழ்க்கப் பள்ளங்கள்.

அவனுக்கு முன்னக்கூட்டியே
படுக்கய விட்டெழுந்து
ஓடசல் பாத்திரங்களோட
இருட்டக் கழுவுத
பொன்னம்மா
அவனின் பொஞ்சாதிக்காரி.

பரட்டத் தலப் படந்திருக்க
வூட்டு மூலயில
தூக்கத்தப்
போத்திக் கெடக்கும்
மக்கமாருங்க.

விடிஞ்சதே வேலசோலிச்
செய்யதாமின்னு
கஞ்சித் தண்ணிய
ஊத்திக்கிட்டு
ஓடிப்போவணும் அவனுக்கு
காடுகரைகளுக்கு.

தாமசமானா
முன்னுக்குப் பாஞ்சிவிழும்
மூக்கையா நாடான்.

காடுகரைகள்லதான்
அவிய முன்னுக்குக்
கண்விழிக்கும்
சூரியன்.

சாம்பல் பூத்த ஓலக் குடிலும்
சமரசமில்லாம அலையும்
நாய்களும்
ஓணான் பல்லிகளும்
சந்தோசமில்லாத வாழ்க்கயுந்தான்
பூர்வீகச் சொத்தின்னு
வெளியச் சொல்ல
வெக்கமில்ல சுப்பையனுக்கு.

குட்டக் குனிஞ்சி நின்னே
இன்னும்
வாழ்க்கயத் தேடுதாவ
வயலுக்குள்ள...

தாங்க நிமிந்துப் பாத்தா
வளஞ்சிப் போவும்
பண்ணையோட வாழ்க்கைன்னுத்
தெரியாமலே.



படிப்பகம்

www.padippakam.com

முகப்பு ஓவியம் : சந்ரு

உள் ஓவியங்கள் : சந்ரு, மணிவண்ணன், பெருவை உலகு

# குறிப்புகள் சில ......

- மேகவண்ணன்

நடிகர் விவேக் தன் ஆடைகள் அனைத்தையும் கழற்றிவிட்டு குமுதம் வார இதழ் பேட்டியில் அம்மணமாக நின்றது நாடறிந்த செய்தி. பின்னர் குமுதம் பேட்டியால் கொதிப் படைந்த சன் டி.வி. நஷ்ட ஈடு கேட்டிருப்பதும் அதை திரைப்பட நடிகர்கள் சங்கம் வழியாக (பதட்டத்துடன்தான்!) எதிர்கொள்ள விவேக் தயாராகி இருப்பதும் புதிய செய்திகள்.

பார்ப்பானும் நானே... தலித்தும் நானே...! என்றவாறு சிலர் கட்டமைக்கும் புதிய கதையாடல்களுக்கு இணையாக முற்போக்கும் நானே, சாதி காப்பானும் நானே என்று விவேக மானவர் ஒரு பிம்பத்தைக் கட்டமைக்கிறார். விவேகமானவர் பகுத்தறிவாளன் போர்வையில் சினிமாக்களில் சாடுவதெல்லாம் எளியவர்களின், தலித் மக்களின் வழிபாட்டுக்குரிய சிறுதெய்வங் களைத்தான் என்பதைக் கவனிக்க வேண்டும்.

பெரியாரைக் கொச்சைப்படுத்தவென்றே தமிழ் சினிமாவில் சில பார்ப்பான்களும், முக்குலத்தோர் பிரிவைச் சேர்ந்த சாதி வெறியர்களும் தாடியில்லாமலும், தாடியுடனும் திரிகிறார்கள்.

இதே முற்போக்குப் புடுங்கி விவேக் தான் நடிக்கும் திரைப்படங்களின் பூஜையில் நெற்றியில் திருநீறு மணக்க அவையடக்கமாக காட்சி தருவதை டி.வி.யில் சிலர் பார்த்திருக்கலாம்.

சின்னக் கலைவாணருக்கு எல்லாமே சின்னதாக இருக்குமோ? - மூளை உட்பட?

தினசரி அல்லது வார இதழ்களைப் பொறுத்தவரை பின்லேடன், முல்லா முகமது உமர், வீரப்பன், மாறன், ஆட்டோ சங்கர் எனத் தொடரும் வரிசையிலுள்ளவர்களை அவன், இவன் என்றுதான் அழைக்கிறார்கள். ஆனால் பிரேமானந்தா, டாக்டர் பிரகாஷ் போன்றோர் வசமாகச் சிக்கிய பிறகும்கூட வந்தார், போனார் என்று எழுதுகிறார்கள்.

தினமலர் "முஷாரப்புக்கு கொழுப்பு அடங்கவில்லை" என்று ஒரு தலைப்புச் செய்தி எழுதுகிறது. "எல்லையில் பாக். வாலாட்டம்" என்று எழுதுகிறது. சபரிமலை நிகழ்ச்சிகளை சன் நியூஸ்-க்குப் போட்டியாக வண்ணப் புகைப்படங் களில் புட்டுப் புட்டு வைக்கிறது. எல்லையில் இந்திய ராணுவத்தின் பாதுகாப்புக்குத் தோண்டி வைத்திருக்கிற பதுங்கு குழிகளைப் படமெடுத்துப் போட்டு 'பாக். ராணுவத்தினரின் பதுங்கு குழிகளை கண்டறிந்து இந்திய ராணுவம் அழித்தது' என்ற செய்தியுடன் தினமலர் வெளிவந்த அன்றைக்கு அதே பதுங்கு குழியில் ஒரு இந்திய ராணுவ வீரர் உட்கார்ந்து நாலாப்பக்கமும் விழி பிதுங்கிப் பார்க்கும் காட்சியை ஜெயா டி.வி.யில் காட்டினார்கள்.

என்ன புரிகிறது என்றால், ஏதாவது புகைப்படம் கிடைத்தால் போதும் அதற்கு கதை, திரைக்கதை, வசனம், இயக்கம் எல்லாம் செய்ய தினமலரில் ஒரு டீமே இருக்கிறதுபோல.

தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றப் பொதுக்குழுவிற்கு 9 புதிய உறுப்பினர்கள் தமிழக அரசால் நியமிக்கப்பட்டார்கள். அவர்கள்: டெல்லி கணேஷ், எம்.என். ராஜம், பிலிம் நியூஸ் ஆனந்தன், வீணை காயத்ரி, சுதா ரகுநாதன், சித்ரா விஸ்வேஸ்வரன், குமாரி சச்சு, வாணி ஜெயராம், மேண்டலின் ஸ்ரீனிவாஸ் ஆகியோர்.

இந்த 9 பேருக்குமான ஒற்றுமையை புதியகோடாங்கி வாசகர்கள் எளிதில் புரிந்து கொள்வீர்கள். தமிழ் நாட்டின் இயல், இசை, நாடகம் முதலான கலைகள் தொடர்ந்து தலித்துகள், சிறுபான்மையினரின் மீது மேற்கொள்ளப்படும் கட்டாய வெளியேற்றத்தின் தொடர்ச்சியிலேயே நிகழ்ந்துவருகின்றன. கூவாகம் திருவிழாவில் அலிகள் கூடிக் கும்மியடிக்கிறார்கள். வேறு யாரும் உள்ளே நுழையமுடியாது. அலிகள் மேல் எனக்கொன்றும் கோபம் இல்லையென்றாலும் தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் பார்ப்பனர்கள் கும்மியடிக்கும் இடம் என்று சொல்லலாமா?

●

Published, Printed and Owned by Audrey Jannet Joseph, Published from 2/206, Pandian Salai, Canalpuram Road, Neelangarai, Chennai - 41. Printed at Sri Lakshmi Printers, New No. 20, (Old No.7) Big Street, Anakaputhur-600 070. Editor : Audrey Jannet Joseph

படிப்பகம்

www.padippakam.com



Postal Regn. No. TN/Chief PMG 884/2001
RNI Regn. No. TNTAM/2001/4926

படிப்பகம்